ஒக்டோபர் - டிசம்பர் 2023
மலர்: 1 இதழ்: 3

# விழுமியம்

காலாண்டு சஞ்சிகை

யாழ். மாநகர சபை
01 JAN 202
தாபனப்பகுதி



## மன அழுத்த முகாமை
### –ஓர் இஸ்லாமிய கண்ணோட்டம்

## இலங்கையின் பொருளாதாரம்
### –நேற்று, இன்று, நாளை

## இறுதி மூச்சுக்கள் ஈமானிய மூச்சுக்களாக அமையட்டும்

QR code for online subscription

OP/NEWS/110/2023


விலை ரூபா. 200/-
வருட சந்தா ரூபா. 1000/-
(நான்கு பிரதிகள் - தபால் செலவு உட்பட)


Vizhumiam Quarterly
විළුමියම් ත්‍රෛමාසික


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ICT Primary Levels books for Local and International Schools


**(English Medium) Fully cover the National Curriculum Syllabus of Sri Lanka.**




## Why our Books?...

1. Very well analysed and designed by an expert teacher.
2. Very attractive and colour pages to encourage students study well.
3. Affordable price.
4. Un-interupted supply island-wide.

**ORDER ONLINE**

**www.ibh.lk**

**30%**
*Discount for Wholesale Purchase*
*T&C Apply*

**PUBLISHED BY:**
READMORE PUBLICATION
ReadMore Publication
0772 518 641

**DISTRIBUTE BY:**
IBH
ISLAMIC BOOK HOUSE
0757 400 800

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே...

# விழுமியம்

காலாண்டு சஞ்சிகை

**பிரதம ஆசிரியர்:**
அஷ்ஷெய்க்
எம்.எச்.எம். உஸைர் இஸ்லாஹி
**இணைப்பாளர்:**
எம்.எச்.எம். அஜ்மல்
**மலர்: 01 இதழ்: 03**
ஒக்டோபர் - டிசம்பர் 2023
விலை: 200.00
**தயாரிப்பு:**
இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி
**வெளியீடு:**
ஜஸ்ட் மீடியா பவுன்டேஷன்

இச்சஞ்சிகையில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவர்கள்.

07 கருணை
அஷ்ஷெய்க் அப்துர் ரஹ்மான்

12 A/L பெறுபேறுகள் வந்து விட்டன..
அஹ்மத் அஸ்ஹர்

13 இலங்கையின் பொருளாதார வளர்ச்சி
கலாநிதி M. கணேசமூர்த்தி

16 மஸ்ஜிதுகள் முன்மாதிரிமிக்க...
அஷ்ஷெய்க் எம்.டி.எம். றிஸ்வி

19 இறுதி மூச்சுக்கள் ஈமானிய மூச்சுக்களாகட்டும்
உஸ்தாத் எம்.யூ.எம். ரம்ஸி

24 நாம் எம்மை விசாரித்துக் கொள்வோம்!
அஷ்ஷெய்க் கியாஸ் முஹம்மது

28 சிறுவர் பகுதி
அஷ்ஷெய்க் நபீல்

35 மலேசிய அரசியல்
எம்.எல்.எம். தௌபீக்

38 மன அழுத்த முகாமை
கலாநிதி பைறோஸ் முஸ்தபா

41 சமூகங்களுக்கிடையில் சகவாழ்வு
கலாநிதி எம்.ஆர். பாதிமா அப்றா

50 மக்கள் வாக்காளர் என்ற நிலையிலிருந்து குடிமகன்...
ரொஹான் ஹெட்டியாரச்சி

54 டாக்டர் ரயீஸ் முஸ்தபா எழுதிய 'அத்தாட்சிகள்'
அல் - ஆலிமா டாக்டர் மரீனா தாஹா ரிபாய்

**Publishing and Distribution**
**Just Media Foundation**
77, Sri Vajiragnana Mawatha,
Colombo- 00900 Sri Lanka
Mob/WhatsApp: 076 530 8509
**Printed by:**
IPC Printing Press, Colombo
**Editorial Contact:**
**Sri Lanka Jama'athe Islami**
77, Sri Vajiragnana Mawatha,
Colombo- 00900 Sri Lanka
Tel: +94112687091
Fax: +94112686030
Email: jipublishers@gmail.com

ISSN: 978-624-5143-01-6
DOP/NEWS/110/2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதத்தின் தேடல் சமத்துவம், சகோதரத்துவம், கருத்து சுதந்திரம்

மனிதனில் மனிதத்தை காணுகின்ற ஒரு உயர்ந்த சிந்தனையை, பண்பாட்டை, விழுமியத்தை மனிதம் தேடுகின்றது. மனிதர்களை இன, மொழி, பிரதேச அடிப்படையில்கூறுபோடாதவித்தியா சமான கொள்கை, கோட்பாடுகள் உடையவர்களையும் மதிக்கும் அனைத்துப் பிரஜைகளினதும் அடிப்படை மனித உரிமைகளை உத்தரவாதப் படுத்தும் உயர்ந்த கோட்பாடுகளையும் சாசனங்களையும் அவற்றைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளையும் கூடவே அது தேடுகிறது.

மனித இன வரலாற்றில் மனிதர்களுக்கு மத்தியில் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கிய சிந்தனைகளும் கோட்பாடுகளும் மரபுகளும் மனித நாகரிகத்தை அசிங்கப்படுத்திய காரணிகளாகவே அது காணுகிறது.

பதவிகளை பெறுவதற்காகவும் மனித, பௌதீக,இயற்கைவளங்களைசுரண்டுவதற்காகவும் மனிதர்களுக்கு மத்தியில் இன, பிரதேச, மொழி, வர்க்க உணர்வுகளை கூர்மைப்படுத்தி அவர்களது சுய புத்தியை மழுங்கச் செய்து அவர்களை ஒருவருக்கு ஒருவர் எதிரியாக காட்சிப் படுத்தி, அவர்களை போதை நிலையில் வைத்திருக்கும் சுயநலம் மிக்க மனிதர்களை மனிதப் பரம்பரையின் துரோகிகளாகவே அது காண்கிறது.

ஒரு ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் தோற்றம் பெற்றதே மனித குலம். அவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். எனவே, அவர்கள் அனைவரும் சகோதரர்கள். தங்களுக்கு மத்தியில் பரஸ்பர நம்பிக்கையாளர்களாக உதவியாளர்களாக வாழவேண்டியவர்கள். அவர்களை பிறப்பின் அடிப்படையில் ஒருவருக்கு ஒருவர் எதிரிகளாக காட்டும் அனைத்து சிந்தனைகளும் மனித நாகரிகத்துக்கு எதிரானவைகள் ஆகும்.

மனிதர்களின் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் ஏற்றுக் கொணடு அவர்களின் பிறப்புரிமையாகிய தான் விரும்பும் கொள்கையை பின்பற்றும் கருத்துச் சுதந்திரத்தை அங்கீகரிக்கும் ஒரு சிந்தனையாலேயே மனித சமூகத்துக்கு உண்மையான அமைதியையும் வளமான வாழ்வையும் உத்தரவாதப்படுத்த முடியும்.

மனிதர்களது உடல், உள, ஆன்மீக தேவைகளை சரியாக புரிந்து அதனை நிறைவேற்றும் வழிகாட்டல் தத்துவங்களும் அதனை நடைமுறைப்படுத்தும் தலைமைகளுமே மனித சமூகத்தின் அடிப்படைத் தேவைகளாகும்.

தமது தேவைகளை நிறைவேற்றக் கூடியவர்களை இனங்கண்டு அவர்களை தமது பிரதிநிதிகளாக தெரிவு செய்து கொள்ளக் கூடியதான வழிமுறையாகவே ஜனநாயக பிரதிநிதித்துவ முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. என்றாலும், பல நாடுகளில் ஜனநாயக முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு 100 வருடங்களை எட்டயிருக்கின்ற நிலையிலும் மக்களின் அறியாமையையும் வறுமையையும் பயன்படுத்தி அவர்களை இன, மொழி, பிரதேச வெறியர்களாக்கிய சுயநல மிக்க தலைவர்களால் மக்களுக்கோ நாட்டுக்கோ விமோசனத்தை பெற்றுத் தர முடியாமல் போய்விட்டது.


எனவே, மனிதத்தை தேடும் மனிதர்கள் ஒன்றிணைந்து செயல்படுவதினூடாகவே மனித சகோதரத்துவம், சமத்துவம், கருத்து சுதந்திரம் போன்ற விழுமியங்களை பாதுகாத்து வளமிக்க வாழ்க்கையை உத்தரவாதப் படுத்த முடியும்.

**அஷ்ஷெய்க் எம்.எச்.எம். உஸைர் இஸ்லாஹி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல் ஹனீபிய்யதுஸ் ஸம்ஹா



## அல்லாஹ் விரும்புகின்ற மார்க்கம்



**உஸ்தாத் ஆர். ஹஜ்ஜுல் அக்பர்**
(முன்னாள் தலைவர், இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி)

"இஸ்லாம் இயற்கையின் மார்க்கம்" என்று அதன் சிறப்பம்சமொன்றை எமது அறிஞர்கள் கூறுவார்கள். இயற்கை அல்லாஹ்வுக்கு சொந்தமானது. மார்க்கமும் அல்லாஹ்வுக்கு சொந்தமானது. மனிதனும் அல்லாஹ்வுக்கு சொந்தமானவன். எனவே, இவற்றுள் ஒன்று மற்றொன்றோடு மோதுவதற்கு வழியில்லை என்பதே அதன் கருத்தாகும். அதாவது, இயல்பில் இவை அனைத்தும் இணக்கமாகவும் நெருக்கமாகவும் இருக்கின்றன. ஒன்று மற்றொன்றின் இயல்பை அனுசரித்துச் செல்லக் கூடியவையாகவும் இருக்கின்றன.

ஆக, மார்க்கம், மனிதன், இயற்கை என்பன ஒன்றோடொன்று உறவாடுகின்றன. ஒன்றினால் ஒன்று பயனடைகின்றது. ஒன்று மற்றொன்றுக்கு உதவியாக இருக்கின்றது. ஒன்றின் நோக்கத்தை மற்றொன்று அனுசரித்து நடக்கின்றது.

இவ்வாறு இயல்பில் இந்த மூன்றும் நெருக்கமாகவும் இணக்கமாகவும் இருந்தபோதிலும் கூட ஒரு சிலர் அந்த நெருக்கத்தையும் இணக்கத்தையும் தங்களது முன்மாதிரிகளால் வெளிக்காட்டத் தவறி விடுகின்றனர். இன்னும் சிலரோ ஒன்றோடொன்று மோதக் கூடியவை என்ற பிரமையை ஏற்படுத்துகிறார்கள். வேறு சிலர் ஒன்றோடு ஒன்றை மோதவைத்தும் விடுகிறார்கள்.

அதாவது, மார்க்கமும் மனிதனும் ஒன்றோடொன்று இணங்கிச் செல்லக் கூடியவை அல்ல. மாறாக, ஒன்று மற்றொன்றுக்கு எதிராகவே இருக்கின்றது என்ற பிரமையை அவர்கள் ஏற்படுத்துகின்றார்கள். உலகளவில் இஸ்லாம் எதிர்கொள்கின்ற பாரியதொரு நெருக்கடியாக இது காணப்படுகின்றது. இந்த நெருக்கடியின் தோற்றப்பாடு மேற்குலகில் ஒரு விதமாகவும் கிழக்குலகில் அதற்கு நேர் எதிரானதாகவும் இருக்கிறது. மேற்கு, மார்க்கத்தைப் புறக்கணித்து விட்டு மனிதனைத் தலையில் வைத்திருக்கின்றது. கிழக்கு, மனிதனைத் தூக்கியெறிந்து விட்டு மார்க்கத்தைத் தலையில் வைத்திருக்கின்றது. இரண்டு சாராரும் இந்த வகையில் மார்க்கத்தைக் கேலிக்கூத்தாக்குகின்ற வேலையையே செய்கின்றார்கள்.

நபித்தோழர்களில் சிலர் ஒரு பயணத்தில் இருக்கிறார்கள். அதன் போது கடமையான குளிப்பை நிறைவேற்ற வேண்டி ஏற்படுகின்றது. அவர்களுள் ஒருவர் நோயாளியாக இருக்கின்ற காரணத்தால் தயம்மும் செய்ய நினைக்கின்றார். அங்கிருந்தவர்கள் அவரை "குளித்தே ஆக வேண்டும்... அதுவே சரியானது" என்று வற்புறுத்துகின்றார்கள். அதன் விளைவாகக் குளிப்பை நிறைவேற்றியவர் நோய் கடுமையாகி மரணித்து விடுகின்றார்.

சம்பவத்தைச் செவிமெடுத்த நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அவர்கள் அவரைக் கொலை செய்து விட்டார்கள். அல்லாஹ்வும் அவர்களைக் கொலை செய்வானாக! அவர்கள் அறிந்தவர்களைக் கேட்டு முடிவெடுத்திருக்க வேண்டாமா?" (அபூதாவூத்)

இந்தச் சம்பவத்தில் நாம் கண்டறியக் கிடைக்கும் படிப்பினை யாதெனில், அவர்கள் மார்க்கத்தை செயல்படுத்துவதாகவே நினைத்தார்கள். எனினும், அது இயற்கையின் மார்க்கம். மனிதனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பான நிலைமைகளை அனுசரிக்கும் மார்க்கம். மனிதனது சூழல்களையும் பிரச்சினைகளையும் கருத்தில் கொள்ளும் மார்க்கம். சூழல்களைக் கருத்தில் கொண்டு பிரச்சினைகளுக்குப் பொருத்தமான தீர்வுகளை வழங்கும் மார்க்கம். அதன் மூலம் மனித வாழ்வைப் பாதுகாத்து அதன் பெறுமதியை உலகிற்குப் புரிய வைக்கும் மார்க்கம் என்பதையெல்லாம் அவர்கள் அறியாதிருந்தனர்.

அவர்கள் அறிந்திருந்ததெல்லாம் 'குளிப்பு கடமையாகி விட்டால் குளித்தே ஆக வேண்டும்' என்பதைத்தான். 'குளிப்பு கடமையாகினால் குளித்தே ஆக வேண்டும்' என்ற மார்க்கத்தை இடத்திற்கும் சூழலுக்கும் பிரச்சினைக்கும் சம்பந்தப்பட்ட ஆளுக்கும் பொருத்தமானதாக மாற்றும் ஞானத்தை அவர்கள் பெற்றிருக்கவில்லை. அதனால், மார்க்கத்தின் பெயரால் பயங்கரமானதொரு பாவத்தை அவர்கள் செய்தார்கள். 'இஸ்லாம் இயற்கையின் மார்க்கம்' என்ற தத்துவத்தை 'இஸ்லாம் குழப்பம் விளைவிக்கும் மார்க்கம்' என்று மாற்றினார்கள்.

இஸ்லாத்தை இயற்கையின் மார்க்கமாக உலகிற்கு அறிமுகம் செய்திருந்த நபிகளார் உயிரோடிருக்கும் போதே இந்த உருமாற்றத்தைச் செய்தவர்களை அண்ணலாரால் மன்னிக்க முடியுமா? "அல்லாஹ் அவர்களையும் கொலை செய்வானாக!" என்று கோபமாகப் பிரார்த்தித்தார்கள் நபிகளார் (ஸல்) அவர்கள்.

எந்தவொரு சிறிய விடயமாயினும் 'இயற்கையின் மார்க்கம்' என்ற புரிதல் கெட்டுவிடாமல் அதனைக் கையாள வேண்டும் என்பது நபிகளாரின் அவாவாக இருந்தது. அந்தப் புரிதலைத் தங்களது நடத்தைகளாலோ, வார்த்தைகளாலோ பழுதாக்க முனைந்தவர்களை நபி (ஸல்) அவர்கள் கண்டித்திருக்கின்றார்கள்; திருத்தியுமிருக்கின்றார்கள்.

நாட்டுப்புற அறபியொருவர் மஸ்ஜிதுன் நபவியில் சிறுநீர் கழித்த விடயம் யாவரும் அறிந்ததே. அதன்போது நபித்தோழர்கள் சிலர் அந்த நாட்டுப்புற அறபிக்கெதிராக சினந்தெழுந்தார்கள். அவர்களை அமைதிப்படுத்திய அண்ணலார் சொன்னார்கள்: "அவர் சிறுநீர் கழித்த இடத்தில் ஒரு வாளி நீரை ஊற்றி விடுங்கள். நீங்கள் மார்க்கத்தை இலகுபடுத்துபவர்களாக அனுப்பப்பட்டுள்ளீர்களே தவிர, சிரமமிக்கதாக அதனைக் காட்டுவதற்கு நீங்கள் அனுப்பப்படவில்லை."

இதிலிருந்து கிடைக்கும் புரிதல் மிகவும் தெளிவானது. மார்க்கத்தின் போதனைகள் மற்றும் நடைமுறைகள் இலேசானவை, இனியவை என்றே அனைவரும் விளங்கிக்கொள்ள வேண்டும். சிரமம் தருபவை, நடைமுறைச் சாத்தியமற்றவை என்று எவரும் விளங்கிவிடக் கூடாது.

நபிகளாரிடம் "எந்த மார்க்கம் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானது?" என்று வினவப்பட்டது. அதற்கு நபியவர்கள் கூறிய பதில் என்ன தெரியுமா? "அல் ஹனீபிய்யதுஸ் ஸம்ஹா" (முஸ்னத் அஹ்மத்) . குறித்த வினாவுக்கு இஸ்லாம் என்ற பதிலை நபிகளார் கூறாமல் மேலேயுள்ளவாறு இஸ்லாத்தின் விஷேட பண்பொன்றையே அவர்கள் வெளிச்சமிட்டுக் காட்டினார்கள். அந்தப் பண்பு என்ன? அது தான் அல் ஹனீபிய்யதுஸ் ஸம்ஹா ஆகும்.

'ஹனீபிய்யா' என்ற சொல்லின் பொருள் சார்பு நிலை எடுத்தல் என்பதாகும். 'ஸம்ஹா' என்பதன் பொருள் இலகுவானது, தாராளத்தன்மையுடையது என்பதாகும். 'அல் ஹனீபிய்யதுஸ் ஸம்ஹா' என்ற நபிகளாரின் வசனத்திற்கு எமது முன்னோர்கள் கொடுத்த விளக்கம் யாதெனில், "இலகுபடுத்தும் விதமாகவும் தாராளத் தன்மையைப் பிரதிபலிக்கும் விதமாகவும் உண்மையின் பக்கம் நிற்றல்." அவ்வாறு உண்மையின் பக்கம் நிற்றல்தான் அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான மார்க்கம் என்பதே, "சிறந்த மார்க்கம் எது?" என்ற வினாவுக்கு நபி (ஸல்) அவர்கள் கூறிய பதிலாகும். இதற்கு மாறாக, 'முரட்டுத்தனமாக உண்மையின் பக்கம் நிற்றல்' என்ற நிலைப்பாடும் இருக்கின்றது. அது நிச்சயம் அல்லாஹ்வுக்கு வெறுப்பான மார்க்கமாகவே இருக்கும்.

இஸ்லாத்தை விளங்கும்போதும் பிறருக்கு அதனை விளக்கும்போதும் அதனை அமுல்படுத்த முனையும்போதும் இஸ்லாத்தின் இந்த சிறப்பியல்பைப் புறக்கணிப்பவர்கள் விடயத்தில் மாநபி (ஸல்) அவர்கள் கடுமையாகவே நடந்திருக்கின்றார்கள். காரணம், அத்தகையவர்கள் இஸ்லாத்தின் பெயராலேயே இஸ்லாத்தின் நம்பகத்தன்மையையும் அதன் சிறப்பியல்புகளையும் சிதறச் செய்தார்கள்.

இத்தகைய பிழையான அணுகுமுறையால் இஸ்லாம் என்ற மார்க்கம் இரண்டு பாரிய நெருக்கடிகளைச் சந்திக்கின்றது.

1. முஸ்லிம்களாலேயே அந்த மார்க்கத்தைச் செயற்படுத்த முடியாது என்ற நிலை ஏற்படுகின்றது. இந்த அணுகுமுறையால் முஸ்லிம்கள் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கத்தின் கவர்ச்சியையும் காலத்திற்கும் சூழலுக்குமான அதன் பொருத்தப்பாட்டையும் காணத் தவறி விடுகின்றார்கள். மாறிவரும் உல கிற்கு முகம் கொடுக்க முடியாத இறுக்கமான, கடினமான மார்க்கமாகவும் அதனைப் பார்க் கின்றார்கள்.

2. முஸ்லிம்களே அவ்வாறென்றால் ஆதமுடைய ஏனைய மக்கள் அதனை எவ்வாறு பார்ப்பார் கள் என்பதைக் கூற வேண்டியதில்லை. அவர் கள் காலத்திற்கு மட்டுமல்ல, உலகிற்கே பொருத்தமற்றது என்ற தங்களது வாதத்தை அணுகுமுறை தவறிய முஸ்லிம்களின் உதார ணங்களை முன்வைத்து நிரூபிக்கின்றார்கள்.

இந்த இரண்டு நெருக்கடிகளையும் உருவாக்கு பவர்கள் யார்? வேறு யாருமல்ல, இஸ்லாத்தில் பற்றுக் கொண்ட, அதேவேளை 'அல் ஹனீபிய்ய துஸ் ஸம்ஹா' என்ற மார்க்கத்தின் சிறப்பியல்பை அறியாத எமது உடன்பிறப்புக்கள்தான்.

நடைமுறைச் சாத்தியமற்றதாக முஸ்லிம்களுக் கும் காலத்திற்குப் பொருத்தமற்றதாக உலகுக்கும் இஸ்லாத்தை சித்திரித்துக் காட்டும் பிழையான அணுகுமுறை எமது உலக சமூகத்திலிருந்து என்று களையப்படுமோ அன்றுதான் இஸ்லாத்தின் நல்ல நாள் ஆரம்பமாகின்றது.

உலகிலிருக்கின்ற இஸ்லாத்தின் எதிரிகளுக்கு இந்த வகையில் விருப்பமான மார்க்கம் எதுவாக இருக்கும்?

குழப்பங்களை உருவாக்குகின்ற... வேறுபாட்டு வேலிகளைத் தீவிரமாக்குகின்ற... சந்தேகங்களை யும் தப்பெண்ணங்களையும் விதைக்கின்ற... நம்ப கத்தன்மைக்கும் பரஸ்பர நட்புகளுக்கும் இடம் தராத ஒரு சிலரது தனிப்பட்ட வெறுப்புக்களையும் காழ்ப்புணர்வுகளையும் தீர்த்துக் கொள்ள உதவு கின்ற... மக்களை விரண்டோட வைக்கின்ற... கடுமை நிறைந்த மார்க்கத்தையல்லவா அவர்கள் விரும்புவார்கள். அல் ஹனீபிய்யதுஸ் ஸம்ஹா வையா அவர்கள் விரும்புவார்கள்?

'அல் ஹனீபிய்யதுஸ் ஸம்ஹா' எனும் அல்லாஹ் விரும்புகின்ற மார்க்கத்திற்கு இந்த அநீதியை இழைக்கும் அதிகாரத்தை அல்லாஹ் ஒருவருக்கும் வழங்கவில்லை. அல்லாஹ்வின் விருப்பத்திற்குரிய மார்க்கத்திற்கு அத்தகைய அநீதியை யாராவது இழைப்பார்களானால் அத்தகையவர்களை நபிக ளார் (ஸல்) அவர்கள் சபித்திருக்கின்றார்கள் என்பது

> **நடைமுறைச் சாத்தியமற்றதாக முஸ்லிம்களுக்கும் காலத்திற்குப் பொருத்தமற்றதாக உலகுக்கும் இஸ்லாத்தை சித்திரித்துக் காட்டும் பிழையான அணுகுமுறை எமது உலக சமூகத்திலிருந்து என்று களையப்படுமோ அன்றுதான் இஸ்லாத்தின் நல்ல நாள் ஆரம்பமாகின்றது.**

உணரப்பட வேண்டும்.

"ஹலகல் முதனத்திஊன்... ஹலகல் முதனத்தி ஊன்.... ஹலகல் முதனத்திஊன்" என்று மீண்டும் மீண்டும் மீண்டும் நபிகளார் சாபமிட்டது அத்தகையவர் களுக்கே.

இந்த வகையில் முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு கடமை இருக்கின்றது. 'அல் ஹனீபிய்யதுஸ் ஸம் ஹா' என்ற இஸ்லாத்தின் சிறப்பியல்பை முஸ்லிம் கள் ஆழ்ந்து கற்க வேண்டும். அதற்கு எதிரான அணுகுமுறைகள் சிறியளவில் காணப்பட்டாலும் அவற்றைக் களைவதில் அதிகூடிய கவனம் செலுத்த வேண்டும்.

'அல் ஹனீபிய்யதுஸ் ஸம்ஹா' என்ற சிறப்பி யல்பை வளர்த்தெடுப்பதற்குத் தடையாக அமை கின்ற முக்கியமானதொரு காரணியையும் இந்த இடத்தில் குறிப்பிட்டாக வேண்டும்.

மார்க்கம், ஒழுக்கம், கல்வி, சமூக சேவை, மக்கள் சேவை என்று எதை எடுத்துக் கொண்டாலும் அவற்றை அரசியலாக்க முனைவதுதான் அல்லாஹ் விரும்புகின்ற மார்க்கத்தைச் செயற்படுத்துவதற் குத் தடையாக இருக்கின்ற பிரதான காரணியாகும். தமது கட்சி மேலோங்கியிருக்க வேண்டும் என்ப தற்காக ஒவ்வொரு சாராரும் வைத்திருக்கும் இரக சிய நிகழ்ச்சி நிரல் மூலமே இந்த அரசியல் உருவா கிறது.

அதன்காரணமாக அநேகரிடம் இரண்டு நிகழ்ச்சி நிரல்கள் அமுலில் இருக்கின்றன. ஒன்று வெளிப்ப டையானது, நேர்மையானது. மற்றையது இரகசிய மானது, தந்திரங்களும் சூழ்ச்சிகளும் நிறைந்தது.

இவ்வாறு செயற்படுவோர் மார்க்கத்தை வளர்ப் பதற்காகச் சிரமப்படுகின்ற அதேநேரம் தங்களை அறியாமலேயே அதனை நடைமுறைச் சாத்தியமற் றதாகவும் மாற்றுகின்றார்கள். இது அல்லாஹ் விரும்புகின்ற மார்க்கத்திற்கு அவர்கள் செய்கின்ற நன்மையாக மாட்டாது. ❐



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விழுமியம்

வரட்சிக்குப் பின் அடைமழை போன்று வெளியீடுகள் வரண்டு போன இந்த நாட்களில் விழுமியம் சஞ்சிகையைக் காண்பதில் அதீத மகிழ்ச்சி.

விழுமியத்தின் ஆக்கங்கள் சிறப்பாக அமையப் பெற்றிருந்தன. குறிப்பாக, இலங்கையில் முஸ்லிம்களின் வரலாற்றை எடுத்துக்கூறும் கல்வெட்டுக்கள் பற்றிய கட்டுரை மிகவும் அறிவுபூர்வமாகவும் ஆழமான ஆய்வாகவும் இருந்தது. இத்தனை நாட்கள் செவிகளால் மாத்திரம் உணர்ந்த கல்வெட்டுக்களைப் புகைப்படங்கள் வாயிலாகக் கண்டதும் மிக்க மகிழ்ச்சி. அதேபோன்று, சகோதரர் ஆலிப் அலியின் கட்டுரை மிகவும் பயனுள்ளதாகவும் இருந்தது.

**-இன்ஹாம் இஸ்மாயீல்-**

காலம் எம்மை இலத்திரனியல் வாசிப்பின் பக்கம் நிர்ப்பந்தித்திருந்தாலும் தொட்டுணர்ந்து சுவையறிந்து மகிழ்வுற்று வாசித்திருப்பதற்காக ஒரு சஞ்சிகை மலர்ந்திருப்பது மகிழ்வினைத் தருகின்றது.

விழுமியம் அனைத்து வயதுப் பிரிவினரையும் கருத்திற்கொண்டு வடிவமைக் கப்பட்டிருக்கின்றது. பல்வேறுபட்ட சமூகப்பரி மாணங்களையும் இது தனது பேசுபொருளாகவும் கொண்டிருக்கிறது. அனைத்துத் தரப்பினரும் வாசித்து தெளிவு பெறமுடியுமான அழகிய நடையும் இதற்கு வாய்க்கப் பெற்றிருக்கின்றது.

தனி மனித சமூக வாழ்வை வளப்படுத்தி, அதனை அர்த்தமுள்ளதாக்கும் குணநலப் பண்பாகக் கருதப்படும் விழுமியம், எமது இல்லம்தோறும் வாழ்ந்து, உலகெங்கும் பரவட்டும்!

**-Zumairah M. Buhari- Akkaraippatru-**

வாசிப்புதான் எம்மை நிலைநிறுத்துகின்றது. வாசிப்பை மறந்ததால்தான் எங்களுடைய பண்பாடு, சமய ஒழுக்கங்கள், வாழ்வியல் பண்புகள் என அனைத்தையும் மறந்து விட்டிருக்கின்றோம். எழுத்து உயர்வாகக் காணப்பட்டால் அங்கு நாகரிகம் சிறப்பாகக் காணப்படுகின்றது என்பதுதான் அர்த்தம்.

சஞ்சிகை என்பது நாம் வாழும் காலத்தின் இருப்பை, இலக்கியத்தை, வாழ்வியலை உணர்த்தும் சாதனமாகும்.

'விழுமியம்' என்ற தலைப்பே காத்திரமான, விசாலித்த சொல்லாடலாக உள்ளது. அது இஸ்லாமிய கருத்துக்களை மாத்திரம் தாங்கி நிற்கவில்லை. மத நல்லிணக்கம், கருத்து ஒருமைப்பாடு போன்றவற்றைக் காணலாம். இரு நூற்றாண்டுகளாக ஒடுக்கப்படும் ஒரு சமூகத்தின் வாழ்வியலை அலசும் அடையாளமாக உள்ள அட்டைப்படமே இச்சஞ்சிகையின் பரந்தநோக்கிற்குசிறந்தசான்று. "போதைப்பொருளின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுபடுவது என்பது இயலாத காரியம் அல்ல" என்ற நேர்காணல் நமக்கு நம்பிக்கை தருகின்றது. இருபத்தோராம் நூற்றாண்டின் கல்விப் பாதை பற்றிய றிஸ்வி அவர்களின் ஆக்கமும் விழிப்புணர்வைத் தருகின்றது.

வாசிப்பை நேசிப்பவர்களுக்கு இந்த சஞ்சிகை சென்றடைய வேண்டும். அதில்தான் எமது வெற்றி தங்கியுள்ளது.

**–நாகராஜா, ஓய்வுநிலை அதிபர்– புத்தளம்**

விழுமியம் சஞ்சிகையின் இரண்டாவது இதழ் வாசிக்கக் கிடைத்தது. அல்ஹம்துலில்லாஹ். இன்றைய காலத்திற்குத் தேவையான குடும்பவியல் கருத்துக்கள் எமக்கு அழகிய படிப்பினைகளாக அமைந்திருப்பதைக் கண்டு அதிக மகிழ்ச்சி ஏற்பட்டது. அஷ்ஷெய்க் கமால் (இஸ்லாஹி) அவர்களின் குழந்தை வளர்ப்பு பற்றிய கட்டுரையில் அதிக படிப்பினைகள் காத்திருந்தன.

இன்றைய நாட்களில் சமூகத்தின் அத்திவாரமான 'குடும்பம்' என்ற செங்கல் பல முனைகளிலும் தகர்க்கப்படுகின்றது. பொருளாதார நெருக்கடிகளும் கலாசார தாக்கங்களும் அதன் ஆணிவேரில் தீ வைக்கின்றன. இந்த நிலையில் குடும்பவியல் பற்றி தொடர் வழிகாட்டல்களை எதிர்பார்க்கின்றோம்.

அதேபோன்று இளைஞர்களுக்குப் பொருத்தமான ஆக்கங்களையும் எதிர்பார்க்கின்றோம்.

**அஷ்பாக் ஆதில்– ருஹுனு பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருணை



அஷ்ஷெய்க் அப்துர் ரஹ்மான் (நளீமி) M.A.
(அதிபர், தன்வீர் அகடமி, திஹாரிய)

## CORE VALUES

**இலங்கை முஸ்லிம் சமூகம் இஸ்லாம் கற்றுத் தரும் விழுமியங்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்ற பின்னணியில் 'அறிவின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட சமூகம்' எனும் எண்ணக்கரு முதலாவது இதழிலும் 'இறை உணர்வால் ஆளப்படும் சமூகம்' எனும் எண்ணக்கரு இரண்டாவது இதழிலும் கருத்தாடப்பட்டன. அதன் தொடரில் 'கருணை' எனும் எண்ணக்கரு இவ்விதழில் சமூகத்தின் கருத்தாடலுக்காக முன்வைக்கப்படுகிறது.**

### அறிமுகம்

அன்பு, கருணை என்பன இஸ்லாமிய அடிப் படைப் பண்பாட்டுப் பெறுமானங்களாகும். அரபு மொழியில் ரஹ்மத் என்ற சொல் இதனைக் குறிக்க உபயோகிக்கப்படுகின்றது. மேலும், ஒரு மனிதனின் உள்ளத்தில் அடுத்தவர்கள் குறித்து இருக்கின்ற இரக்க உணர்வும் அதன் விளைவாக அவர்களுக்கு நன்மைகள் செய்ய வேண்டும் என்ற அக்கறையும் தீங்குகள் ஏற்பட்டு விடக் கூடாது என்ற ஈடுபாட்டையும் இச்சொல் குறிக்கிறது.

அறிஞர் ஹபன்னகதுல் மைதானி அவர்கள் "இன்னொருவர் குறித்து உள்ளத்தில் இருக்கின்ற இரக்க உணர்வும் அவருக்குத் தீங்குகள், கெடுதிகள் ஏற்படுகின்றபோது உருவாகின்ற கவலையும் அவருக்கு நலவுகள், நன்மைகள் நடக்கின்றபோது உருவாகின்ற சந்தோஷமும் ரஹ்மத் என்ற சொல்லின் ஊடாக நாடப்படுகிறது" என விளக்குகின்றார்கள். இமாம் இப்னுல் கையிம் அவர்கள் "ரஹ்மத் என்பது இன்னொருவரைத் தீங்குகள், கெடுதிகளை விட்டும் பாதுகாப்பதும் அவர்களுக்கு நன்மைகளையும் நலன்களையும் கிடைக்கச் செய்வதையும் குறிக்கிறது" என்று கூறுகிறார்கள்.

எனவே, கருணை என்பது அடுத்தவர்களுக்கு நன்மைகளை, நலவுகளைச் செய்ய வேண்டும் என்ற விருப்பத்தையும் அதற்கான முயற்சியையும் குறிப்பது போல அவர்களுக்குத் தீங்குகள், கெடுதிகள் ஏற்பட்டு விடக் கூடாது என்ற பயத்தையும் அதற்கான உழைப்புகளையும் குறிக்கிறது.

### மனித சமூகத்தின் சீரான இயக்கத்திற்கு கருணையின் அவசியம்

மேற்குறிப்பிட்ட விளக்கங்களின் பின்னணியில் இருந்து நோக்குகின்றபோது கருணை என்ற பண்பாட்டுப் பெறுமானமே மனிதர்களுக்கிடையிலான தொடர்பாடலின் அடிப்படைப் பண்பாக இருக்க வேண்டும். மனிதர்களுக்கிடையில் காணப்படுகின்ற இனம், மதம், நிறம், பிரதேசம் போன்ற எல்லா வகையான வேறுபாடுகளுக்கும் அப்பால் ஒவ்வொரு மனிதனும் அடுத்த மனிதன் குறித்த இரக்க உணர்வு உடையவனாகவும் அவனுக்கு நன்மைகள் செய்ய வேண்டும் என்ற விருப்பமும் தீங்குகளில் இருந்து பாதுகாக்க வேண்டும் என்ற அக்கறையும் கொண்டவனாக இருப்பதே மனிதர்களுக்கிடையிலான தொடர்பாடலின் அடிப்படையாகும்.

அத்தோடு கருணை என்ற இப்பண்புப் பெறுமானம் மனிதத் தொடர்பாடலில் இன்னும் பல பண்புகளுக்கான மூல ஊற்றாக அமைகின்றது. மனித சகோதரத்துவம், பரஸ்பர கூட்டுறவு, ஒத்துழைத்தல், உதவி செய்தல், உபதேசம் செய்தல், கலந்துரையாடுதல், நன்மைகளை ஏவுதல், தீமைகளைத் தடுத்தல் போன்ற மனித சமூகம் கடைப்பிடிக்க வேண்டிய மிக உயர்ந்த பெறுமானங்கள் அனைத்திற்கும் அடிப்படையாகக் கருணை என்ற பெறுமானமே காணப்படுகின்றது.

மேலும், பூமியில் மனித வாழ்வு வளம் மிக்கதாகவும் பரஸ்பர கண்ணியமும் பாதுகாப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதாகவும் அமைதியும் ஸ்திரத்தன்மையும் உடையதாகவும் இருப்பதற்கு மனிதர்களுக்கிடையில் கருணை என்ற பண்புப் பெறுமானம் கடைப்பிடிக்கப்படுவது இன்றியமையாத நிபந்தனையாகும்.

கருணை இல்லாத மனித சமூகத்தில் மனித கண்ணியம் பாதுகாக்கப்படுவதையோ நீதி பெற்றுக் கொடுக்கப்படுவதையோ எதிர்பார்க்க முடியாது.

**இஸ்லாமியப் பார்வையில் கருணை**

மேற்குறிப்பிட்ட வகையில் மனித வாழ்வின் சுபிட்சத்துக்கும் ஈடேற்றத்திற்கும் அவசியமான கருணை எனும் பண்பாட்டுப் பெறுமானத்திற்கு இஸ்லாம் தன்னிகரற்ற முக்கியத்துவத்தை வழங்கி இருக்கின்றது.

(i) **இறைவனின் பண்பாக கருணை...**

இஸ்லாம் கருணை என்ற பண்பை மனிதனைப் படைத்த இறைவனின் பண்பாக அறிமுகம் செய்கின்றது. இறைவன் தனது படைப்புக்களோடு கடைப்பிடிக்கின்ற அடிப்படைப் பண்பு கருணை ஆகும். அல்குர்ஆனில் 200 இற்கும் அதிகமான இடங்களில் கருணை என்பதைத் தனது பண்பாக அல்லாஹ் குறிப்பிடுகின்றான். அதற்கு மேல் அதிகமாக சூரத்துல் தவ்பாவை தவிர ஏனைய அனைத்து சூராக்களையும் ஆரம்பிக்கின்றபோதும் الرحيم, الرحمن என்ற அன்பையும் கருணையையும் குறிக்கின்ற இறைத் திருநாமங்கள் குறிப்பிடப்பட்டிருப்பதும் அல்லாஹ் தனது இப்பண்பிற்குக் கொடுத்திருக்கின்ற முக்கியத்துவத்தினை உணர்த்துகின்றது.

"உங்களது இரட்சகன் கருணையைத் தன் மீது விதியாக்கிக் கொண்டிருக்கிறான்" (அன்பும்: 54) என அல்லாஹ் அல்குர்ஆனில் குறிப்பிடுகின்றான். "மேலும் எனது கருணை அனைத்தையும் உள்ளடக்கி விசாலமாக இருக்கின்றது" (அல்அஃராஆப்: 156) என்றும் அல்லாஹ் தனது கருணை குறித்து அல்குர்ஆனில் விளக்குகின்றான். அல்குர்ஆனிற்கு மேலதிகமாக அல்லாஹ்வின் கருணை என்ற அன்பினை இறைத் தூதரின் ஹதீஸ்கள் ஏராளமாக விளக்குகின்றன. "நிச்சயமாக அல்லாஹ் படைத்தல் செயற்பாட்டை முடித்துக் கொண்டபோது தனது அர்ஷின் மீது எனது கருணை எனது கோபத்தை முந்தி விட்டது என்று எழுதினான்" (புகாரி) என இறைத் தூதர் அவர்கள் அல்லாஹ்வின் கருணை குறித்து விளக்கினார்கள்.

(ii) **இறைத் தூதரின் பண்பாக கருணை...**

அல்லாஹ் தன்னைக் கருணையாளனாக அறிமுகப்படுத்தியது போன்றே தனது தூதரையும் கருணையின் அடையாளமாகக் குறிப்பிடுகின்றான். "நபியே உங்களை நாங்கள் அகிலத்தாருக்கான கருணையாகவே அனுப்பி இருக்கிறோம்"
(அல் அன்பியா: 107).

மேலும், இறைத் தூதரின் பண்புகளைக் குறித்து அல்லாஹ் விளக்குகின்றபோது "உங்களில் இருந்தே உங்களிடம் ஒரு தூதர் வந்திருக்கின்றார். நீங்கள் கஷ்டப்படும்போது அவர் சிரமப்படுகின்றார். அவர் உங்கள் மீது அதீத அக்கறை உள்ளவர். முஃமின்களோடு அன்பும் கருணையும் உள்ளவர்" (அத்தவ்பா: 128) எனக் குறிப்பிடுகின்றான்.

அல்லாஹ்வின் வர்ணனைக்கேற்பவே இறைத் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கருணையின் வடிவமாகத் திகழ்ந்தார்கள். அவர்களின் செயற்பாடுகள், தொடர்பாடல்கள் அனைத்தும் கருணையின் வித்தியாசமான வெளிப்பாடுகளாகவும் பல்வேறுபட்ட பிரயோக வடிவங்களாகவும் அமைந்திருந்தன. அறிஞர் இப்னு ஆஷூர் அவர்கள் இறைத் தூதரின் கருணை பற்றி விளக்குகின்றபோது "இறைத் தூதரின் கருணைப் பண்பு இரண்டு வடிவங்களில் வெளிப்படுகிறது. முதல் வடிவம் அவரின் பண்பாடுகள் ஆகும். இரண்டாவது வடிவம் அவர் மனிதர்களுக்கு முன்வைத்த சட்டங்களாகும். அவர் சொன்ன சட்டங்கள், தீர்ப்புகள் அனைத்தும் கருணை எனும் இலக்கை நோக்கியே காணப்பட்டன" என்று விளக்குகின்றார்.

(iii) **ஷரீஅத்தின் இலக்காக கருணை...**

அல்லாஹ்தனது பண்பாகக்கருணையை ஆக்கிக் கொண்டது போன்று, தனது தூதரின் அடிப்படைப் பெறுமானமாகக் கருணையை விதியாக்கியது போன்று, அவனது ஷரீஅத்தின் முதல் தர இலக்காகவும் கருணையை ஆக்கினான். அதாவது, இறை சட்டங்கள் அனைத்தும் மனிதர்களுக்குக் கருணையைக் கொண்டு போய்ச் சேர்ப்பதை இலக்காகக் கொண்டிருக்கின்றன. அல்லாஹ் தனது வழிகாட்டல்களின் இயல்பைக் கூறுகின்றபோது "அல்லாஹ் உங்களுக்கு இலேசானதை விரும்புகிறான். உங்களுக்கு அவன் கஷ்டத்தை விரும்பவில்லை" என்று குறிப்பிடுகிறான். இன்னுமோர் இடத்தில் "அல்லாஹ் மார்க்கத்தில் உங்கள் மீது சங்கடங்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணிக்கவில்லை"
(அல்ஹஜ்: 78) எனவும் குறிப்பிடுகிறான்.

(iv) **இறைவிசுவாசியின் கடமையாக கருணை...**

அல்லாஹ் தனது பண்பாகக் கருணையை ஆக்கிக் கொண்டான். தனது தூதரின் அடிப்படைப் பெறுமானமாக கருணையை விதியாக்கினான். அவனது ஷரீஅத்தின் பிரதான இலக்காக மனிதர்களுக்குக் கருணையாக அமைவதை ஆக்கிக் கொண்டான். விடயம் இவற்றோடு முடிந்து விடவில்லை. இந்த இறைவழிகாட்டலைப் பின்பற்றுபவர்களிடம் இப்பண்பு இருக்க வேண்டும் என்று அல்லாஹ் விரும்புகிறான். அல்குர்ஆன் பல்வேறு கோணங்களில் கருணை என்ற பண்பை இறைவிசுவாசிகள் கடைப்பிடிப்பதை வலியுறுத்துகின்றது. பெற்றோருடன் கருணையோடு நடந்து கொள்ளுமாறும் அவர்களுக்குக் கருணை காட்டும்படி இறைவனிடம் பிரார்த்திக்குமாறும் அல்குர்ஆன் வழிகாட்டுகிறது (அல்இஸ்ரா: 24). மேலும், முஃமின்கள் தங்களுக்கு மத்தியில் கருணை உள்ளவர்களாக நடந்து கொள்வார்கள் என்று குர்ஆன் விளக்குகிறது. அத்தோடு, முஃமின்கள் தங்களுக்கு மத்தியில் பொறுமையையும் கருணையையும் பரஸ்பரம் உபதேசித்துக் கொள்ளும் பண்புடையவர்கள் எனவும் குர்ஆன் குறிப்பிடுகிறது (அல்பலத்: 17).

சக படைப்புக்களோடு கருணைப் பண்போடு நடந்து கொள்வதுதான் இறைவனின் கருணையைப் பெற்றுக் கொள்வதற்கான வழி என்பது இஸ்லாத்தின் நிலைப்பாடாகும். பூமியில் தன்னோடு இருப்பவர்களுக்குக் கருணை காட்டாதவர்களுடன் வானத்தில் இருக்கின்ற இறைவன் கருணையோடு நடந்து கொள்ள மாட்டான். "கருணையாளர்களுக்கே அல்லாஹ் கருணை காட்டுகிறான். எனவே, பூமியில் இருப்பவர்களுக்குக் கருணை காட்டுங்கள். வானத்தில் இருப்பவன் உங்களுக்குக் கருணை காட்டுவான்" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் குறிப்பிட்டார்கள். "மனிதர்களுடன் கருணையோடு நடந்து கொள்ளாதவர்களுடன் அல்லாஹ் கருணையோடு நடந்து கொள்ள மாட்டான்" எனவும் இறைத் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த ஹதீஸ்கள் மனிதர்களுடன் கருணையோடு நடந்து கொள்வதென்பது இறைவனின் கருணையை ஒரு மனிதன் பெற்றுக் கொள்வதற்கான நிபந்தனையாக முன்வைக்கின்றன.


அன்பு, கருணை என்பவற்றினால் முஸ்லிம் சமூகம் பிணைக்கப்பட வேண்டும் என்று இஸ்லாம் விரும்புகிறது. இறைத் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் முஸ்லிம் சமூகத்தின் பிணைப்பு எப்படி அமைய வேண்டும் என்று உதாரணம் கூறுகின்றபோது "இறைவிசுவாசிகளின் பரஸ்பர அன்பிற்கும் பரஸ்பரம் கருணை காட்டுவதற்குமான உதாரணம் ஓர் உடம்பைப் போன்றதாகும். உடம்பின் ஓர் அங்கம் நோய்வாய்ப்பட்டால் அதன் ஏனைய உறுப்புக்கள் காய்ச்சல் ஏற்பட்டு விழித்திருந்து துன்புறுவது போன்றதாகும்" என்று விளக்கினார்கள்.

இறைவிசுவாசிகள் கருணையோடு நடந்து கொள்ள வேண்டியது முஸ்லிம்களோடு மட்டுமல்ல. மாற்றமாக, முழு மனித சமூகத்தோடும், அதற்கும் அப்பால் எல்லாப் படைப்பினங்களோடும் என்று இறைத் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் விளக்கினார்கள். "இறைவன் மீது ஆணையாக! நீங்கள் பரஸ்பரம் கருணை காட்டாத வரைக்கும் சுவனம் நுழைய மாட்டீர்கள்" என்று இறைத் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். "யா ரசூலல்லாஹ்! நாங்கள் ஒவ்வொருவரும் கருணை உள்ளவர்களாகத்தான் இருக்கிறோம்" என்று பதில் கூறிய போது "நீங்கள் உங்களில் ஒருவருக்குக் கருணை காட்டுவதை நான் இங்கு நாடவில்லை. மாற்றமாக பொதுவான கருணை, அனைத்துப் படைப்புக்கள் மீதும் காட்டும் கருணை என்பதை நாடுகிறேன்" என்று இறைத் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பதிலளித்தார்கள். மேற்குறித்த ஹதீஸை விளக்குகின்ற அறிஞர்கள் "ஒரு மனிதன் தன்னோடு இருப்பவர்களுக்குக் கருணை காட்டுவதை மட்டும் இஸ்லாம் எதிர்பார்க்கவில்லை; மாற்றமாக, எல்லா மனிதர்களோடும் அப்பண்பை அவன் கடைப்பிடிக்க வேண்டும்; அதற்கும் அப்பால் பூமியில் வாழுகின்ற ஏனைய அனைத்து ஜீவராசிகளோடும் மனிதன் இப்பண்போடு நடந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கிறது." என்கின்றனர்.

ஒரு பூனையைத் துன்புறுத்திய பெண்மணி மறுமையில் நரகம் போவதாகவும், ஒரு நாய்க்கு நீர் அருந்த உதவிய மனிதன் சொர்க்கவாசியானதாகவும் இறைத் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த உண்மையை விளக்கிக் காட்டினார்கள். 53ஆம் பக்கம் பார்க்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஸித்தீக்கா பின்ந் ஸித்தீக்

## ஒரு பன்முகம்

இஸ்லாமிய வரலாற்றில் ஸஹாபாக்கள் கால அறிவுப் பாரம்பரியத்துக்குத் தனிச்சிறப்புண்டு. ஸஹாபாக்கள் மட்டுமன்றி ஸஹாபாப் பெண்களும் இத்துறையில் மகத்தான பங்களிப்புக்களை வழங்கி யுள்ளனர். பல ஸஹாபாப் பெண்மணிகள் ஹதீஸ் அறிவிப்பாளர்களாக ஹதீஸ்களுக்கு விளக்கம் சொல்பவர்களாகத் திகழ்ந்துள்ளனர். அந்த வரிசை யில் குறிப்பிடத்தக்க ஓர் இடத்தில் வைத்துக் கணிப் பிடப்படுபவர் உம்முல் முஃமினீன் ஆஇஷா பின்ந் அபூபக்கர் (ரழி) அவர்கள். ரஸூலுல்லாஹ் வின் பாசறையில் அவர்களின் அன்புக்குரிய மாண வியாய் மிக நெருக்கமாக வாழ்ந்து நபிகளின் சொல், செயல் மற்றும் பண்புகளை உன்னிப்பாக அவதா னித்து அவற்றை முஸ்லிம் உம்மத்தின் பயன்பாட் டுக்காக முன்வைத்த பெருமைக்குரிய ஆஇஷா (ரழி) அவர்கள், ஸஹாபாப் பெண்மணிகள் அன்றா டப் பிரச்சினைகளின் போது மட்டுமன்றி ஆண் ஸஹாபாக்கள் குடும்ப மற்றும் வாழ்வியல் பிரச் சினைகளுக்கும் ஆலோசனை வழங்கக் கூடிய நிலையில் இருந்தமையை அவர்களின் திறமையை, அவரது கல்விப் பணிகளை ஆராயும் போது அறிந்து கொள்ளலாம். ஒரு தனிப் பெண் ஆளுமை என்று சொல்வதை விட ஒரு தனி நபர் கல்வி நிறுவனமாக அவர் செயற்பட்டார் என்று கூறுவது முற்றிலும் பொருந்தும்.

அத்தகைய ஓர் அறிவுப் புலமை வாய்ந்த பெண் ஆளுமையை பல்வேறு கோணத்தில் ஆய்வுக்குட் படுத்தும் ஒரு முயற்சியை புத்தளம் இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரியின் மாணவிகள் குழு வொன்று செய்து முடித்துள்ளது. "ஸித்தீக்கா பின்ந் ஸித்தீக் ஒரு பன்முகம்" என்ற மகுடத்தில் அந்த ஆய்வுகள் இப்போது ஓர் அழகிய நூலாக எமது கரம் கிட்டியுள்ளது.

உஸ்தாத் மின்ஹாஜ் இஸ்லாஹியின் பதிப்புரை யோடும் ஸமீரா அப்துல் ஹலீம் (இஸ்லாஹி) அவர் களின் அணிந்துரையோடும் பின்த் முஹ்ஸின் இஸ்லாஹியின் முன்னுரையோடும் வெளிவந்துள்ள இந்நூல் 228 பக்கங்களில் எட்டு விரிவான கட்டுரை களையும் தாங்கி வந்துள்ளது. இதன் தொகுப் பாசிரியர்களாக ஹனான் அல் முகத்தஸா, முனீரா ஸலாஹுதீன், முஸைனா முஹ்சின், ரிஸ்மினா ராஸிக், ரஸ்மியா ஹஸன் ஆகிய இஸ்லாஹிய்யா ஆளுமைகள் கருமமாற்றியுள்ளனர்.

முழுக்கவே இலங்கையின் ஆலிமாக்களின் விரி வான ஆய்வுக் கட்டுரைகளுடன் வெளிவந்துள்ள இவ்வாக்கத்தில் புத்தளம் இஸ்லாஹியாவின் பட்ட தாரிகளான ரிஸ்மினா ராஸிக், ஸித்தீக்கா பின் ஸித் தீக் ஓர் பன்முகம் என்ற தலைப்பிலும் முஸைனா முஹ்சின் முன்னோடிகளின் முன்மாதிரி மற்றும் அன்னை ஆஇஷாவின் வாழ்வும் வஹியும் வஹியிற் காக அவரது வாழ்வும் என்ற தலைப்புக்களிலும், ரிஸ்மினா ராஸிக் குடும்ப வாழ்வில் அன்னை ஆஇஷா என்ற மகுடத்திலும் முனீரா ஸலாஹுதீன் கற்பில் சிறு களங்கம் ஒரு வரலாற்றுப் பார்வை என்ற பொருளிலும் ரஸ்மியா ஹஸன் பிக்ஹ் துறையில் அன்னை ஆஇஷா என்ற பரப்பிலும் ஹனான் அல் முகத்தஸா "ஜமல்" ஒரு நோக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற மகுடத்திலும் முஸைனா முஹ்ஸின் ஷீஆ இயக்கத்தின் குற்றவாளிக் கூண்டில் அன்னை ஆஇஷா (ரழி) என்ற தலைப்பிலும் விரிவான கட்டுரைகளை எழுதியுள்ளனர். பின் அட்டையில் இந்நூலுக்கு ஓர் அறிமுகக் குறிப்பை வழங்கியுள்ள அதிபர் அஷ்ஷெய்க் எம்.எச்.எம். முனீர் (முஹம் மதி) பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

அன்னை ஆஇஷா (ரழி) அவர்கள் ஓர் ஈமானியப் பெறுமானம்; முஸ்லிம்களின் செயற்களத்தில் எப்போதும் ஒளிர்ந்துகொண்டிருக்கும் ஒரு தாரகை; அஸ்ஸுன்னா நபவியாவின் மொழிபெயர்ப்பு; கிலாபதுர் ராஷிதாவிலும் உமையா கிலாபத்திலும் அறிவுலகையும் நிர்வாகக் களத்தையும் நெறிப்படுத் திய வழிகாட்டியாக (Mentor) அவர்களைக் காண் கிறேன். மேற்படி உண்மையை நாம் இந்த நூலை முழுமையாக வாசித்தால் புரிந்து கொள்ளலாம்.

உஸ்தாத் எச். எம். மின்ஹாஜ் நூலின் முன்னுரை யில் ஆளுமையின் சில கூறுகளைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். அறிவு மேதையாக விளங்கிய ஆஇஷாவின் இதயம் என்ற வெள்ளைத் தாளில் வெகுளித்தனம் அப்பிக் கொண்டிருந்ததை "பிசைந்து வைத்திருந்த மாவை ஆடு வந்து சாப் பிடும் போது அதனை விரட்ட மாட்டார்கள் ஆஇஷா" என்ற அவரின் தோழி பரீராவின் பரிந் துரை பதிவு செய்துள்ளது.

இது போன்ற துல்லியமான, ஆளுமைப் பண்புக ளில் ஆழமான வாசிப்புக்களை இஸ்லாஹிய்யா மாணவிகள் காட்சிப்படுத்தியுள்ளமையை இந்நூ லின் விரிவுப் பக்கங்களில் பரவலாகக் காணலாம். இந்த நூலின் முன்னுரையே ஒரு விறுவிறுப்பான சிறுகதை போலுள்ளது. கண்ணை எடுக்காமல் ஒரே மூச்சில் வாசித்து முடிக்கத் தோன்றுகின்றது. அன்னை ஆஇஷா என்ற அறிவுப் பெருங் கடலின், பண்பாட்டுப் பாசறையின் முத்துக்கள் இந்த நூலின் அனைத்துப் பக்கங்களிலும் போல் தூவிக் கிடக் கின்றன.

அன்னையின் புத்திக் கூர்மையைப் பறைசாற்றும் பல நிகழ்வுகள் நூலில் குவிந்து கிடக்கின்றன. அபூ தாவூத் ஹதீஸ் தொகுப்பில் வருகின்ற (4284) ஒரு சம்பவம் நூலின் முதலாவது கட்டுரையை அலங் கரிக்கின்றது. நபி (ஸல்) அவர்கள் போரில் இருந்து திரும்பி வந்தார்கள். அப்போது காற்று வீசிக் கொண்டிருந்தமையால் அலுமாரியின் திரை விலகி அதிலுள்ள பொருட்கள் தெரிந்தன. அதில் நான்கு விளையாட்டுப் பொம்மைகளும் இருந்தன. "இவை என்ன? என்று நபிகள் கேட்டனர். "இவை நான் விளையாடும் பொம்மைகள்" எனப் பதில் கூறினார். அவற்றின் நடுவே இரண்டு இறக்கைகள் கொண்டதும் மரத்தினால் செய்யப்பட்டதுமான ஒரு குதிரையைக் கண்டார்கள். "நடுவில் இருப்பது என்ன? என்று நபி (ஸல்) அவர்கள் கேட்டதற்கு "குதிரை" என்றேன். "குதிரையில் இறக்கைகள் இருக்குமா?"என்றுநபி(ஸல்)கேட்டார்கள். "சுலைமான் (அலை) நபியின் குதிரைக்கு இறக்கைகள் இருந்ததை நீங்கள் கேள்விப்பட்டதில்லையா?" என்று நான் மறு கேள்வி கேட்டபோது நபி (ஸல்) கடை வாய்ப்பற்கள் தெரியும் அளவுக்குப் புன்னகை பூத்தார்கள் என்று ஆஇஷா (ரழி) அறிவித்தார்கள்.

இந்த நிகழ்வு அன்னை ஆஇஷாவின் புத்திக் கூர்மையை மட்டுமன்றி அவர்களின் குடும்ப வாழ் வின் மகிழ்ச்சி அத்தியாயங்களையும் கோடிட்டுக் காட்டுகிறன்றன. இப்படியான பல நிகழ்வுகள் ஒவ்வொரு கட்டுரைத் தலைப்புக்கும் பொருத்த மான விதத்தில் கையாளப்பட்டுள்ளன. வரலாற் றில் எப்போதோ வாழ்ந்து மரணித்த ஒருவரைப் பற்றிய செய்திகளாக அவை இல்லை. மாறாக இன்று நடமாடிக் கொண்டிருக்கும் ஒரு முன்மாதி ரிப் பெண் ஆளுமையாக அவர் சித்திரிக்கப்பட் டுள்ளார் என்பது ஒரு நெருடலான விடயமாகும்.

இந்தக் குறுகிய அறிமுகத்தில் இந்நூலின் சிறப் புகளைக் குறிப்பிடுவது சாத்தியமில்லை. தமிழில் இதுவரை வெளிவந்த நூல்களில் வாசிக்கக் கிடைக் காத ஒன்றாக "ஷீஆ இயக்கத்தின் குற்றவாளிக் கூண் டில் அன்னை ஆஇஷா (ரழி)" என்ற கட்டுரையைக் குறிப்பிடலாம். களங்கமில்லா அன்னையின் வாழ் வுப் பாதையில் கறை படியச் செய்யும் தீய சூழ்ச்சி யாக ஷீஆ சமூகம் முன்வைத்த எட்டுப் பெரும் குற்றச்சாட்டுக்களைக் குறிப்பிட்டு அவை எந்த அளவு அபாண்டமான பொய், இட்டுக்கட்டப் பட்ட கற்பனை என்கதை அறிவியல்பூர்வமாக விளக்கும் 26 பக்கங்கள் கொண்ட இக்கட்டுரை அனைத்து முஸ்லிம்களாலும் வாசிக்கப்பட வேண் டியதொன்று. அனைத்துக் கட்டுரைகள் குறித்தும் சிலாகித்து நீண்ட விளக்கங்களை எழுதுமளவுக்கு இந்த நூல் வாசகர்களைக் கவரும் விதத்திலும் வரலாற்று மற்றும் ஹதீஸ் ஆதாரங்களுடன் விட யங்களை ஒப்புவிக்கும் வகையிலும் அலுப்பில்லாது ஆர்வமாக வாசிக்கும் வகையிலும் அமைந்துள்ளது. இந்நூலாக்கப் பெருமுயற்சிக்கு நாம் செய்யும் கைம்மாறு அதனைப் பெற்று வாசிப்பதுதான். ○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A/L
## பெறுபேறுகள் வந்து விட்டன... அடுத்தது என்ன?



அஹ்மத் அஸ்ஹர் B.Sc

A/L பரீட்சையின் பெறுபேறுகள் வந்து விட்டன. 'எனது எதிர்காலத்தை எவ்வாறு அமைத்துக் கொள்ளப் போகிறேன்?' என்பதே பல மாணவர்களிடத்திலும் தற்போதிருக்கும் பாரியதொரு வினாவாகும்.

எந்தத் துறையில் நீங்கள் A/L பரீட்சைக்குத் தோற்றியிருந்தாலும் எதிர்கால சிறப்புத் துறையினைத் தெரிவு செய்யும்போது நீங்கள் எத்துறைக்குப் பொருத்தமானவர் என்ற தெளிவு முக்கியமானதாகும். ஒருவர் தனக்கு விருப்பமான தொழில் துறையில் ஈடுபடும்போதே சந்தோஷமான வாழ்வொன்றை அமைத்துக் கொள்ளலாம். அது மட்டுமல்லாது, தனது குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் நாட்டுக்கும் பயனுள்ள பல பணிகள் புரிய ஒருவர் தனது துறையில் அடையும் சிறப்புத் தேர்ச்சி மிக முக்கியமானதாகும்.

'எனது துறையை நான் எவ்வாறு தெரிவு செய்வது?' என்ற கேள்வி உங்களுக்குள் தற்போது எழுந்திருக்கும். இக்கேள்விக்கான பதில் உங்களை நீங்கள் ஆய்வு செய்வதன் மூலம் கிடைக்கும். முதலில் உங்களது வேட்கையை இனங்காண வேண்டும். 'நான் எனது அன்றாட வாழ்வில் செய்யும் விருப்பமான காரியங்கள் எவை? நான் செய்ய ஆசைப்படுகின்ற காரியங்கள் எவை? நான் எத்துறையைச் சேர்ந்தவர்களுடன் அதிகமாகப் பழகுகின்றேன்? எப்படியான புத்தகங்களை அதிகம் வாசிக்கின்றேன்? நான் அதிகமாக எதைப் பற்றிச் சிந்திக்கின்றேன்?' போன்ற கேள்விகளுக்கான விடைகள் உங்களுக்கு விருப்பமான துறையை இனங்காட்டித் தரும். மேலும், இணையத்தின் ஊடாக இது பற்றி ஆய்வு செய்து மேலதிகத் தெளிவையும் நீங்கள் பெறலாம்.

விருப்பமான துறையை அடைவதற்காக க.பொ.த. உயர்தர பரீட்சையை மீண்டும் எழுதுவதைப் பற்றியும் உங்களில் சிலர் யோசித்துக் கொண்டிருக்கக் கூடும். நம்மில் அநேகர் மேலதிகமாக ஓரிரு வருடங்கள் காலம் செல்வதைப் பற்றி மாத்திரமே சிந்திப்பார்கள். ஆனால், அந்த ஓரிரு வருடங்கள் மீண்டும் முயற்சி செய்வது வாழ்நாள் முழுவதும் தனக்கு விருப்பம் இல்லாத துறையில் இருப்பதனை விட மேலானதாகும். நமது சமூகத்தில் க.பொ.த. உயர்தர பரீட்சையில் ஒரு தடவைக்கு மேல் முயற்சி செய்து தமது இலக்குகளை அடைந்த புத்திஜீவிகள், துறைசார் நிபுணர்கள் ஏராளம் உள்ளனர்.

க.பொ.த. உயர்தர பரீட்சையில் சித்தியெய்தி பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றோர் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பப் படிவத்தை சரியாகப் பூர்த்தி செய்வது மிக முக்கியமானதாகும். இதற்கு முதலில் உங்களுக்கு விருப்பமான துறைக்குப் பொருத்தமான கற்கை நெறிகளைத் தெரிவு செய்து, முன்னுரிமை ஒழுங்கில் அமைக்க வேண்டும். இதன்போது நீங்கள் க.பொ.த. உயர்தர பரீட்சையில் பெற்ற பெறுபேறுகளும் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் முக்கியமான பாடங்களில் பெற்ற பெறுபேறுகளும் தேவைக்கேற்ப கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். கற்கை நெறிகளை முன்னுரிமை அடிப்படையில் பட்டியற்படுத்தும்போது அக்கற்கை நெறிகளைப் பயின்றவர்களின் அனுபவம் உள்வாங்கப்படல் வேண்டும். உதாரணமாக, கற்கை நெறியின் பாடத்திட்டம், குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தில் அக்கற்கை நெறிக்குக் காணப்படும் வளங்கள் (மனித, பௌதிக வளங்கள்), தொழிற்சந்தையில் அதற்குள்ள கேள்வி என்பன பற்றி ஆய்வு செய்வதன் மூலம் தெளிவைப் பெறலாம்.

உங்களில் சிலர் பல்கலைக்கழக அனுமதிக்குத் தேவையான பெறுபேறுகளைப் பெறாமல் இருக்கலாம். அப்போதும் உங்களுக்கான வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன. திறந்த பல்கலைக்கழகம், SLIATE (Sri Lanka Institute of Advanced Technology Education), தொழில்நுட்ப பல்கலைக்கழகமான UNIVOTEC, கல்விக் கல்லூரிகள், தொழில் நுட்பக் கல்லூரிகள், அங்கீகாரம் பெற்ற தனியார் பல்கலைக்கழகங்கள், அரச பல்கலைக்கழகங்களின் வெளிவாரிப் பட்டப் படிப்பு பாடநெறிகள் என்பன சிறந்த மாற்று வழிகளாகும். இவற்றில் டிப்ளோமா பாடநெறியொன்றை மட்டும் முடித்தாலும் கூட பின்னர் Top-up மூலம் பட்டப்படிப்பை நிறைவு செய்யும் வாய்ப்புகளும் இலங்கையில் நிறையவே

18ஆம் பக்கம் பார்க்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கலாநிதி M. கணேசமூர்த்தி PhD**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பொருளியல் துறை
கொழும்பு பல்கலைக்கழகம்

# இலங்கையின் பொருளாதார வளர்ச்சி
## நேற்று, இன்று, நாளை...

இலங்கை இப்போது அனுபவித்துவரும் பொருளாதார வீழ்ச்சியானது 2022இல் உருவாகியது என்று பலர் நினைத்தாலும் உண்மையில் இலங்கையின் பொருளாதாரம் 2015ஆம் ஆண்டிலிருந்தே தொடர்ச்சியான பின்னடைவைச் சந்தித்திருந்தது. சுதந்திரம் பெற்ற காலப்பகுதியில் ஆசிய நாடுகள் பலவற்றுடன் ஒப்பிடும்போது திறந்த பொருளாதாரமாக முன்னணியில் இருந்த இலங்கை சுதந்திரத்தின் பின்னர் விரைவாகப் பொருளாதார வளர்ச்சியில் ஓர் உன்னதமான இடத்திற்கு வரும் என்று உலக வங்கி உட்பட பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் எதிர்பார்த்தன. பொருளாதார வளர்ச்சி தொடர்பில் ஆசியாவிலேயே சிறந்த ஓட்ட வீரனாக (Best Bet in Asia) இலங்கை வரும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் இப்போது தெற்காசியாவிலேயே வங்குரோத்தடைந்த நாடாக இலங்கை மாறியுள்ளது. பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு அவசியமான ஆரம்பத் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்து ஒரு மாதிரி நாடாகத் திகழும் எனப் பலராலும் எதிர்பார்க்கப்பட்ட இலங்கை அவற்றைப் பயன்படுத்தத் தெரியாமல் வாய்ப்புகளைத் தவற விட்ட நாடாக (A Country with Missed Opportunities) பிரகடனப்படுத்தப்பட்டது.


சுதந்திரத்தின் பின்னரான இது வரையிலான காலப்பகுதியில் இலங்கையின் சராசரி பொருளாதார வளர்ச்சி வேகம் 5 சதவீதத்தைக் கடந்து செல்லவில்லை. ஒரு பொருளாதாரம் நீண்டகால பொருளாதார வளர்ச்சிப் பாதையில் தன்னை நகர்த்த வேண்டுமானால் குறைந்த பட்சம் 10 தொடக்கம் 15 வருடங்களுக்கு வருடாந்தம் சுமார் 8 சதவீதத்திற்கு மேற்பட்ட பொருளாதார வளர்ச்சியைத் தக்க வைக்க வேண்டும். ஒரு விமானம் தரையிலிருந்து மேலெழும்ப ஒரு குறைந்தபட்ச வேகத்தை அடைந்து அதைத் தக்க வைக்க வேண்டியது போலவே ஒரு பொருளாதாரமும் இவ்வாறான ஒரு வளர்ச்சி வேகத்தைத் தக்கவைப்பது அவசியம். இலங்கை சில வருடங்கள் 9 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தாலும் கூட அடுத்து வந்த காலப்பகுதியில் வேகம் குறைந்து காற்றுப்போன பலூனாக மாறியிருந்தது. ஒரு விமானம் ஓடுபாதையில் வேகமாக ஓடி பின்னர் வேகம் குறைந்து மாறி மாறித் தடுமாற்றமடைந்தால் எவ்வாறு மேலே ஏற முடியாதோ அதே நிலைதான் இலங்கைப் பொருளாதாரத்திற்கும் ஏற்பட்டது.

வளர்ச்சிக்கு அவசியமான ஆரம்பத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த நிலையிலும் ஏன் இலங்கையால் பொருளாதார வளர்ச்சியில் முன்னேற முடியாமல் போனது என்ற காரணத்தை ஆராய்ந்தால் முதன்மைக் காரணியாகத் தென்படுவது பிழையான அரசியல் சித்தாந்தங்களும் அந்த அரசியல் சித்தாந்தங்களால் உந்தப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளுமாகும். இலங்கையை மாறி மாறி ஆட்சி செய்த இரு பிரதான அரசியற் கட்சிகளில் ஒன்று சந்தைப் பொரளாதாரக் கொள்கையையும் மற்றையது அரச தலையீட்டுடன் கூடிய திட்டமிட்ட பொருளாதாரக் கொள்கையையும் நம்பியிருந்தமையினால் அவை மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முதல் வேலையாக முன்னைய அரசாங்கத்தின் கொள்கைகளைத் தலைகீழாகப் புரட்டிப் போடுவதும் எல்லாவற்றையும் முதலில் இருந்து ஆரம்பிப்பதுமாக இருந்தது.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




இதனால் இலங்கையில் தொடர்ச்சியான ஒரு தேசியப் பொருளாதாரக் கொள்கையை அமுல்படுத் துவதென்பது முடியாத காரியமாயிற்று. இந்நிலைமை **1994** ஆம் ஆண்டு வரையில் தொடர்ந்து சென்றமையை மிகத் தெளிவாக அவதானிக்க முடிகிறது.

பின்னர் வந்த அரசாங்கங்களின் பொருளாதாரக் கொள்கைகளைத் தெளிவாக வேறுபடுத்திக் காட்ட முடியாத போதிலும் **2005**இல் பதவிக்கு வந்த மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள் சர்வதேசத்தைப் பகைத்துக் கொண்டு தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கத்தைக் கொண்டிருந்தன. நாட்டில் யுத்தம் செய்ய மேற்குலக நாடுகளின் பண உதவிகளும் தொழில்நுட்ப மற்றும் ஆயுத உதவிகளும் பெரிதும் வரவேற்கப்பட்ட போதிலும் பொருளாதாரத் திட்டங்கள் தொடர்பில் 'பணம் மட்டும் வேண்டும்; மேற்குலகின் ஆலோசனைகள் வேண்டாம்' என்ற இரட்டை நிலைப்பாட்டில் இருந்தது. இந்நிலைப்பாடு **2022** வரையிலும் தொடர்ந்து சென்றது.

**1994**இற்கு முன்னர் ஆட்சியில் இருந்த கட்சிகளின் நிலைப்பாடுகள் அப்போதைய பொருளாதாரக் கொள்கைகளைத் தீர்மானித்திருந்தாலும் **2005**இன் பின்னர் பதவியிலிருக்கும் ஜனாதிபதி விரும்பும் கொள்கைகளே நடைமுறைப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொருளாதாரக் கொள்கைகளும் உள்ளடங்கும். தனி ஒரு மனிதனின் விருப்பு வெறுப்புகளுக்குஏற்பகொள்கைமாற்றங்கள்இடம் பெற்றன. ஒரு ஜனாதிபதி காலையில் நித்திரையிலிருந்து எழும்பி முதல் நாள் இரவு கண்ட கனவைக் கூட பொருளாதாரக் கொள்கையாக அறிமுகப்படுத்த முடியும். அதற்கு "ஆமாம் சாமி..." போட்டு சாதகமாக ஊடகங்களின் முன் பேச வேலைக்கமர்த்தப்பட்ட பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் 'தொழில்சார் வல்லுநர்கள்' என்று அழைக்கப்படும் அரசியல் அடிவருடிகளும் தாராளமாகக் கிடைத்தனர்.

ஓரிரவில், இலங்கையில் அப்போதைய ஜனாதிபதி அறிமுகப்படுத்திய இரசாயனப் பசளை உபயோகத்திற்கான தடையை இதற்கான சிறந்த உதாரணமாகக் குறிப்பிடலாம். "மக்களுக்கு விஷத்தை உண்ணக் கொடுக்க நாம் விரும்பவில்லை" என்று அதற்குக் காரணம் கூறப்பட்டபோது "நடைமுறையில் அது சாத்தியப்படாது" என்று தொழில்சார் ரீதியில் ஆலோசனை வழங்க அந்த ஜனாதிபதியின் ஆலோசனைக்குழுவில் இருந்த எந்தப் பேராசிரியரும் தொழில்நுட்ப வல்லுநரும் முன்வரவில்லை. மாறாக, அவர் சொல்வதை அப்படியே வழிமொழிந்து நியாயப்படுத்தும் புலமையாளர் என தம்மை அழைத்துக் கொள்ளும் அடிவருடிகளே ஊடகங்களின் முன்வந்து நின்று அதை நியாயப்படுத்தினர்.

பொதுவாக எந்த அரசியல்வாதிக்கும் எல்லாத் துறைகளிலும் உரிய தெளிவோ அறிவோ இருக்குமென எதிர்பார்க்க முடியாது. எனவேதான், ஆலோசனை வழங்க ஆட்கள் நியமிக்கப்படுகின்றனர். இவர்களே எல்லாவற்றுக்கும் பொறுப்புக் கூற வேண்டும். "ஆமாம் சாமி..." போட்டு தமது வயிற்றை வளர்க்கும் இத்தகைய கூட்டமே **2022**இல் இலங்கையின் விவசாயத்துறையின் வீழ்ச்சிக்கும் உணவுப் பற்றாக்குறைக்கும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பலரின் மரணத்திற்கும் பொறுப்புக் கூற வேண்டியவர்கள்.

இப்போதைய பொருளாதார நெருக்கடியின் ஆரம்பம் **2015** எனக் குறிப்பிடப்பட்டாலும் **2009**இன் ஆரம்பத்திலிருந்தே இலங்கை மிகப் பாரியளவில் கடன்களை வாரிக்குவித்து வங்குரோத்திற்கு வித்திட்டிருந்தது. யுத்தத்திற்கு வாங்கிக் குவித்த இராணுவ தளவாடங்களுக்கான கடன்கள் ஒருபுறம் யுத்தம் முடிந்த பின்னர் மெகா திட்டங்களுக்காக வாங்கிக் குவிக்கப்பட்ட கடன்கள் மறுபுறம் என்று இலங்கையின் கடன் சுமை அதிகரித்துச் சென்றது. வாங்கப்பட்ட இக்கடன்கள் எதற்காகப் பயன்படுத்தப்பட்டன என்ற தகவல்கள் பலவற்றைக் காணவில்லை என செய்திகள் அதிகாரிகள் பக்கமிருந்து வருகின்றன. இவை பற்றிய உண்மைத் தன்மையோ தகவல்களோ இதுவரையில் வெளிவரவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக உட்கட்டமைப்புத் திட்டங்களும் கட்டுமானங்களும் அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் 'செல்வ ஊற்றுகள்' என்று சொல்லப்படுவதுண்டு. அதிலும் சீனாவின் கடன்கள் வணிக ரீதியானதாகவும் பெற இலகுவானதாகவும் வெளிப்படைத் தன்மை அற்றவையாகவும் இருப்பதனால் அத்தகைய வாய்ப்புகளை மறுப்பதற்கில்லை. மறுபுறம் அரசாங்க பிணையங்களைப் பயன்படுத்தி பாரியளவு கடன்கள் பெறப்பட்டன. இக்கடன்கள் பலவற்றின் மீளச் செலுத்தப்படுவதற்கான கால எல்லைகள் 2021-2027காலப்பகுதியில் இருந்தன. இலங்கையின் கடன்களை மீளச் செலுத்தும் ஆற்றலின் அடிப்படையில் இறைமைக் கடன் தரமிடலை (Sovereign Ratings) மூடிஸ் ஸ்டாண்டர்ஸ் அன்ட் புவர் மற்றும் பிட்ச் ரேட்டிங்ஸ் ஆகிய நிறுவனங்கள் இலங்கையை தொடர்ச்சியாகக் கீழிறக்கி வந்தன. இவ்வாறு தரமிடல் கீழ்நோக்கி நகர்த்தப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இலங்கை மத்திய வங்கி காழ்ப்புணர்வைக் கக்கியதுடன் நாட்டுக்கு எதிரான சர்வதேசத்தின் சதிவேலையாக அதனைக் காட்ட முற்பட்டது.

இலங்கையின் நிலை மோசமடைந்து செல்வது தொடர்பில் சர்வதேச நிறுவனங்களுடன் உள்நாட்டில் நடுநிலையாகச் சிந்திக்கும் வாண்மையாளர்களும் தொடர்ச்சியான எச்சரிக்கைகளை விடுத்து வந்தனர். சர்வதேச நாணய நிதியத்தின் அனுசரணையைப் பெற்று உடனடியாகப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிக்குமாறும் ஆலோசனை வழங்கினர். இப்போதைய ஜனாதிபதியும் கூட பாராளுமன்றத்தில் இதே ஆலோசனைகளை அப்போது வழங்கியதைக் காண முடிந்தது. அப்போதைய அரசாங்கம் இவற்றைக் கிஞ்சித்தும் காதில் போட்டுக் கொள்ள வில்லை. அப்போது அதிகாரத்தில் இருந்த கப்ரால் போன்றவர்கள் நாட்டில் எல்லாம் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் எதிர்க்கட்சியினர் பொய்யாக டொலர் நெருக்கடி இருப்பது போல காட்ட விரும்புவதாகவும் குற்றஞ்சாட்ட இன்னோர் அரசியல்வாதி டொலர் கப்பலொன்று வந்து கொண்டிருப்பதாகக் கூறினார். இந்நிலையில் கொரோனா பெருந்தொற்று அரசாங்கத்தின் சாயத்தை வெளுத்துக் கழுவிக் காயப் போட்டது.

டொலரின் பெறுமதியைக் கட்டாயமாக 231 ரூபா என்ற மட்டத்தில் செயற்கையாக வைத்திருந்த மத்திய வங்கி ஒரே இரவில் கட்டுப்பாட்டைக் கைவிடுவதாக அறிவித்தது. காற்று நிரப்பிய பலூனை திடீரெனக் கைவிட்டது போல டொலரின் பெறுமதி எகிறிக் குதித்துத் தாவி 369 ரூபா என்று வந்து நின்றது. இறக்குமதிப் பொருள்களின் விலைகள் உச்சம் தொட்டன. கொரோனாவால் உல்லாசப் பயணம் வீழ்ந்தது. முறைசாராத வழிகளில் டொலருக்கு அதிக பணம் கிடைத்தமையால் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் முறைசார்ந்த வழிகள் ஊடாகப் பணம் அனுப்புவதைத் தவிர்த்தனர். மத்திய வங்கி ரூபாவை ஒரே இரவில் கைவிட எடுத்த குருட்டுத்தனமாக நடவடிக்கை சந்தையில் ஏற்படுத்திய அதிர்வலைகள் காரணமாக டொலர் வெளிப்பாய்ச்சல் சடுதியாக அதிகரித்து மிகப் பெரிய டொலர் நெருக்கடியை ஏற்படுத்தியது.

பெற்றோலியம், உணவு, மருந்துப் பொருள்கள் போன்ற அத்தியாவசிய பொருள்களைக் கூட இறக்குமதி செய்ய முடியாத நிலைமைக்குத் தள்ளப்படவே நாடு முடங்கியது. அரகலய தொடங்கியது. நெடுநாட்களின் பின்னர் ஆளும் கட்சி அரசியல்வாதிகள் அரகலய மீது அடித்த அடி 'பூமரங்' ஆக மாறி அவர்கள் மீது இடியாக வந்திறங்கியது. அத்தனை ஆளுங்கட்சி அரசியல்வாதிகளும் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடித் தப்பினர். அப்போதைய ஜனாதிபதி பின்கதவால் ஓட பிரதமராக நியமிக்கப்பட்டிருந்த ரணில் விக்கிரமசிங்க எஞ்சியிருக்கும் காலத்திற்கு ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். அவர் அரகலயகாரர்களை அடித்துத் துரத்தினார். இலங்கையில் உள்ள எந்த ஒரு மேற்குலக ராஜதந்திரியும் அது பற்றி மூச்சு விடவில்லை. இதன் அர்த்தம் சிறு குழந்தைக்கும் கூடத் தெரியும். நாடு அதலபாதாளத்தில் விழுந்துள்ளது; அதை நாம் மீட்டெடுக்க வேண்டும்; தியாகங்களைச் செய்ய வேண்டும் என்று மக்கள் மீது வரிகளைக் கூட்டி முன்னைய ஆட்சியாளர்களின் பாவங்களை அவர்கள் மீது சுமத்தி விட்டார். ஒருபுறம் மக்களின் வருமானங்கள் பாதிக்கப்பட்டு பொருள் விலைகள் வானளாவ உயர்ந்திருந்த நிலையில் வரி அதிகரிப்பு சட்டியில் கருகியவனை அடுப்பில் தள்ளிய நிலைக்கு இட்டுச் சென்றது. பொருளாதார நெருக்கடி சாதாரண பொதுமக்களை வறுமை நிலையில் தள்ளி விட்டுள்ளது.

பொருள் தட்டுப்பாடு நீங்கியுள்ள நிலையில் இனி மக்கள் வீதிக்கு வர மாட்டார்கள் எனக் கருதும் இப்போதைய நிலையில் சர்வதேச நாணய


53ஆம் பக்கம் பார்க்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஸ்ஜிதுகள் முன்மாதிரிமிக்க சமூக நிறுவனங்களாக...

**அஷ்ஷெய்க் எம்.டி.எம். றிஸ்வி (மஜீதி)**
BA (Hons), PGDE, CTHE, MA, M.Phil
கலாநிதிப் பட்ட ஆய்வாளர்,
சிரேஷ்ட விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்.



**மஸ்ஜித்கள்** இறை இல்லங்களாகும். எமது இபாதத்துக்களை கூட்டாக நிறைவேற்றும் தளங்களாகும். அதேவேளை அது ஒரு சமூக நிறுவனமும் கூட. முஸ்லிம் சமூகத்தை தலைமை தாங்கி வழி நடாத்தும் தலைமையகம் மஸ்ஜிதுகளே. “இமாரதுல் மஸ்ஜித்” என்பதற்கு நவீன கருத்தியல் தான்- சிறந்த நாகரிகத்தையும் சமூக முன்மாதிரிகளையும் பூமியில் வாழவைக்கும் பணிகளை மஸ்ஜித்கள் புரிதல் என்பதாகும். மதீனாவைமையமாகக் கொண்டு நபி (ஸல்) அவர்கள் உருவாக்கிய நாகரிகமிக்க சமூகத்துக்கு முழுமையான தலைமைத்துவத்தை வழங்கியது மஸ்ஜித் நபவியாகும். அந்த வகையில் இன்றும் கூட ஒரு மஸ்ஜிதை சூழ வாழும் சமூகத்தை சிறந்த நாகரிகம், பண்பாடு, விழுமியம் மிக்கதாக கட்டியெழுப்ப மிகச் சிறந்த களம் பள்ளிவாசல்களாகும்.

இஸ்லாமிய வரலாற்றில் முஸ்லிம் சமூகம் எழுச்சி பெற்றிருந்த சூழலில் மஸ்ஜிதுகள்தான் ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தினுடைய வாழ்வின் சகல துறைகளின் மையத்தலங்களாக திகழ்ந்துள்ளன.

சமூக முன்மாதிரி என்பது, சமயம், கல்வி, பொருளாதாரம், சூழல், சுகாதாரம், விழுமியம், கலாசாரம், பழக்க வழக்கங்கள் என்ற அனைத்திலுமே செல்வாக்கு செலுத்துவதாகும். அதனை ஏற்படுத்தக்கூடிய சக்தியும், பலமும் மஸ்ஜிதுகளுக்கே உண்டு. அதனை நபி (ஸல்) அவர்கள் மஸ்ஜிதுந் நபவி மூலம் அன்று நிரூபித்துக் காட்டினார்கள். ஒரு மஸ்ஜிதின் சூழலில் வாழும் தனிமனிதர்களில் மஸ்ஜித் சிறந்த மாற்றங்களை முதலில் எற்படுத்த வேண்டும். பின்னர் அது குடும்பங்களை நோக்கி நகர்ந்து, இஸ்லாமிய ஒழுக்க விழுமியங்களுக்கு எடுத்துக் காட்டாக திகழக்கூடிய சமூக அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

மஸ்ஜிதுகள் சமூக முன்மாதிரி மிக்க தலங்களாக மாற்றப்படல் என்பது இரண்டு விடயங்களை உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

1. மஸ்ஜிதின் உட்கட்டமைப்பு, பௌதிக சூழல், நிர்வாகம், பணிகள்என்பன முன்மாதிரிமிக்கதாக அமைதல்.
2. மஸ்ஜிதின் சூழலில் வாழும் சமூகத்தை வழி காட்டி மேம்படுத்தும் பணிகளை மஸ்ஜித்கள் திட்டமிட்டு மேற்கொள்ளல்.

மஸ்ஜித் ஒரு முன்மாதிரி நிறுவனம் என்ற வகையில் கீழ்வரும் விடயங்களில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

- **மஸ்ஜிதின் கட்டிட அமைப்பும் உட்கட்டமைப்பும்**

புதிதாக மஸ்ஜிதுகளை நிர்மாணிக்கும்போதும் காலத்துக்குக் காலம் புனர்நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளும் போதும் மஸ்ஜிதுகள் மக்களின் கண்ணியத்தைப் பெறக் கூடியதும் வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்துவதுமான சிறந்த கட்டிடக்கலை நுட்பங்களைப் பிரதிபலிப்பதாகவும் அதனைப் பயன்படுத்துவோருக்கு நல்ல வசதிகளை வழங்குவதாகவும் அமைவது கருத்தில் கொள்ளப்பட வேண்டும். படாடோபமானதாக இருக்க வேண்டுமென்பது இதன் கருத்தல்ல.

- **மஸ்ஜித் நிருவாகக் கட்டமைப்பு**

மஸ்ஜிதுகள் சிறந்த நிருவாகக் கட்டமைப்பைக் கொண்டிருப்பதும் முக்கியமான மற்றுமோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சமாகும். அதில் நன்கு வடிவமைக்கப்பட்ட யாப்பு, ஜமாஅத்தார்களின் விருப்பத்தைப் பிரதிப லிக்கும் நிர்வாகிகள் தெரிவுமுறை, கலந்தாலோசனை அடிப்படையில் தீர்மானங்கள் எடுக்கும் நடைமுறை, ஒழுங்குபடுத்தப்பட்ட நிர்வாக முறைமை, நிபுணத்துவ ஆலோசனைக்கு மதிப்பளிக்கும் ஏற்பாடுகள், உரிய நியமங்களைப் பேணும் நிதிமுகாமை போன்றன இன்றியமையாதவையாகும்.

- **மஸ்ஜித் இமாமின் பணிகளை விரிவுபடுத்தல்**

மஸ்ஜித் இமாமத்தை இரண்டு வகையாக நோக்கலாம்: ஒன்று இமாமத் சுஹ்ரா- மஸ்ஜிதில் கடமை புரிய நியமிக்கப்பட்ட இமாம், மஸ்ஜிதில் தொழுகை நடாத்துகின்ற பொறுப்பையுடையவராக மாத்திரம் தன் பணிகளை சுருக்கிக் கொண்டதை இது குறிக்கும். இரண்டாவது இமாமத் குப்றா- மஸ்ஜிதில் தொழுகை நடாத்தும் பொறுப்பையும் சமூகத்தலைமைத்துவப் பொறுப்பையும் சமகாலத்தில் சுமந்தவர். இதுவே நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரியுமாகும். இத்தகைய பொறுப்பையே கலீபாக்களின் வரலாற்றில் பார்க்கிறோம். கலீபாவே தொழுகை நடாத்தும் இமாமாகக் காணப்படுவார். இத்தகைய பொறுப்பை ஒத்த இமாமத்தை நோக்கி இன்றைய மஸ்ஜிதுகளின் இமாம்கள் உருவாக்கப்பட வேண்டும். அதற்காக மொத்த சமூகத்தையும் வழிநடத்தக் கூடிய அறிவு, திறன், மனப்பாங்கு, ஆளுமைகள் அவர்களிடம் வளர்க்கப்பட வேண்டும்.

- **அழகும் நேர்த்தியும்**

மஸ்ஜிதின் உள்ளக, வெளிச் சூழல் எப்பொழுதும் அழகாகவும் தூய்மையாகவும் உள்ளத்திற்கு இதமாகவும் அமையக் கூடிய வகையில் பேணப்பட வேண்டும். குறிப்பாக, மலசலகூடம், வுழுச் செய்யும் தளம் மஸ்ஜிதின் சுற்றுச் சூழல் என்பன எப்பொழுதும் தூய்மையாக பேணப்படல் வேண்டும்.

மஸ்ஜித் மேற்கொள்ளக் கூடிய சமூக வழிகாட்டல், சமூக நலன், மற்றும் சமூக மேம்பாட்டுப் பணிகளைப் பொறுத்த வரை கீழ்வரும் சில விடயங்களில் கூடிய கவனம் செலுத்தப்படலாம்.

- **மஸ்ஜித் மைய வழிகாட்டல்**

மஸ்ஜித்கள் குறிப்பாக தனது ஜமாஅத்தார்களின் தனிப்பட்ட, பொது வாழ்க்கைக்கான வழிகாட்டல்களை வழங்கக் கூடிய வேலைத் திட்டங்களைக் கொண்டிருக்க வேண்டும். இந்த வகையில் மார்க்க விளக்க வகுப்புகள், உளப் பயிற்சி நிகழ்ச்சிகளை அங்கு நடாத்துதல், உள வள ஆலோசனைக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல், இஸ்லாமிய வரையறைகளைக் கொண்டதாக ஆண், பெண் இருபாலாரும் பயன்படுத்தக்கூடிய வகையில் வசதிகளுடன் கூடிய நூலகங்களை ஏற்படுத்தல் என்பன கருத்தில் கொள்ளப்படலாம்.

- **கல்வி மேம்பாடு**

கற்றல் சூழல், கற்றல் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல், மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கி சமூகத்தில் துறை சார்ந்தவர்களை உருவாக்க உதவுதல், கல்வி கற்கும் மாணவர்களுக்கான தங்குமிட வசதிகளை வழங்குதல் முதலியன கருத்தில் கொள்ளப்படலாம். இவ்விடயத்தில் அண்மையிலுள்ள பாடசாலைகளுடனும் சமூகத்திலுள்ள கல்வி மேம்பாட்டு அமைப்புகளுடனும் இணைந்து செயற்பட முடியும்.

- **பொருளாதார அபிவிருத்தி**

தனிமனித, சமூக, பொருளாதார மேம்பாட்டுக்காக கூட்டு ஸகாத் பணிகள் மற்றும் வறுமை ஒழிப்புத்திட்டங்களை முன்னெடுத்தல்; அவற்றின் மூலம் அநாதைகள், சிறுவர்கள், விதவைகள், வயோதிபர்கள், வறியோர்கள், அங்கவீனர்கள் என நலிவடைந்தோரின் தேவைகளை நிறைவேற்றி வைத்தல். வட்டி இல்லா கடன் திட்ட முறைமைகளை அமுல்படுத்தல் போன்ற விடயங்களிலும் கூடிய கவனம் எடுக்கலாம்.

- **இளைஞர் அபிவிருத்தி**

ஒழுக்க விழுமியங்களைப் பேணி வாழக்கூடிய இளைஞர், யுவதிகளை உருவாக்கும் திட்டங்களை மஸ்ஜித் மேற்கொள்ளல். எதிர்காலத்தில் சமூக தலைமைத்துவத்தை பொறுப்பேற்கக் கூடிய ஆற்றலுள்ளவர்களாக இளைஞர்களைப் பயிற்றுவிக்க நடவடிக்கைகளை முன்னெடுத்தல், அடுத்த நிலைத் தலைமைகளை உருவாக்குதல், அதற்காக திறன் விருத்தி வழிகாட்டல்கள் வழங்குதல், தொழில் பயிற்சி வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல், இளைஞர்கள் வழிதவறாதிருக்க இஸ்லாமிய மயப்படுத்தப்பட்ட சமூக சூழலை ஏற்படுத்தல், இளைஞர் மேம்பாட்டு செயற்றிட்டங்களுக்காக பயனுடைய செலவுகளை மேற்கொள்ளல் முதலியன இதில் அடங்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> முஸ்லிம்கள் ஒரு குழுமமாகக் குடியேறினார்கள் என்றால் அவர்களுடைய முதல் வேலை அங்கு ஒரு பள்ளியை அமைப்பதாக இருக்கும். இஸ்லாத்தின் வலிமை ஆயுதத்திலும் இராணுவத்திலும் இல்லை. அதன் பள்ளிவாசலிலும் அதை ஒட்டிய ஒரு பள்ளிக்கூடத்திலும்தான் இருக்கிறது."

- **பொது உறவு**

இலங்கை ஒரு பன்மைத்துவ தேசம் என்ற வகையில் சகோதர சமூகத்தவர்களுக்கும் இஸ்லாம் பற்றிய விளக்கங்கள் சென்றடையும் வேலைத் திட்டங்களை மஸ்ஜித் மேற்கொள்ளல். அதற்காக அச்சமூகத்தவர்களுடன் அதிகம் தொடர்புள்ள முஸ்லிம் வர்த்தகர்கள், அரச ஊழியர்கள், ஆட்டோ சாரதிகள் போன்றவர்களுக்கு இஸ்லாத்தின் செய்திகளைத் தெளிவாக முன்வைக்க பயிற்சியளித்தல், பிற சமயப் போதகர்களுடன் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்து சகவாழ்வு வழிமுறைகளை மேற்கொள்ளல். மஸ்ஜித் சூழலில் வாழ்கின்ற முஸ்லிம்கள் முஸ்லிம் அல்லாதவர்களுடன் நல்லுறவுடன் நடந்து கொள்ளவும் ஏனையவர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் விடயங்களைத் தவிர்ந்து கொள்ளவும் வழிகாட்டுதல்.

- **நீதி பரிபாலனம்**

பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் ஏற்பாடுகளை மஸ்ஜித் வளாகத்தில் அமைத்தல், மக்கள் முறைப்பாடுகளை விண்ணப்பிக்க ஏதுவாகவும் தீர்ப்புகள் ஆவணப்படுத்தப்பட்டு பாதுகாக்கவும் காரியாலய ஏற்பாடுகளைக் கொண்டிருத்தல் என்பன முக்கியமானதாகும்.

- **ஆய்வும் திட்டமிடலும்**

மஸ்ஜித்கள் தமது பகுதியில் வாழும் மக்கள் பற்றிய விரிவான தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும். அத்தரவுகளின் அடிப்படையில் தூர நோக்கு, இலக்கு, குறிக்கோள்களை உருவாக்கிச் சமூக நலத் திட்டங்களை வகுத்தல், சமூக புத்திஜீவிகள், மார்க்க அறிஞர்கள் குழுவினைத்திரட்டி, அவர்களை சமூக மேம்பாட்டு விடயங்களில் பயன்படுத்தல் என்பன பற்றி சிந்திக்கப்பட வேண்டும்.

இத்தனைக்கும் முத்தாய்ப்பாக அறிஞர் வில்சன் காஸ் அவர்களுடைய பின்வரும் கருத்து முஸ்லிம் சமூகத்தின் நலன், பலம். சக்தி அத்தனையும் மஸ்ஜிதுகளின் முன்மாதிரிச் செயற்பாடுகளிலேயே உள்ளன என்பதை உறுதிப்படுத்துகிறது. "முஸ்லிம்கள் ஒரு குழுமமாகக் குடியேறினார்கள் என்றால் அவர்களுடைய முதல் வேலை அங்கு ஒரு பள்ளியை அமைப்பதாக இருக்கும். இஸ்லாத்தின் வலிமை ஆயுதத்திலும் இராணுவத்திலும் இல்லை. அதன் பள்ளிவாசலிலும் அதை ஒட்டிய ஒரு பள்ளிக்கூடத்திலும்தான் இருக்கிறது." ■

12ஆம் பக்கத் தொடர்ச்சி... (A/L...)

உள்ளன. சில துறைகளில் பட்டப்படிப்பினை மாத்திரம் நாம் தேடிச் செல்லத் தேவையில்லை. குறிப்பாக கணக்கியல், முகாமைத்துவம். தொழில்நுட்பம் போன்ற துறைகளில் தொழில் சார்ந்த (Professional) உள்நாட்டு, சர்வதேச பாட நெறிகள் உள்ளன. CIMA, CMA, ACCA, CA, AAT போன்றவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

அத்துடன் நீங்கள். க.பொ.த. உயர்தர பரீட்சையில் மூன்று சித்திகளைப் பெறாவிடின் நீங்கள் இலங்கையில் காணப்படுகின்ற தொழில்நுட்பக் கல்லூரிகள், தொழில்நுட்பப் பயிற்சி நிலையங்களில் உள்ள NVQ level 4 பாடநெறிகளைப் பயிலலாம். அதனைத் தொடர்ந்து அத்துறையில் பட்டப் படிப்பு வரை செல்வதற்கும் வாய்ப்புகள் நிறையவே உள்ளன. தனக்கான துறையைத் தேர்வு செய்வதில் ஏதாவது சிரமம் காணப்பட்டால் தொழில் மற்றும் கல்வி வழிகாட்டல் துறையில் நிபுணத்துவம் உள்ள வளவாளர்களின் உதவியைப் பெறலாம்.

உங்களது வாழ்வு ஓர் அமானிதம். அது ஓர் அடையாளத்தை வேண்டி நிற்கின்றது. எனவே, உங்களை அறிந்து உங்களுக்கான துறையைத் தெரிவு செய்து அத்துறையில் உங்களுக்குத் தேவையான தேர்ச்சிகளைப் பெற்று எதிர்காலத்தில் இந்நாட்டுக்கும் இந்த சமூகத்துக்கும் மொத்தமாக உலகத்திற்கும் பயனுள்ள மனிதனாக வர வேண்டும் எனும் பேரவா உங்களில் ஏற்பட வேண்டும். உங்கள் திட்டங்கள் நல்லதாக அமையவும் உங்கள் நோக்கங்கள் நிறைவேறவும் அல்லாஹ் அருள் புரிவானாக. ❍



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி மூச்சுக்கள் ஈமானிய மூச்சுக்களாகட்டும்



**ஜாமிஆ நளீமியாவின் பொன்விழாவை முன்னிட்டு கடந்த ஜூலை 2, 3 திகதிகளில் சுமார் ஆயிரம் பழைய மாணவர்கள் ஜாமிஆ வளாகத்தில் ஒன்று கூடினர். பழைய மாணவர்களின் அமைப்பான ராபிதத்துன் நளிமிய்யீன் உடைய வருடாந்த கூட்டமாக நடைபெற்ற இந்நிகழ்வில் அதன் அங்கத்தவரும் மாதம்பை இஸ்லாஹிய்யா அரபுக்கல்லூரியின் முன்னாள் முதல்வருமான உஸ்தாத் எம்.யூ.எம். ரம்ஸி அவர்கள் ஆற்றிய உரையை தொகுத்துத் தருகின்றோம்.**

**தொகுப்பு : அஷ்ஷெய்க் எம்.ஆர்.எம். பௌஸர் (நளீமி), B.A**

ஜாமிஆ நளீமிய்யா தோற்றம் பெற்று ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியாகி பொன்விழா காண்கின்ற சந்தர்ப்பத்தில் நாம் ஒன்றுகூடியுள்ளோம். 60 ஆண்டுகள் பூர்த்தியாகும்போதும் நூற்றாண்டு காணும்போதும் இங்குள்ள அநேகர் இருக்க மாட்டோம் என்ற உணர்வு வருமளவு நாம் வயதாகி விட்டோம். அடுத்தவருடத்தில், அடுத்த மணித்தியாலத்தில், அடுத்த நொடியில் எமக்கான மரணம் வந்து சேர்ந்து விடலாம். இறுதி மூச்சை விடுகின்ற சந்தர்ப்பத்தில் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றவர்களாக மரணிக்கும் பாக்கியத்தைப் பெற வேண்டும். இதுதான் 'ஹுஸ்னுல் ஹாத்திமா' எனும் சிறந்த முடிவாகும்.

எவ்வளவுதான் நல்ல மனிதர்களாக இருந்த போதிலும் நாம் எமது இறுதி மூச்சை விடும் சந்தர்ப்பத்தில் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றவர்களாக உலகை விட்டு விடை பெறத் தவறினால் தோல்வி அடைந்து விடுவோம் எனும் சிந்தனை எப்போதும் எம் உள்ளத்தில் ஆழப் பதிந்திருக்கவேண்டும். இதனால்தான் ரஸூல் (ஸல்) அவர்கள் பின்வருமாறு துஆ கேட்பவர்களாக இருந்தார்கள்: "யா அல்லாஹ்! தவ்ஹீத் பற்றிய ஞானத்தையும் எல்லாக் காரியங்களிலும் இஹ்லாஸையும் சிறந்த இறுதி முடிவையும் தந்தருள்வாயாக!" அதாவது, அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தைப் பெற்ற நிலையில் தனது இறுதி முடிவு அமைய வேண்டும் என்ற நபிகளாரின் அவாவையே இந்தப் பிரார்த்தனை காட்டுகின்றது.

இவ்வாறான முடிவு மனிதனுக்குக் கிடைக்குமானால் அவன் பெரும் பாக்கியசாலியாவான். ரஸூல் (ஸல்) அவர்கள் தனது மரணத்தறுவாயில் இருக்கும் போது அன்னை பாத்திமா (ரழி)அன்ஹா அவர்கள் மிகவுமே கவலைப்பட்டு "எனது தந்தைக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டமே" என்று குறிப்பிடுகின்றார்கள். அதற்கு மாநபி (ஸல்) அவர்கள் "இதன் பின் உனது தந்தைக்கு எவ்வித கஷ்டமும் இல்லை" என்று கூறுகின்றார்கள். காரணம் நபிகளார் (ஸல்) அவர்களுக்கு ஹுஸ்னுல் ஹாத்திமா உறுதியாகி விட்டிருந்தது. உலகில் எவ்வகையான கஷ்டங்கள், சங்கடங்களைப் பெற்று வந்தாலும் இறுதி முடிவு நல்லதாக அமைந்து விட்டால் அதன் பிறகு அவருக்கு எந்த விதக் கஷ்டங்களும் இல்லை என்பது உறுதிதானே.

உள்ளங்களில் ஆழமாகப் பதிய வேண்டும் என்பதற்காகவே ரஸூல் (ஸல்) அவர்கள் இந்த விடயத்தைப் பல வழிகளிலும் ஞாபகமூட்டியுள்ளார்கள். ஒரு நாள் ஒரு ஜனாஸா எடுத்துச் செல்லப்படுகிறது. அப்போது அவர்கள் அந்த ஜனாஸாவைப் பார்த்து இவ்வாறு கூறினார்கள்: 'முஸ்தரீஹுன்' அல்லது 'முஸ்தராஹுன் மின்ஹு' அதாவது, நிம்மதி

**எமது இறுதி மூச்சை விடும் சந்தர்ப்பத்தில் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றவர்களாக உலகை விட்டு விடை பெறத் தவறினால் தோல்வி அடைந்து விடுவோம் எனும் சிந்தனை எப்போதும் எம் உள்ளத்தில் ஆழப் பதிந்திருக்க வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்த ஆத்மா அல்லது மற்றவர்களுக்கு நிம்மதி கொடுத்துவிட்டுச்செல்லும்ஆத்மாஎன்பதேஅதன் பொருளாகும். இச்சொற்கள் குறித்து ஸஹாபாக்கள் சரியாக விளங்கிக் கொள்ளாததனால் இது தொடர் பான விளக்கத்தைக் கேட்டபோது நபி (ஸல்) அவர் கள் "ஒரு மனிதன் அல்லாஹ்வுக்குத் திருப்தியாக வாழ்ந்து விட்டு நல்லடியானாக மரணிக்கின்றான் என்றால் அவன் 'முஸ்தரீஹ்' ஆவான். இதற்கு மாற் றமாக ஒரு மனிதன் பாவியாக, கெட்ட ஆன்மாவை சுமந்தவனாக வாழ்ந்திருந்தால் அவனிலிருந்து ஏனைய மனிதர்கள், தாவரங்கள், செடிகொடிகள், மலைகள் எல்லாமே நிம்மதி அடைகின்றன" என்று கூறினார்கள். எமது ஜனாஸா எடுத்துச் செல் லப்படும்போது நாம் 'முஸ்தரீஹ்' ஆக இருக்க வேண் டும். இவ்வுலகின் நெருக்கடிகள், கெடுபிடிகள் அனைத்திலிருந்தும் விடுபட்டு நிம்மதி அடைந்த ஆன்மாவாக அல்லாஹ்வை சந்திக்கும் பாக்கியம் கிடைக்க வேண்டும். இந்த ஹுஸ்னுல் ஹாத்திமா வுக்காக எமது வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

இது தொடர்பில் பேசுகின்றது பின்வரும் திரு மறை வசனம்:

إن الذين قالوا ربنا الله ثم استقاموا تتنزل عليهم الملائكة ألا تخافوا ولا تحزنوا وأبشروا بالجنة التي كنتم توعدون. نحن أولياؤكم في الحياة الدنيا وفي الآخرة ولكم فيها ما تشتهي أنفسكم ولكم فيها ما تدعون، نزلا من غفور رحيم

வானவர்கள் வாழ்த்துக் கூறி வரவேற்கும் நிலை பற்றி இந்த வசனங்கள் எடுத்துக் கூறுகின்றன. அதற்கான நிபந்தனை அல்லாஹ்வை ரப்பாக ஏற்று அதிலே ஸ்திரமாக இருக்க வேண்டும் என்பதுவே. அதனைத் தொடர்ந்துதான் "நீங்கள் கவலைப்பட வேண்டாம், பயப்பட வேண்டாம். உங்களுக்காக வாக்களிக்கப்பட்டுள்ள சுவர்க்கம் நிச்சயம்" என்ற விடயமும் வானவர்களால் பிரஸ்தாபிக்கப்படு கிறது. மேலும், உங்கள் நப்ஸ்கள் எதை எதையெல் லாம் விரும்புகின்றனவோ அவையும் அங்கு கிடைக் கும், நீங்கள் எதையெல்லாம் கேட்கிறீர்களோ அவையும் கிடைக்கும். இவை அனைத்தும் கிடைக் கப்பெறுவது நாம் கொண்ட கொள்கையில் உறுதி யாக இருப்பதனாலேயே. சிலருக்கு இப்படியும் அமையலாம், அவர்கள் தமது வாழ்நாளில் நல்லு ணர்ச்சி பெற்று, நல்ல முறையில் வாழ்ந்த பின்னர், அவர்களது ஆன்மாக்கள் ஜாஹிலியத்தின் பிடியில் அகப்பட்டு, கொள்கையில் இருந்து தூரமாக முடியும். அவ்வாறு நடந்தால் அது பாரிய துரதிஷ் டமாகும். அதனைத் தவிர்ப்பதற்கு 'இஸ்திகாமத்' அவசியமாகின்றது.

ஒரு நபித் தோழர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து தனக்கு ஒரு விடயத்தைக் கற்றுத் தருமாறும் அவ்விடயம் தான் யாரிடமும் இதற்குப் பின்னால் கேட்கத் தேவை இல்லை என்ற நிலையில் இருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் قل ربي الله ، ثم استقم "என்னு டைய ரப்பு அல்லாஹ் என்று கூறுங்கள். மேலும் அதில் நிலையாக இருந்து விடுங்கள்" என்று மட்டுமே வழிகாட்டினார்கள். குறித்த விடயத்தை மாநபி (ஸல்) அவர்கள் எப்படிப் புரிந்திருந்தார்கள் என்பதும் இங்கு முக்கியமானது.

ஒரு முறை மாநபி (ஸல்) அவர்கள் மஸ்ஜித் அந்நபவியில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த உமர் (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர் களைப் பார்த்து "உங்களுக்கு நரை ஏற்பட்டு விட் டதே" என்று கூறுகின்றார்கள். அதற்குப் பதில் தந்த நபியவர்கள் விடயத்தை இலேசாக எடுக்காமல் ஓர் ஆழமான பதிலைக் கூறுகின்றார்கள்: "ஸூரா ஹூத் என்னை நரைக்க வைத்து விட்டது" என்றார்கள். இது ஓர் அதிர்ச்சியான பதில். உமர் (ரழி) அவர்கள் இதனை எதிர்பார்க்கவில்லை. மேலும், நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "இந்த அத்தியாயத்தில் உள்ள ஓர் ஆயத்துதான் என்னை நரைக்க வைத்து விட்டது" "அது என்ன ஆயத்?" என உமர் (ரழி) அவர்கள் கேட்டதற்கு 'واستقم كما أمرت ومن تاب معك' உங்களுக்கு ஏவப்பட்டவற்றில் நீங்களும் உங்களோடு பாவமன்னிப்பு வேண்டுபவர்களும் நிலையாக இருக்க வேண்டும்."

நாம் வாழும் இந்தக் காலத்தில் எமக்குப் பல சவால்கள் இருக்கின்றன. புதிய, புதிய விளையாட் டுக்கள், கேளிக்கைகள், பொழுதுபோக்குகள், ஆபா சங்கள் என்பன எமக்கு மத்தியில் திணிக்கப்படுகின் றன. நாம் இஸ்திகாமத் என்ற நிலையில் இருந்து விடுபட பல வாய்ப்புக்கள் உள்ளன. இந்த இஸ்தி காமத் என்ற நிலையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமாயின், எமது உள்ளங்கள் பக்குவப்பட வேண்டும். நாம் எமது ஆசைகளைக் கட்டுப்படுத்தி அல்லாஹ் எதனை விரும்புகின்றான், நபி (ஸல்) அவர்கள் எதனை விரும்பினார்கள் என்ற புரிதலை எமது உள்ளங்களில் வலுப்படுத்த வேண்டும். எந்த சந்தர்ப்பத்திலும் இந்த விடயத்தில் தவறி விடாமல் இருக்க வேண்டும். இந்தப் பாதுகாப்புக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ்விடம் பிரார்த்திக்க வேண்டும்.

ஷஹ்ல் இப்னு ஹவ்ஷர் எனும் நபித் தோழர் கூறுகின்றார்: நபி (ஸல்) அவர்களின் மனைவிகளில் ஒருவரான உம்மு ஸலமா (ரழி) அவர்களிடம் போய் ஒரு விடயத்தைக் கேட்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அவரிடம் போய் "நபி (ஸல்) அவர்கள் உங்களோடு இருக்கும்போது அதிகமாகக் கேட்கும் துஆ ஒன்றைச் சொல்லித் தாருங்கள்" என்று கேட்டேன். அதற்கு அவர்கள் اللهم يا مقلب القلوب ثبت قلبي على دينك "உள்ளங்களைப் புரட்டுபவனே, எனது உள்ளத்தை உனது மார்க்கத்தில் ஸ்திரப்படுத்தி வைப்பாயாக! என்ற துஆவை நபி (ஸல்) அவர்கள் அதிகம் அதிகமாகக் கேட்டுக் கொண்டிருக்க நான் கேட்டிருக்கிறேன் என்றார்கள். 'ஏன் யா ரஸூலுல் லாஹ் இதனை அதிகம் கேட்கின்றீர்கள்?' என வினவினேன். அதற்கு நபியவர்கள் 'ஒரு மனிதனுடைய உள்ளம் ரஹ்மானுடைய இரு விரல்களுக்கு மத்தியில் இருக்கின்றது. அவன் நாடினால் நேர்த்தியாக விட்டு விடுவான், நாடினால் வழி தவற விட்டு விடுவான்' என்று கூறினார்கள். நாம் தற்போது நல்ல நிலையில் இருந்தாலும் தொடர்ந்து இதே நிலையில் இருக்கப் பிரார்த்திக்க வேண்டும்."

இந்த விபரிப்பைக் கேட்டுக் கொண்டிருந்த முஆத் பின் ஜபல் (ரழி) அவர்கள் رَبَّنَا لَا تُزِغْ قُلُوبَنَا بَعْدَ إِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا مِن لَّدُنكَ رَحْمَةً إِنَّكَ أَنتَ الْوَهَّابُ என்று கேட்டுக் கொண்டே இருந்தார்கள் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

எமது உள்ளங்கள் போகும் பக்கமெல்லாம் நாம் அலையக் கூடாது. இங்கு கூடியுள்ள நாம் நபி (ஸல்) அவர் கள் குறிப்பிட்டது போல் "எனது உம்மத்தின் வயதெல்லை 60-70 இற்கு இடைப்பட்டதாகும்" என்ற நிலையில் உள்ளவர்கள் அதிகமானோர் இருப்பதனால் இவ்வாறான ஒரு ஞாபகமூட்டலைச் செய்கின்றேன்.

இறுதியாக, ஸஹாபாக்களில் பலர் தமது இறுதி முடிவு நல்லதாக அமைய வேண்டும், தாம் தொடர்ந்தும் இம்மார்க்கத்தில் நிலையாக இருக்க வேண்டும் என்ற அவாவுடன் செயற்பட்டதை நினைவுபடுத்துகின்றேன். அதற்கு ஓர் உதாரணத்தை மாத்திரம் இங்கு முன்வைக்கின்றேன். 17 வயதே ஆன நபித் தோழர் ஹாரிஸா (ரழி) அவர்கள் ஒரு நாள் காலை வேளை நபி (ஸல்) அவர்களைச் சந்திக்கின்றார்கள், அப்போது நபி (ஸல்) அவர்கள் அவரைப் பார்த்து "உங்கள் காலைவேளை எப்படி இருக்கிறது?" என்று கேட்டார்கள். அதற்கு ஹாரிஸா (ரழி) அவர்கள் "நான் உண்மையான முஃமினாக இருக்கின்றேன்" என்று கூறினார்கள். அதற்கு நபியவர்கள் "ஒவ்வொரு விடயத்திற்கும் ஓர் உண்மை இருக்கிறது. உங்கள் ஈமானின் உண்மை நிலை என்ன?" என்று கேட்டார்கள். அதற்கு ஹாரிஸா (ரழி) பின்வரும் மூன்று விடயங்களைக் கூறினார்கள்:

1. நான் ரஹ்மானுடைய அர்ஷை பார்ப்பது போல் உள்ளது
2. சுவர்க்கவாதிகள் சுவர்க்கத்தின் இன்பங்களை அனுபவிப்பது போல் தெரிகிறது
3. நரகவாதிகள் நரகத்தின் வேதனையை அனுபவிப்பது போல் தெரிகிறது

அதற்கு நபியவர்கள் "நீங்கள் புரிந்து கொண்டீர்கள். அந்தப் புரிதலைத் தொடர்ச்சியாகப் பராமரிப்பீர்" என்று கூறினார்கள்.

இந்தச் சிறுவர் கூறிய பதிலைப் பாருங்கள். எவ்வளவு தூரம் உண்மைகளோடு உறவு கொண்டு வாழ்ந்தார்கள் நபித்தோழர்கள் என்பதற்கு இந்தப் பதில் சான்று பகர்கின்றதல்லவா? அடுத்த ஆறு வருடங்களில் உஹத் யுத்தத்திற்கான அழைப்பு வருகின்றது. வந்தவுடன் அந்தக் களத்தில் அன்னார் ஷஹீதானார்கள். இதன்போது அவரது தாய் நபி (ஸல்) அவர்களிடம் "எனது மகனின் நிலை என்ன? அவர் சுவர்க்கத்தில் இருக்கிறார் என்றால் நான் சந்தோஷப்படுவேன். இல்லையெனில், நான் தொடர்ந்தும் அழுது கொண்டே இருப்பேன்" என்று கூற நபி (ஸல்) அவர்கள் "ஹாரிஸாவினுடைய தாயே! சுவர்க்கங்கள் பல உள்ளன. அதில் உயர்ந்த சுவர்க்கத்தில் உமது மகன் இருக்கிறார்" என்று கூறினார்கள்.

ஒரு மனிதன் காலமெல்லாம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று வலியுறுத்த முடியாது. மனிதன் தவறு செய்வான். தவறு செய்தாலும் அவன் திருந்தி இஸ்திகாமத்துடன் வாழ முடியும்.

இதனைத்தான் நபித்தோழர்களிடத்திலும் நாம் காண்கின்றோம். நபித் தோழர் ஹன்ழலா (ரழி) அவர்கள் ஒரு நாள் "ஹன்ழலா முனாபிக்காகி விட்டார், ஹன்ழலா முனாபிக்காகி விட்டார்" என்று சொல்லிக் கொண்டு செல்வதைக் கண்ட அபூபக்கர் (ரழி) ஹன்ழலாவிடம் ஏன் என்று வினவியபோது "நான் நபி (ஸல்) அவர்களிடன் இருக்கும்போது ஈமானோடு இருக்கின்றேன். அவரை விட்டுச் சென்று விட்டால் அது குறைந்து விடுகிறதே" என்றார்கள். (53ஆம் பக்கம் பார்க்க....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “கவிவானம்”

**சிந்தனை மழைகளுக்கான ஆகாயம்...!**

**தயாரிப்பு:** மரிக்ஸ்

**அறிவித்தல்:**

“கவிவானம்” பகுதிக்கு நாடெங்கிலும் இருந்து தரமான கவிதைகளை எதிர்பார்க்கிறோம். உங்கள் கவிதைகள் மற்றும் கருத்துக்களை
kavivaanam@gmail.com
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது தயாரிப்பாளர்

**“கவிவானம்”**
இலக்கம் 77, தெமட்டகொட வீதி, கொழும்பு 09
என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

## துாயவன் அவன்..!

காரோடும்
தாரோட்டோரம்
தண்ணீர் ஓடும்
நன்னீரோடை கண்டதுண்டோ

நீரோடை ஓரம்
நீண்டு வளர்ந்த நாணல்
காதோடு தலையசைத்து
காற்றோடு கதைபேசும்
கண்கொள்ளாக்காட்சி கண்டதுண்டோ

தண்ணீர் மீதினிலே
நன்னீர் மீனினங்கள்
தாவிப் பாய்கையிலே
தலை சொட்டும்
தண்ணீர்த் திவலை கண்டதுண்டோ

அக்கினி நா நீட்டி
உலகையே உஷ்ணமேற்றி
பகலெல்லாம் ஒளியூட்டி
களைப்புற்ற பகலவன்
தன்னாடை களைந்து
பொன்மேனி காட்டி
தன்சூடு தணிக்க
தண்ணீரில் மூழ்குவதைக் கண்டதுண்டோ

எத்தனை விந்தைகளை
எந்திர உலகு
எடுத்து நீட்டினாலும்
விந்தைமிகு இயற்கைபோல
சுந்தரம் சேர்க்க
எந்திரத்தால் முடிந்திடுமோ

எழில்மிகு இயற்கையழகை
அள்ளி அருந்தும்போது
உளமார உச்சரிப்போம்
சுப்ஹானல்லாஹ்...

▸ முபாரிஷ் நளீமி

## தங்க முடிச்சுக்கள்

உன்னிடமிருந்து உன்னோடு
உன்னை நோக்கி நகரும் இந்த வாழ்க்கையின் மிகப்பெரும்
தங்க முடிச்சுக்களாகத்தான் ஸுஜூதுகள்
விதைக்கப்பட்டிருக்கின்றன.

தாய்மடியும் தந்தையின் தோளும்
அத்தனை பூரிப்புக்களையும் வஞ்சகமின்றி
இந்த ஸஜதா அள்ளித் தந்து விடுகின்றது.
நீண்ட நெடுநேர ஸுஜூதொன்றை பூரணப்படுத்தி விட்டு
எழும்போது
ஒட்டுமொத்த பிரபஞ்சமும்
உள்ளங்கைக்குள் அடங்கிவிடுகின்றது.

உரிமையுடன் உரையாடும் அந்த
ஒப்பற்ற நொடிகளில்தான்
உயிர் பூக்கின்றது.
உரிமையுடன் சன்டையிட்டு, வெட்கப்பட்டுச் சிரித்து
அழுது தீர்த்து
அத்தனையும் கொட்டித் தீர்த்து விட்டு எழுகையில் ஆன்மா
உனதன்பில் தொப்பலாக நனைந்து விடுகின்றது.

உன்னிடமிருந்து உன்னோடு
உன்னை நோக்கி நகரும் இந்த வாழ்க்கையின் மிகப்பெரும்
தங்க முடிச்சுக்களாகத்தான் ஸுஜூதுகள்
விதைக்கப்பட்டிருக்கின்றன.

ரீப்தா அதீக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாரம் இருநாள் வாழும் திருவாளர்!

இதயத்துடிப்பு எழுபத்திரண்டை
நாற்பத்தியெட்டு மணிநேரத்தில்
நசுக்கி வைத்தவர்கள்

வெள்ளி மாலை விழிக்கச் சொல்லி
இதயத்திற்கு அலாரம் வைத்தவர்கள்

திங்கள் காலை உறங்கச் சொல்லி
உச்சிமண்டையில் ஓங்கி அடித்தவர்கள்

வயிற்றுக்கு ஐந்து
வாழ்வுக்கு இரண்டு
விகிதாசாரத்தில் பிழைவிட்டவர்கள்

திங்கள் முதல் வெள்ளிவரை
காலண்டர் கட்டங்களை
கறுப்பாய் காணும்
நிறக்குருடர்கள்

இடையில் ஒரு 'போயா' வந்தால்
பல்லை இளிக்கும் பரிதாபங்கள்

ஆம் நாம்
வாரம் இருநாள்
வாழும் திருவாளர்!

தலைநகரில் தொழில் தேடி
தன் நகரின் எழில் தொலைத்தவர்கள்

உழைத்த வேர்வைக்கும்
உறங்கும் போர்வைக்கும்
பாதி பாதியாய் நாளைக் கிழித்தவர்கள்

பிறந்த ஊரில் இதயத்தையும்
பிழைக்கும் ஊரில் உடலையும்
பிரித்துவைத்த மாந்திரிகர்

ருசிப்பதற்கு அல்ல
செரிப்பதற்கு மட்டும்
உண்ணும் உயிரினங்கள்

பேருந்து பேக்கரிகளில்
வெதும்பிப் பிதுங்கும்
வேர்வை பன்கள்

ஏழு நாளும்
தொடர்ந்து வாழ
ஏங்கிக் கிடப்பவர்கள்

ஆம் நாம்
வாரம் இருநாள்
வாழும் திருவாளர்!

**அபூ அவாத்**

# பயணம்...!

பயணம்
ரகசியங்களின் சிநேகிதம்...
உடலெல்லாம் கண் முளைக்கும்
காட்சிகளின் திரைநீக்கம்...

ஒவ்வோர் எட்டிலும்
ஒவ்வோர் ஆடையிலும்...
ஒரு புதிய உலகம் திறந்து
கொள்ளும் அனுபவம்..!

நினைவுகள்...
நேரத்துக்கும் தூரத்துக்கும்
இடையில் கிடைக்கும்
புதையல்கள்...
கலாசார கண்டெடுப்புகள்...
கதைகள்...
பயணம் தரும்
பசுமை விளைவுகள்...!!

பரபரப்பான
நகரத்தின் கால்களில்
அமைதி போர்த்தியிருக்கும்
கிராமத்தின் மௌனங்களில்
இதுவரைபார்த்திராத
இடங்களில்...

பயணம்...
வாழ்வின் அற்புதங்களை
வெளிப்படுத்துகிறது...
மலை உச்சியிலிருந்து
சமுத்திரத்தின் வேர்களுக்கு...
தரைசூட்டிலிருந்து
ஆகாய அருவிகளுக்கு...

பயணம்
எம்மை அழைத்துச்
செல்கிறது...

சுவர்களை உடைத்து
அறியாதவை அறிமுகம்
செய்கிறது...
அழுக்கு நிலைப்பாடுகளை
அழிக்கிறது...

பார்வைப் பிழைகளை
பார்க்காத பக்கங்களை
சரிக்கும் பிழைக்கும்
சரித்திர ஆதாரங்களை....
காட்சி சாட்சியாய்
கண்களுக்குள் வைக்கிறது...!

நாவின் நினைவுக்குள்
புதிய உணவுகள்...
உடல் உறங்கிப் பார்க்கும்
புதிய விடுதிகள்...
புலன்கள் ரசிக்கும்

புத்தம் புது காலநிலைகள்...
உணர்வுகள்
விழித்துக் கொள்கிறது...

உயிர்
பரிசளிக்கப்படுகிறது...
ஆத்மா
ஆயிரம் புத்தகங்களை
வாசிக்கிறது...!
துருப் பிடித்திருக்கிறோம்
தூசு படித்திருக்கிறோம்


நீண்ட நாட்கள்
ஒரே இடத்தில் நிற்கிறோம்....
அசைவோம்
ஒரு பயணம் செல்வோம்...
சாக்கடை தேங்கி நிற்கும்
ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும்

▸ அதிஷா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் எம்மை விசாரித்துக் கொள்வோம்!



**அஷ்ஷெய்க் கியாஸ் முஹம்மது (நளீமி) M.A**
**தலைவர், இஸ்லாமிய கற்கைகள் பீடம்,**
**ஆயிஷா உயர் கல்விக் கல்லூரி, மாவனல்லை**



"விசுவாசிகளே! அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள். ஒவ்வோர் ஆன்மாவும் தான் நாளைக்காக (மறுமைக்காக) முற்படுத்தியிருப்பவற்றைப் பார்த்துக் கொள்ளட்டும். அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளட்டும். அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிந்தவன்." (57: 18) இத்திருமறை வசனம் முஹாஸபா எனும் சுயவிசாரணையை செய்து கொள்ளுங்கள் எனவும் அதற்கான உந்து சக்தியாக தக்வா அமைகிறது எனவும் உணர்த்துவது போல் காணப்படுகிறது.

கலீபா உமர் (ரழி) அவர்களின் பிரபலமான தொரு கூற்றும் இங்கு நோக்கத்தக்கது: "நீங்கள் விசாரிக்கப்படுவதற்கு முன்னர் உங்களை விசாரணை செய்து கொள்ளுங்கள். உங்களது செயல்கள் நிறுக்கப்படுவதற்கு முன்னர் நீங்களே அவற்றை நிறுத்துக்கொள்ளுங்கள்."

நாம் எமது வாழ்க்கைப் பயண ஓட்டத்தில் இடையிடையே சற்று நிதானித்து எமது செயல்கள் பற்றி மதிப்பீடு செய்து கொள்வதனையே முஹாஸபா எனும் பதம் குறிக்கின்றது. மறுமைக்கு யவ்முல் ஹிஸாப் என்றொரு பெயர் உண்டு. விசாரணை நாள் என்ற பொருளில் மறுமை விசாரணைக்கு முன்னர் நாம் எம்மை விசாரித்துக் கொள்வது சிறந்ததல்லவா?

> பொதுவாக சுய விசாரணையின்போது அடிப்படையான கடமைகள் மற்றும் பரவலாக இடம் பெறும் தவறுகள் குறித்தே நாம் சிந்திப்பது வழமையாகும். செய்யத் தவறிய கடமைகளைப் பற்றி நாம் சிந்திப்பது குறைவே.

**குறைகளையும் தவறுகளையும் கண்டறிதல்**

சுய விசாரணை மூலம் நான் எனது குறைகளை இனங்கண்டு கொள்ள முடியுமாக இருக்கும். எப்போது நான் குறைகள் தவறுகளைக் கண்டு கொள்ளும் மனோநிலையைப் பெறுகிறேனோ அந்தக் கணம் தவ்பாவை நோக்கி மீளும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கிறது. அப்போது குறைகளை நிறைகளாக நான் மாற்றிட முயல்வேன். இறை திருப்தியை இலக்காகக் கொண்ட சிறந்த அடியானாக என்னை உயர்த்திட முயல்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஹாஸபா எமது வாழ்வில் நாளாந்தம் இடம் பெறுவது சிறப்பானது. இரவில் தூங்குவதற்கு முன்னர் சில நிமிடங்களை ஒதுக்கி அன்றைய தின நிகழ்வுகளை மீட்டிப் பார்ப்பதும் நன்மைகள் செய்யக் கிடைத்த வாய்ப்புக்களுக்கு அல்லாஹ்வைப் புகழவும் தவறுகள் குறைகளுக்காக தவ்பா செய்யவும் மனிதர்களுடன் தொடர்பான தவறுகளுக்காக அவர்களிடம் மன்னிப்புக் கேட்டு பரிகாரங்களைத் தேடவும் முற்படுவோம். அவ்வாறு வாராந்தம், மாதாந்தம், வருடாந்தம் என நமது வாழ்வில் இடம் பெறும் முஹாஸபா அடுத்த கட்ட திட்டமிடல்களுக்கு எமக்குப் பெரிதும் துணை செய்வதாக அமையும்.

பொதுவாக சுய விசாரணையின்போது அடிப்படையான கடமைகள் மற்றும் பரவலாக இடம் பெறும் தவறுகள் குறித்தே நாம் சிந்திப்பது வழமையாகும். செய்யத் தவறிய கடமைகளைப் பற்றி நாம் சிந்திப்பது குறைவே.

இஸ்லாமியக் கல்வியை தேடுவது, தஃவாப் பணியில் பங்காற்றுவது, பெற்றோர் உறவினர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வது முதலானவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

**தூண்டும் காரணிகள்**

சில காரணிகள் எம்மை சுய விசாரணைக்கு இட்டுச் செல்வதையும் இங்கு குறிப்பிட வேண்டும். நல்லவர்களுடனான உறவு, இரவுத் தொழுகை, கப்ருகளை தரிசித்தல், அல்குர்ஆனுடனான தொடர்பு, அறிவுப் பாதையில் பயணித்தல் என்பன இதில் அடங்கும்.

மூன்று வகை உள்ளங்களுக்குள் ஒன்றாக அமையும் நிந்திக்கின்ற (லவ்வாமா) உள்ளத்தின் முக்கிய வெளிப்பாடாக சுய விசாரணை அமையும் என்ற கருத்தை இமாம் ஹசனுல் பஸரி (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஒரு மனிதன் சுய விசாரணைப் பண்பிலிருந்து தூரமாக இருப்பது அவனது உள்ளத்தின் ஆரோக்கியமற்ற தன்மைக்கான சான்றாக மாறுகின்றது என்பது இதிலிருந்து விளங்குகின்றது.

தூதர் (ஸல்) அவர்கள் தனது பணியின் இறுதிக் கட்டத்தில் தனது தோழர்களை நோக்கி "நான் எத்திவைத்து விட்டேனா?" என வினவ அவர்கள் "ஆம்" எனக் கூறி அதனை அங்கீகரித்தபோது "யா அல்லாஹ்! நீ இதற்கு சாட்சியாளனாக இருப்பாயாக" என பிரார்த்தித்தார்கள் நபிகளார். இது முஹாஸபா உணர்வின் வெளிப்பாடு.

**நபித்தோழர்களின் முன்மாதிரி**

மூத்த நபித்தோழர்கள் பலரும் இச்சிந்தனை தொடர்பில் உயர் தரத்தில் இருந்தார்கள் என வரலாற்றுச் சான்றுகள் கற்றுத் தருகின்றன. சுய விசாரணை உணர்வின் உச்சத்தில் இருந்த அபூபக்கர் (ரழி) அவர்கள் "நான் மறுமை விசாரணைக்கு உட்படாத வகையில் ஒரு மரமாக, மண்ணாக இருந்திருக்கக் கூடாதா?" என அங்கலாய்த்துக் கொண்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

"உமது இறைவனின் தண்டனை நிச்சயமானது" (52:7) எனும் திருமறை வசனத்தை ஓதிய உமர் (ரழி) அவர்கள் அதன் தாக்கத்தால் நோயுற்ற நிகழ்வு இதனையே உணர்த்துகின்றது.

உஸ்மான் (ரழி) அவர்கள் கப்ருகளை தரிசிக்கும் போது நீண்ட நேரம் அழுபவராக இருந்ததும் இந்த முஹாஸபா உணர்வில்தான்.

அபீ முலைகா எனும் தாபிஈ கூறுகிறார்: "நான் முப்பது நபித்தோழர்களை சந்தித்திருக்கிறேன். அவர்கள் அனைவருமே தன்னிடத்தில் நயவஞ்சகத்தனம் இருக்குமோ எனும் அச்சத்தில் வாழ்ந்து வந்தனர்."

சுய விசாரணையை வெறும் மனதோடு மாத்திரம் சுருக்கிக் கொள்ளாது எழுத்துருப்படுத்துவது காத்திரமான விளைவுகளுக்கு வழிவகுப்பதாய் அமையும். முஹாஸபாவின்போது நாம் இனங்காணும் குறைகளை எழுதி, அவற்றுக்கான தீர்வுகளையும் திட்டமிடல்களையும் குறித்துக் கொள்வதன் மூலம் அடுத்த கட்ட செயற்பாடுகளை எம்மால் உறுதியாக முன்னெடுக்க முடியுமாக இருக்கும்.

இன்றியமையாத சுய விசாரணையைக் கிரமமாகக் கடைப்பிடித்து உலக, மறுமை வெற்றிப் பயணத்தை உறுதி செய்த வண்ணம் ஒவ்வொருவரும் பயணிப்போமாக.


**துணை நின்றவை**


1. மதாரிஜுஸ் ஸாலிகீன்- இப்னுல் கையிம்
2. பலாஇலுஸ் ஸஹாபா வஸ்ஸாலிஹீன்- ஷஃராவி
3. அஸ்ஸுஹ்த் வர்ரகாஇக்- இப்னு முபாரக்
4. அத்தவ்பா- தகிய்யுத்தீன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொழுகை உயிரோட்டம் பெற

**ஒருமுறை நபியவர்கள் தொழுகைக்கு நின்றபோது பின்னால் உள்ளவர்களைப் பார்த்து "இதுதான் பிரியா விடைத் தொழுகை அல்லது இறுதித் தொழுகை என்று கருதித் தொழுங்கள்" என்று கூறினார்கள்.**




**அஷ்ஷெய்க்**
**எம்.எஸ்.எம். ஸியாஸ் (கபூரி), B.A. (அஸ்ஹரி)**
**விரிவுரையாளர், ஆயிஷா உயர் கல்விக் கல்லூரி, மாவனல்லை**


இஸ்லாம் விதித்துள்ள கடமைகளுக்குப் பின்னால் 'மக்ஸத்' (مقصد) எனும் நோக்கங்கள் இருக்கின்றன. தொழுகையின் பிரதான நோக்கம் ஓர் அடியான் தனது உள்ளத்தாலும் உடலாலும் சிந்தனையாலும் படைப்பாளனோடு நேரடித் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதாகும்.

அவன் 'அல்லாஹு அக்பர்' என்று தக்பீர் கட்டி "ரப்புல் ஆலமீன் ஆகிய உனக்கே புகழ் அனைத்தும். நீயே அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்... தீர்ப்பு நாளின் அதிபதியும் நீயே" எனப் பிரகடனம் செய்கின்றபோது அல்லாஹ் தன்னோடு இருக்கின்ற மலக்குமார்களிடம் இப்பிரகடனத்தை மிகவும் புகழ்ந்து கூறுகிறான். தொடர்ந்தும் அந்த அடியான் "உன்னையே வணங்குகிறோம், உதவி தேடுவதும் உன்னிடமே" எனக் கூறி அருள்பாலிக்கப்பட்டவர்களின் நேரான பாதையை வேண்டும் போது அல்லாஹ் "இதுவே எனக்கும் எனது அடியானுக்கும் உள்ள உறவாகும்; எனது அடியான் கேட்டது நிச்சயம் அவனுக்குக் கிடைக்கும்" என்று வாக்குறுதியும் அளிக்கின்றான்.

ஒரு முஸ்லிம் தன்னைப் படைத்தவனோடு மிகவும் ஆத்மார்த்த ரீதியாகத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதற்கான ஓர் உன்னத ஏற்பாடுதான் தொழுகை எனும் வணக்கமாகும். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு நபித்துவம் கிடைத்ததும் வானுலகோடு தொடர்பு கொள்ள செய்து கொடுக்கப்பட்ட முதல் ஏற்பாடே இந்தத் தொழுகை எனும் கடமைதான்.

தனது தூதருக்கு "போர்த்திக் கொண்டிருப்பவரே! இரவில் எழுந்து நிற்பீராக!" என்று கூறிய அல்லாஹ் இரவுத் தொழுகை எத்தகைய சிந்தனா ரீதியான, உள ரீதியான, உயிரோட்டமிக்க ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதையும் தொடர்ந்து பின்வருமாறு கூறுகிறான்: "நிச்சயமாக இரவில் (வணக்கத்தை நிறைவேற்ற) எழுந்திருப்பது உள்ளமும் நாவும் ஒன்றிணைந்திருக்க மிக்க வலிமையுடையதாகும். இன்னும் சொல்லால் மிக நேர்த்தியானதுமாகும்." *(73: 6)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள்:

"எனது கண்குளிர்ச்சி தொழுகையில்தான் அமைந்துள்ளது." (அந்நஸாஈ)

நபியவர்கள் கூறிய இக்கூற்றில் பெரியதோர் உண்மையைக் காண முடிகிறது. ஒரு மனிதனது உள்ளத்தில் நிம்மதி, சந்தோஷம், ஆனந்தம் போன்றவை இருந்தால் மட்டுமே கண்களில் குளிர்ச்சி ஏற்படும்; உள்ளத்தில் சீரிய சிந்தனையும் உயர்ந்த நோக்கங்களும் உதிக்கும். இத்தகைய ஓர் உணர்வு பூர்வமான இபாதத்தாகவே தொழுகை உள்ளது.

அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்: "நீங்கள் பொறுமையைக் கொண்டும் தொழுகையைக் கொண்டும் உதவி தேடுங்கள். நிச்சயமாகத் தொழுகையானது உள்ளச்சம் கொண்டவர்களைத் தவிர மற்றவர்களுக்குப் பளுவாகவே இருக்கும்." (அல் பகரா: 45)

மேலும் "நிச்சயமாக தொழுகை மானக்கேடான, வெறுக்கத்தக்க அம்சங்களில் இருந்து தடுக்கும்." (அல் அன்கபூத்: 45)

மேலும் அல்லாஹ் கூறும்போது "நிச்சயமாக முஃமின்கள் வெற்றி பெற்று விட்டனர். அவர்கள் தங்களுடைய தொழுகையில் உள்ளச்சம் கொண்டவர்களாக இருப்பர்." மேலும் கூறும்போது "அவர்கள் தங்கள் தொழுகையைக் குறித்த நேரத்தில் பேணிப் பாதுகாப்பவர்கள்; இவர்கள்தான்பிர்தவ்ஸ் எனும் உயர்ந்த சுவனத்தின் சொந்தக்காரரர்கள்" (அல் மூஃமினூன்: 1-12) என்றெல்லாம் புகழாரம் செய்கின்றான்.

ஓர் அடியான் தொழுகையின் நேரத்தை எதிர்பார்த்திருந்து பூரணமாக வுழூ செய்து அதானுக்கு பதில் கூறி தனது உள்ளத்திலிருக்கும் உலகுசார் அம்சங்களை எல்லாம் களைந்து தொழுமிடத்திற்குச் சென்று 'அல்லாஹு அக்பர்' என்று தக்பீர் கட்டினால் அவனது உள உணர்வு எத்தகையதாக அமைந்து விடும் என்பதை நினைத்துப் பார்க்கின்றபோது மனம் பூரிப்படைகிறது. அன்று ஸஹாபாக்கள் உயிரோட்டம் மிக்கதாகவே தமது தொழுகைகளைநிறைவேற்றினார்கள். யுத்தத்தின்போது தமது உடலில் எதிரிகளால் எறியப்பட்ட அம்புகளைக் களைவதற்காக அடுத்த ஒரு தோழர் முயன்றால் உடனே பாதிப்புக்குள்ளான நபித்தோழர் "சற்றுப் பொறுத்திருங்கள். நான் தொழுகைக்காக தக்பீர் கட்டியதும் எனது உடலில் இருந்து இவற்றை எடுத்து விடுங்கள்" என்று வேண்டிக் கொள்வார் என்று வரலாற்றில் காண முடிகிறது. இவ்வாறுதான் அவர்கள் தொழுகையில் தமது உள்ளத்தை, சிந்தனையை, உடலையெல்லாம் அல்லாஹ்வோடு தொடர்புபடுத்திக் கொண்டார்கள்.

எமது தொழுகைகள் எப்போதும் உயிரோட்டம் மிக்கதாக அமைவதற்கு அல்லாஹ்வின் தூதர் பல வழிகாட்டல்களை வழங்கியுள்ளார்கள். ஒருமுறை நபியவர்கள் தொழுகைக்கு நின்றபோது பின்னால் உள்ளவர்களைப் பார்த்து "இதுதான் பிரியாவிடைத் தொழுகை அல்லது இறுதித் தொழுகை என்று கருதித் தொழுங்கள்" என்று கூறினார்கள்.

மற்றுமொரு தடவை தொழுகையிலும் கள்வன் இருப்பதாகக் கூறினார்கள். அதற்கு நபித்தோழர்கள் "அது எவ்வாறு?" என வினவியபோது "ருகூவையும் ஸுஜூதையும் சரிவர செய்யாதவர்களே அவர்கள்" என விளக்கமளித்தார்கள்.

எமது தொழுகைகளை உயிரோட்டமாக மாற்றிக் கொள்வதற்காக நாம் பின்வரும் அம்சங்களை முயற்சிக்கலாம்:

1. தொழுகையின் நேரத்தை ஆசையோடும் ஆர்வத்தோடும் எதிர்பார்த்துக் காத்திருத்தல்.
2. எத்தகைய கஷ்டமான நேரத்திலும் வுழூவை பூரணமாகச் செய்து கொள்ளல்.
3. உள்ளத்தில் இருக்கும் உலக விவகாரங்களை ஒரு பக்கம் ஒதுக்கிவிட்டு தொழுகைக்குச் செல்லல்.
4. ஆரம்பத் தக்பீர் கட்டியது முதல் ஸலாம் கொடுக்கும் வரை ஓதும் ஓதல்களைப் பொருள் அறிந்து ஓத முயற்சித்தல்.
5. குறிப்பாக சூரா பாதிஹாவின் கருத்தை முழுமையாக விளங்கி ஓதுதல்.
6. இந்தத் தொழுகை முடிந்தால் அடுத்த தொழுகை எனக்குக் கிடைக்குமா என்ற அச்சத்தோடு தொழுகையை நிறைவேற்றல்.
7. தொழுகை முடிந்ததும் என்னுடைய தொழுகை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமே எனப் பிரார்த்தித்தல்.


இத்தகைய நிலையில் எனதும் உங்களதும் தொழுகை அமையுமாயின் அது எத்தனை உயிரோட்டம் மிக்கதாக ஆகிவிடும் என்பதை எண்ணிப் பார்ப்போமாக!

■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்ஹம்துலில்லாஹ்



அளவற்ற அருளாளனுக்கே அனைத்துப் புகழும்

தடைப்படாது சீராக விரிந்து சுருங்கும்
சுவாசப்பைகளுக்காக அல்ஹம்துலில்லாஹ்
தடம் மாறாது நாடி நாளங்கள் வழியே
ஒக்ஸிஜனை காவிச் செல்லும்
இரத்த நதிகளின் ஆரோக்கியத்திற்காகவும்
அல்ஹம்துலில்லாஹ்

ஆயிரம் நுணுக்குக்காட்டிகளை விட
அற்புத ஆற்றல் கொண்ட விழித்திரைகளுக்காக
அல்ஹம்துலில்லாஹ்
தினந்தோறும் புத்தாடை போர்த்தும்
தோல் திசுக்களுக்காகவும்
அல்ஹம்துலில்லாஹ்

நன்றி சொல்ல நாவைப் படைத்தமைக்காகவும்
அந்த நாவில் இழையோடும் அல்குர்ஆனை
அருளியமைக்காகவும் - அல்ஹம்துலில்லாஹ்
அவன் புகழ் பாட ஆற்றல் தந்தமைக்காகவும்
அல்ஹம்துலில்லாஹ்

❍ **அப்ரா ஆதில்**
உயர் தரம் - விஞ்ஞானப் பிரிவு
முஸ்லிம் மகளிர் கல்லூரி

# சந்தர்ப்ப துஆக்கள்

இந்த வாழ்வின் ஒவ்வொரு நொடியும் அல்லாஹ் எங்களுக்கு தந்த அன்பு பரிசுகள். ஆகவே, எமது வாழ்வின் அனைத்து தருணங்களிலும் அல்லாஹ்வை நினைவு கூர்ந்து கொண்டு, அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி கொண்டு வாழ வேண்டியது எமது கடமையாகும்.

ஒரு நாளின் விழிக்கும் தருணத்தில் இருந்து தூங்கும் நொடி வரை அனைத்து பகுதிகளிலும் சந்தர்ப்ப துஆக்கள் ஓத வேண்டிய தருணங்கள் இருக்கின்றன. அவை அல்லாஹ்வின் பெயரைக் கொண்டு ஆரம்பிப்பதாகவும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதாகவும் அல்லாஹ்விடம் உதவி தேடுவதாகவும் அமைந்துள்ளன.

சந்தர்ப்ப துவாக்களை மரணம் இட்டுக் கொள்வோம். இந்த வாழ்வை எப்போதும் அல்லாஹ்வின் நினைவுடன் வாழ்வோம்.

# நபியவர்களின் வாழ்வில் இருந்து...



ஒரு தடவை நபியவர்களின் சமூகத்துக்கு யாசகர் ஒருவர் வருகின்றார். அவரின் தோற்றமே அவர் எந்த அளவு வறுமையின் அகோரப் பிடிக்குள் சிக்கி உழன்று கொண்டிருக்கின்றார் என்பதை தெளிவாக பறைசாற்றுகின்றது.

அவர் நபியவர்களிடமும் யாசகம் கேட்கிறார். ஆனால், நபியவர்களோ அந்த மனிதரிடம் "உங்களிடம் என்ன இருக்கின்றது?" என திருப்பி கேட்கின்றார். அவர் தன்னிடம் ஒரே ஒரு போர்வை மாத்திரமே இருக்கின்றது என்கின்றார்.

நபியவர்களின் ஆலோசனைப்படி அந்த போர்வை ஏலத்தில் விற்கப்படுகின்றது. பகரமாக இரண்டு திர்கம்கள் கிடைக்கின்றன. அதில் ஒன்றுக்கு உணவு வாங்கும் படியும் மற்றதுக்கு ஒரு கோடரி வாங்கு படியும் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

நபி அவர்கள் அந்தக் கோடரியை அவரிடம் கொடுத்து, அதன் மூலம் விறகுவெட்டி சம்பாதித்து சொந்தக்காலில் வாழுமாறு உபதேசம் செய்து அனுப்பி இருக்கிறார்கள்.

இதுவும் தான் நாம் நபியவர்களிடம் கற்க வேண்டிய முக்கியமான வாழ்வியல் பாடமாகும். பிரச்சனை ஒன்று வரும்போதுஅதற்கான உடனடி தீர்வையும்நிரந்தர தீர்வையும்நாம் தேடிக் கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும். எமது தோழர் ஒருவர் தவறுகள் செய்யும் போது அவரை அதிலிருந்து மீட்டெடுப்பது போன்றே அவரை அந்த தவறின் பக்கம் செல்ல முடியாமல் பாதுகாப்பதற்காகவும் சில வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழகான அன்பும் நேசம் எனும் அழகான பாடலும்

அது இரவு நேரம்

அங்கொன்றும் இங்கொன்றுமாக சின்னஞ்சிறு விண்மீன்கள் கண்சிமிட்டிக் கொண்டிருக்க, மெலிதாய் வீசிக் கொண்டிருந்த இளந்தென்றல் மேனிகளை வருடிச் சென்று கொண்டிருந்தது.

அது இரவு நேரத் தொழுகை

ஒரு தடவை நபியவர்கள் தொழுவித்துக் கொண்டிருக்கின்றார்கள். தொழுகையை விட நபியவர்கள் இந்த உலகத்தில் பெரிதாக எதையும் நேசித்ததில்லையே! அதனால், தொழுகையைக் கொஞ்சம் நீட்டிச் செல்ல அவர்களின் மனம் விரும்புகின்றது.

ஆனால், திடீரென்று ஓர் அழுகைச் சத்தம்!!

தொழுவதற்காக வந்திருந்த ஒரு பெண்ணின் குழந்தை வீரிட்டு அழ ஆரம்பிக்கின்றது. அந்தக் குழந்தையின் அழுகைச் சத்தம் நபியவர்களுக்கும் கேட்டு விடுகின்றது. நபியவர்கள் சற்றும் தாமதிக்கவில்லை. முடியுமான அளவு தொழுகையைச் சுருக்கிக் கொண்டார்கள். "நான் தொழுகையை நீட்டித் தொழுவிக்கத் தான் விரும்பினேன். ஆனால், அந்தக் குழந்தையின் தாய்க்கு அழும் தனது குழந்தையுடன் தொழுவது கஷ்டத்தை ஏற்படுத்தும் என்பதால் தொழுகையைச் சுருக்கிக் கொண்டேன்" என்று கூறினார்கள் நபியவர்கள்.

இதுதான் அன்பு! மற்றவர்களின் உணர்வுகளையும் தேவைகளையும் புரிந்து கொண்டு தான் தனது உயிரையும் உறவுகளையும் விட உன்னதமாய் நேசித்த தொழுகையைக் கூட சுருக்கமாகத் தொழும் அளவு நபியவர்கள் தனது மக்களை நேசித்தார்கள்.

இன்னொரு தடவை நபியவர்கள் சந்தைப் பகுதிக்குச் சென்று கொண்டிருந்தார்கள். அங்கே யாரோ ஒரு வியாபாரி தனது வர்த்தகப் பொருட்களை ஒட்டகத்தின் மேல் வைத்துவிட்டு எங்கோ சென்றுவிட்டார். அந்த பொருட்களின் பாரத்தைச் சுமக்க முடியாமல் கஷ்டத்தில் தள்ளாடித் தவித்துக் கொண்டிருந்தது அந்த அப்பாவி ஒட்டகம். இந்த காட்சியைக் கண்ட நபியவர்களுக்குக் கடுமையான கோபம் வந்துவிட்டது. உடனே அந்த வியாபாரியை வரவழைத்து கடுமையாக எச்சரித்து உடனடியாக அந்த ஒட்டகத்திலிருந்து பொருட்களை இறக்கிவிடச் சொன்னார்கள்.

அன்பு என்பது இதுதான். அன்பு என்பது அழகான பாடல். அதனால்தான் இஸ்லாத்திற்கு 'அன்பின் மார்க்கம்' என்ற அழகான பெயரும் உள்ளது. இஸ்லாத்தின் ஒவ்வொரு போதனையும் அன்பு என்ற அகராதியில் உள்ள சொற்களால் மட்டுமே உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த உலகில் நாம் சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் அன்பு என்பது அடிப்படைத் தேவையாக இருக்கின்றது. அந்த அன்பு வளர வளர இந்த உலகம் இன்னும் இன்னும் அழகாக மெருகூட்டப்படுகின்றது. கோபங்களும் சண்டைகளும் அழிந்து எங்கும் மகிழ்ச்சி துள்ளி விளையாடும். அன்பும் நேசமும் வரண்டு போன உள்ளங்களில்தான் பொறாமை, வஞ்சகம், கோபம் போன்ற முட்செடிகள் வளர்ந்து காயப்படுத்துகின்றன.

எமது தாய்க்குக் கொடுக்கும் ஒற்றை முத்தமாக இருக்கலாம், எமக்காக வாயிற்கதவைத் திறந்து விடுபவருக்கான ஒரு புன்னகையாக இருக்கலாம், கொடிய வெயிற் காலங்களில் ஒரு செடிக்கு வழங்கும் ஒரு குவளை ஈரமான தண்ணீராக இருக்கலாம், நாம் பள்ளிக்குத் தொழச் செல்லும்போது நமது அயல்வீட்டுத் தம்பியையும் அழைத்துச் செல்வதாக இருக்கலாம்... அனைத்தும் அழகாக அன்புதானே!

❖ **நபீல் அபாபீல்**


"
**நீங்களும் எம்மோடு சந்தாதாரராகுங்கள்...**
"

Scan for online subscription





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# 'ஹிஜ்ரத்'

## விஷேட கவியரங்கம்

தாருல் ஈமான் இலக்கிய வட்டம் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் கொழும்புப் பிராந்தியத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த 'ஹிஜ்ரத்-விசேட கவியரங்கம்' தாருல் ஈமான் கேட்போர் கூடத்தில் 15.08.2023 (செவ்வாய்க்கிழமை) மாலை இடம்பெற்றது.

இக்கவியரங்கிற்கு தேசிய சூரா சபையின் பொதுச் செயலாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான இலக்கியச் செம்மல் கலாபூஷணம் கவிஞர் ரஷீத் எம். இம்தியாஸ் தலைமைதாங்கினார். நிகழ்வு இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் பொதுச் செயலாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான பாரிஸ் ஸாலி அவர்களின் வரவேற்புக் கவிதையுடன் ஆரம்பமாக, பிரபல கவிஞர்களான கவிஞர் ரவூப் ஹஸீர், கவிஞர் கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ், கவிஞர் நாச்சியாதீவு பர்வீன், கவிஞர் புத்தளம் மரிக்கார் ஆகியோர் தம் கவிகளால் கவியரங்கிற்கு சிறப்புச் சேர்த்தனர். இக்கவியரங்கில் இலக்கிய வட்டம் சார்ந்த பலர் கலந்துகொண்டனர்.

இஸ்லாமிய உலகின் முதல் வரிசைக் கவிஞரான ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரழி) அவர்களை நினைவு கூரும் வகையில் 'ஹஸ்ஸான் பின் ஸாபித் அரங்கம்' எனப் பெயர் சூட்டப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிட்டுக் காட்ட வேண்டிய சிறப்பம்சமாகும்.




ரம்ய லங்கா அமைப்பின் கப்ருக சவிய எனும் தென்னை மர நடுகை செயற்திட்டத்தின் மற்றுமொரு நிகழ்வு ஆனமடுவ பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள சங்கட்டிகுளம் கிராம சேவகர் பிரிவில் கடந்த 11ஆம் திகதி ஜூலை மாதம் 2023 அன்று வெற்றிகரமாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.எச்.எம் உஸைர் இஸ்லாஹி, ஆனமடுவ உதவி பிரதேச செயலாளர் கே.ருஸ்தா, சிட்டி கார்டன் சார்பாக ரியாத், ரம்யா லங்காவின் பணிப்பாளர் டி.எம்.ஏ சப்ரி, புத்தளம் மாவட்ட DIRC இணைப்பாளர் முஸ்னியா, தென்னை பயிர்செய்கை சபை பிராந்திய முகாமையாளர், ஆனமடுவ, தென்னை பயிர்செய்கை உத்தியோகத்தர் மற்றும் ஏனைய பொறுப்பு வாய்ந்த அரச ஊழியர்கள், மதகுருமார்கள் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் சுமார் இருநூறு பயனாளர்களுக்கான மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலைத்தேயவியல் (occidentalism)

## ஒரு வளர்ந்து வரும் விமர்சனக் கலை



**கலாநிதி அப்துல் மலிக் அபூபக்கர் PhD**
**(மதங்களுக்கு இடையிலான ஒப்பீட்டாய்வு பிரிவு, சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகம், பாகிஸ்தான்)**



### அறிமுகம்

மேலைத்தேயவியல் (Occidentalism) பற்றிய கருத்தாடலுக்கு முன்பாக 'கீழைத்தேயவியல்' (Orientalism) என்ற விமர்சனக் கலை குறித்து நோக்குவோம். கீழைத்தேயவியல் நன்கு வளர்ச்சி பெற்றிருக்கும் ஒரு துறையாகும். கிழக்குலக நாடுகளில் வாழும் சகல மக்களினதும் உள்வீடு, அடுப்பங்கரை வரை எதையும் விட்டுவைக்காது மேற்கின் நிபுணர்கள் மேற்கொண்ட விமர்சன ரீதியான ஆய்வின் மூலம் இத்துறை தோற்றம்பெற்று நன்கு வளர்ச்சி அடைந்திருக்கிறது.

இந்த ஆராய்ச்சிகள் மூலம் மேற்குலகுக்கு சார்பான கீழைத்தேயம் பற்றிய சிந்தனை ஒன்றையும் அவர்கள் உருவாக்கினார்கள். அந்த சிந்தனை மேற்கை உலகின் ஆசானாகக் கற்பனை செய்வதற்கு வழி செய்ததோடு கிழக்கின் மீதான தனது ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டவும் மேற்கின் பழைய, புதிய காலனித்துவ சக்திகளுக்குத் துணை நின்றது.

'மேலைத்தேயவியல்' என்பது மேலைத்தேய வாழ்கை முறை, அரசியல், பொருளாதாரம், கலாசாரம் போன்ற இன்னோரன்ன அம்சங்கள் உள்ளிட்ட அனைத்தையும் ஆய்வுக்குட்படுத்தி மேலைத்தேயத்தின் யதார்த்தத்தை வெளிக்கொணரும் ஓர் அறிவுத் துறையாகும். கீழைத்தேயவியலில் கிழக்குலக மக்கள் பற்றி விரிவாக நடந்திருப்பது போன்ற துல்லியமான ஆய்வுகள் மேலைத்தேயவியலில் இன்னும் இடம் பெறவில்லை. மேலைத்தேயத்தின் அனைத்து விவகாரங்களும் விமர்சன ரீதியான ஆய்வுகளுக்குத் துல்லியமாக உட்படுத்தப்படும்போதே மேலைத்தேயவியல் வளர்ச்சி பெற முடியும்.

### கிழக்கும் கீழைத்தேயவியலும்

மேற்குக்கு சார்பாக கீழைத்தேயம் பற்றிய விமர்சன ஆய்வுகளில் ஈடுபட்டவர்கள் 'கீழைத்தேயவியலாளர்கள்' எனப்படுகின்றனர். இவர்கள் கிழக்குலகின் எந்தவொரு நாட்டையும் இனத்தையும் மதத்தையும் சமூகத்தையும் விட்டுவைக்காமல் அவற்றின் சகல விவகாரங்களையும் ஆய்வுகளுக்கு உட்படுத்தியதோடு அந்த ஆய்வுகளில் மேற்கு நலன்களுக்கு சார்பான திரிபுகளையும் புகுத்தியுள்ளனர்.

அவ்வாறு கீழைத்தேயவாதிகளின் ஆய்வுகளில் திரிபுகளுக்குட்படுத்தப்பட்ட பாதகமான விளக்கங்களில் அதிகமானவை இஸ்லாம் பற்றியதாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. இஸ்லாம் பற்றிய நேர்வகையான ஆய்வுகளை மேலைத்தேய நிபுணர்கள் சிலர் மேற்கொண்டிருந்த போதிலும் இஸ்லாம் பற்றிய பிழையான புரிதல்களைப் பல ஆய்வாளர்கள் தமது ஆய்வுகளில் வெளிப்படுத்தியுள்ளனர்.

பிரித்தானிய அறிஞர் வில்லியம் றேல்ப் இஞ்ஜே *(1860-1954)* இஸ்லாம் மற்றும் அதன் தூதர் (ஸல்) அவர்கள் சம்பந்தமாக விரிவுரைகளை ஆற்றியுள்ளார். அவரிடம் "இஸ்லாம் குறித்து தகவல்களை எங்கிருந்து பெற்றுக் கொண்டீர்கள்?" என வினவப்பட்டபோது அவர் 'அல்ப் லைலா வ லைலா' (ஆயிரத்து ஓர் இரவுகள்) எனும் நூலைச் சுட்டிக் காட்டினார். அது அலாவுதீனும் அற்புத விளக்கும், அலிபாபாவும் நாற்பது திருடர்களும், சிந்துபாத்தின் ஏழு கடற்பயணங்கள் போன்ற பாரசீக-இந்திய கதைகளை உள்ளடக்கிய ஒரு பண்டைய கதை நூலாகும்.

மேற்குலக நாடுகளின் ஆக்கிரமிப்புக்கு எதிராக ஆசிய நாடுகள் ஒருமித்த குழுவாக (Pan-Asianism) செயல்பட வேண்டுமென அழைப்பு விடுத்த ஜப்பானின் பெரும் எழுத்தாளர் ஷூமே ஒகாவா (Shumei Okawe 1866-1957) ஆவார். மேற்கு மற்றும் கிழக்கு நாகரிகங்களுக்கு இடையில் மோதல் உண்டு; ஆசிய கலாசார பண்பாட்டிலேயே ஆசிய நாடுகள் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தியுள்ளார். மேற்கத்திய நாகரிக திணிப்புக்கு எதிராகவும் கீழைத்தேய சிந்தனைக்கு எதிராகவும் குரல் கொடுத்த சிந்தனையாளர்களில் இவர் உள்ளடங்குகிறார் மேற்குலகம் பற்றிய விமர்சனங்களை இந்திய சிந்தனையாளர்களான ராம் மோகன் ரோய் *(1772-1833)*, விவேகானந்தர் *(1863-1902)*, மகாத்மா காந்தி *(1869-1948)* மற்றும் சீன குவாங் டோன்க் பல்கலைக்கழக ஆய்வாளர் சேங்பின்கொங் போன்றோர் முன்வைத்துள்ளனர்.

**எட்வார்ட் ஸயீதின் விமர்சன நோக்கு**

'நவீனத்துவத்தை மிகைத்தல்' எனும் தலைப்பில் **1942**இல் ஜப்பானின் Kyoto நகரில் இடம் பெற்ற மாநாடே மேலைத்தேயவியலின் (Occidentalism) துவக்கம் என புருமா மற்றும் மார்கலிற் ஆகியோர் கூறுகின்றனர். இருப்பினும், இதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே முஸ்லிம்கள் உட்பட பல கீழ்நாட்டு அறிஞர்களும் மேற்கின் வாழ்வியலுக்கு எதிரான விமர்சனங்களைப் பதிவு செய்துள்ளனர். கீழைத்தேயவியலுக்கு எதிராக எட்வார்ட் ஸயீத் முன்வைத்த முக்கிய மாற்றுக் கருத்துக்கள் கீழைத்தேயவியலுக்குப் பெரும் இடிகளாக வீழ்ந்தன. கீழைத்தேயவியல் (அதாவது கிழக்குலகத்திற்கு எதிரான மேற்கின் பார்வை) முப்பெரும் நிலைப்பாடுகளில் நிலை கொண்டுள்ளது என அவர் குறிப்பிடுகின்றார்.

1. மேற்கு என்றால் புத்தியை உபயோகிப்பதாகும், அபிவிருத்தி அடைந்ததாகும், மனித நலன் கொண்டதாகும், இன்னும் மற்றவர்களை விட மேம்பட்டதாகும். கிழக்கு அசாதாரண இயல்பு கொண்டதாகும், வழிதவறிப் போகும் தன்மை கொண்டதாகும்,குறை அபிவிருத்தி கொண்டதாகும் மற்றும் ஏனையவர்களுக்கு அடிபணிந்து செல்வதாகும். எனவே, மேற்குக்கும் கிழக்குக்கும் இடையில் முற்று முழுதான முரண்பாடு மேலோங்கி நிற்கிறது.
2. கிழக்கு என்றாலே மாற்றங்களை விரும்பாததாகும். கிழக்கு நாடுகள் வேறுபட்டவை அல்ல. ஜப்பானிலிருந்து மொரோக்கோ வரையான அனைவரையும் குறித்த கீழைத்தேய நோக்கு ஒன்றே (Monolithic) ஆகும். கிழக்கு தான் யார் என்பதை வரைவிலக்கணப்படுத்த ஆற்றல் அற்றுள்ளது. எனவே, மேற்கு தான் கிழக்கு பற்றியும் வரைவிலக்கணத்தை உருவாக்கும் அந்தஸ்தில் உள்ளது. கிழக்கிற்கு விடியலை மேற்கு தர முடியும்.
3. கிழக்கு என்றாலே அச்சத்தைக் கிளறி விடுவதாகும். சீனர்கள், மொங்கோலியர்கள் மற்றும் ஏனைய கிழக்கு நாட்டவர்கள் அபாயத்தை ஏற்படுத்த கூடியவர்கள். எனவே, கிழக்கில் உள்ளவர்களை அடக்குமுறை, ஆக்கிரமிப்பு போன்ற வழிகள் மூலம் கட்டுப்படுத்த வேண்டும்.

கிழக்குலகம் பற்றிக் கீழைத்தேயவாதிகள் கொண்டுள்ள மோசமான நிலைப்பாடுகளையே இந்தக் கூற்றுக்கள் சுட்டிக்காட்டுகின்றன. கீழைத்தேயவாதிகளுக்கு எதிராக எட்வார்ட் ஸயீத் முன்வைத்துள்ள இந்த விமர்சனங்கள் மேலைத்தேயவியல் பேசுவோருக்கு செழிப்பான சிந்தனை

**"இஸ்லாம் குறித்து தகவல்களை எங்கிருந்து பெற்றுக் கொண்டீர்கள்?" என வினவப்பட்டபோது அவர் 'அல்ப் லைலா வ லைலா' [ஆயிரத்து ஓர் இரவுகள்] எனும் நூலைச் சுட்டிக் காட்டினார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிமுறைகளை அடையாளப்படுத்திக் கொடுத்துள்ளன. கீழைத்தேயவியல் பற்றிய கடுமையான விமர்சனத்தைக் கிளறி விட்ட பாரிய வகிபாகம் எட்வார்ட் ஸயீதின் Orientalism எனும் இலக்கியப் படைப்புக்கே சேரும்.

'மேலைத்தேயவியல்: மேற்கு அதன் எதிரிகளின் பார்வையில்'(Occidentalism: The West in the Eyes of its Enemies) எனும் நூல் 2004இல் வெளியாகி மேற்கு பற்றிய விமர்சனத்திற்கு உந்துசக்தியாக நிலைபெற்றுள்ளது. நெதர்லாந்தை சேர்ந்த ஐ.என். புரூமா மற்றும் இஸ்ரேலின் அவிஷாஹி மெர்கலிட் ஆகியோர் இந்நூலை எழுதியுள்ளனர். மேற்கு ஜெர்மன் ரோமன்ஸிய சிந்தனையாளர்கள், ரஷ்யாவின் பாரம்பரிய விழுமியங்களில் ஸ்திரமாக உள்ள ஸ்லேவோபில் இயக்கத்தினர், ஜப்பானிய-ஆசிய பாரம்பரியப் பற்றாளர்கள், சீன மாஓயிஸ்ட் அறிஞர்கள் மற்றும் மேற்கத்தேய கலாசார திணிப்பை எதிர்க்கும் முஸ்லிம் புத்திஜீவிகள் என்போர் மேற்குலக சிந்தனைகள் சம்பந்தமாகக் கொண்டிருக்கும் எதிர் நிலைப்பாடுகளை புரூமாவும் மெர்கலிடும் அடையாளப்படுத்துகின்றனர்.

**முஸ்லிம் அறிஞர்களின் பங்களிப்பு**

1991இல் எகிப்திய அறிஞர் ஹசன் ஹனபி (1935-2001) எழுதிய 'மேற்கத்தியவியல் ஓர் அறிமுகம்' அரபு உலகில் இத்துறையின் முக்கியத்துவத்திற்கு வலுவூட்டியது. மேற்கு இந்த உலகின் தலைமைத்துவத்தை இழந்து விட்டது. கிழக்கு வழிகாட்டும் தலைமைத்துவப் பொறுப்பைத் தனதாக்கும் தருணம் இதுவாகும். அதாவது, மேற்குலகு தலைமைத்துவக் கடமையை வெற்றிகரமாக நிறைவேற்றவில்லை என்பதே ஹசன் ஹனபியின் வாதமாகும்.

"உங்களைக் கோத்திரங்களாகவும் சமூகங்களாகவும் படைத்துள்ளோம். நீங்கள் ஒருவர் மற்றவரை அறிந்து கொள்வதற்காக ஆகும்" (சூரா அல்ஹுஜராத்: 13) என்பதற்கேற்ப மேற்குலகைப் பற்றி அறிவதே மேலைத்தேயவியலாகும் என இத்துறையில் காலூன்றி நிற்கும் பேராசிரியர் கலாநிதி மாஸின் முதப்பகானிகூறியுள்ளார். "நீச்சல்கலையைக் கோட்பாட்டு ரீதியாகக் கற்றால் மாத்திரம் போதாது. நீரில் இறங்கி நீந்த வேண்டும். மேற்குலகின் விவகாரங்களைக் கேட்பதும் பேசுவதுமாக இருப்பது போதாது. மாறாக, அங்குள்ள ஒவ்வொரு வெளிப்பாட்டையும் ஆராய வேண்டும்" என அவர் கூறுகின்றார். ஐரோப்பியர்கள், அமெரிக்கர்கள், சீனர்கள், ஜப்பானியர்கள் என எல்லோரும் முஸ்லிம்களைப் பற்றி ஆய்வுகளை நடத்துவது போல் இவர்களது விவகாரங்கள் தொடர்பாக ஆராய்ச்சிகளை நடத்தும் கல்வித்துறை மையங்கள் நிறுவப்பட வேண்டும் எனும் அவாவை ஜோர்தானில் பிறந்து, சவூதியின் ரியாழ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக உள்ள முதப்பகானி தெரிவித்துள்ளார்.

சவூதி அரேபியாவின் கலாநிதி ஈத் அல் யஹ்யா "மேலைத்தேயவியலை ஒரு கலையாக வளர்க்க வேண்டும். மேற்கின் ஒவ்வொரு புதிய விவகாரத்தையும் ஆய்வு செய்து நிதானமாக யோசித்து முடிவுகளை எடுப்பது அவசியம்" என்கிறார்.

எகிப்தின்முகமத்இல்ஹாமி, மோரோக்கோவின் அப்துல்லாஹ் ஷாரீப், துருக்கியின் அப்துல்லாஹ் மதீன், ஜமீல் ஐதின் மற்றும் ஜெர்மனின் ஜமால் மலிக் என பல அறிஞர்களும் மேலைத்தேயவியல் துறைக்கு ஆய்வுகளை வழங்கியுள்ளனர்.

**முடிவுரை**

இத்துறைக்கு ஆய்வுகளை வழங்கும் கீழ்நாட்டுச் சிந்தனையாளர்கள் கவனம் செலுத்த வேண்டிய பரப்புக்கள் என கருதப்படுகின்ற அம்சங்கள் சில:

1. மேற்கிலிருந்து பயன் பெறுதல் என்பதைப் புறக்கணிக்காது, கிழக்கை அதன் தனித் தன்மைகள் மற்றும் தலைமைத்துவத் தகைமைகள் போன்றவற்றில் நிலைகொள்ளச் செய்தல்.
2. மேற்கத்தேய சிந்தனைகளின் அடித்தளத்தை ஆக்கபூர்வமாக விமர்சித்தல்.
3. கீழைத்தேயவியலின் தீய உள்நோக்கங்களிலிருந்து விடுபட்டு மேற்குலகின் விவகாரங்கள் பற்றி கிழக்கு நாடுகளின் அறிஞர்கள் தமது நோக்குகளைக் கொண்டு வருவதே மேலைத்தேயவியலாகும்

**மேலதிக வாசிப்புக்கு:**


إلهامي، محمد نحو تأصيل إسلامي لعلم الاستغراب،القاهرة، دار التقوى،2015.

حنفي،حسن،المقدمة في علم الاستغراب،القاهرة،الدار الفنية،1991.

Said, Edward.W, Orientalism, London, Routledge & Kegan Paul Ltd,1978.

Abeyasekara, Ananda, On Rewriting Buddhism Or How Not to Write a History, www.berghahnjournals.com.

Metin,Abdullah, Occidentalism: An Eastern Reply to Orientalism, www.dergipark.org.tr.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அக்கரைப்பற்று




ஹெம்மாதகமை



பண்டாரகொஸ்வத்த



புத்தளம்



ஓட்டமாவடி

# விழுமியம் அறிமுக நிகழ்ச்சிகள்

விழுமியம் சஞ்சிகையின் இரண்டாவது இதழின் அறிமுக நிகழ்ச்சிகள் நாட்டின் பல பிரதேசங்களிலும் விமரிசையாக நடைபெற்றன. சஞ்சிகையின் அவசியம், சஞ்சிகை பற்றிய ஆய்வுரை போன்ற முக்கிய தலைப்புகளில் நடைபெற்ற இந்நிகழ்வுகளில் பெருந்திரளான வாசகர்கள் கலந்து சிறப்பித்தனர்.

அந்த வகையில் ஹெம்மாதகமை, ஓட்டமாவடி, அக்கரைப்பற்று, பண்டாரகொஸ்வத்த, புத்தளம், ஆகிய இடங்களில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

ஹெம்மாதகமையில் இடம்பெற்ற நிகழ்வில் கலாநிதி அஷ்ஷெய்க். எம்.எஸ்.எம். ஹபீஸ் (வருகைதரு விரிவுரையாளர், கொழும்புப் பல்கலைக் கழகம்) அவர்களும் ஓட்டமாவடி நிகழ்வின் ஆய்வுரையை அஷ்ஷெய்க் எம்.ரீ.எம். ரிஸ்வி (மஜீதி) (சிரேஷ்ட விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக் கழகம்) அவர்களும் அக்கரைப்பற்று நிகழ்வின் ஆய்வுரையை கலாநிதி. அப்துல் ரஸாக் (சிரேஷ்ட விரிவுரையாளர், தென் கிழக்குப் பல்கலைக் கழகம்) அவர்களும் பண்டாரகொஸ்வத்தயில் நடைபெற்ற நிகழ்வில் அஷ்ஷெய்க். எஸ். ஏ.எம். ரிஸ்வி சுபைர் (நளீமி) (பிரதேச வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்) அவர்களும் புத்தளத்தில் திரு நாகராஜா (ஓய்வு நிலை அதிபர்) அவர்களும் பாணந்துறையில் சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ் (பொதுச் செயலாளர், தேசிய சூரா சபை) அவர்களும் சஞ்சிகைக்கான ஆய்வுரைகளை நிகழ்த்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலேசிய அரசியல்



**எம்.எல்.எம். தௌபீக்**
M.A. (Political Science), PGDE

தென்கிழக்காசியாவின் ஒரு பிரதான இஸ்லாமிய நாடான மலேசியா *1957*ஆம் ஆண்டு பிரித்தானிய காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது. அது முதல் *2018* வரையான *61* வருட நீண்ட காலப்பகுதிக்கு அம்னோ (UMNO) எனப்படும் United Malay's National Organization (தேசிய ஐக்கிய மலாயர்கள் அமைப்பு) ஆட்சியிலிருந்தது. இதில் விவசாய நாடாக இருந்த மலேசியாவை பொருளாதார முன்னேற்றமடைந்த கைத்தொழில் நாடாக மாற்றிய பிரதமர் மஹாதீர் முஹம்மதின் *1981* முதல் *2003* வரையான *22* வருட ஆட்சிக் காலம் குறிப்பிடத்தக்கதாகும்.

பிரித்தானிய காலனித்துவ காலப்பகுதியில் மலாயர்களின் மேன்மையை நிலைநிறுத்தி, ஐக்கியத்தைக் கட்டியெழுப்பி இனம், சமயம், நாடு என்பவற்றின் கண்ணியத்தைக் காப்பதற்கான போராட்டத்தை முன்னெடுக்கவென்று *1946*ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதே இந்த UMNO என்ற அரசியல் இயக்கமாகும்.

### பொதுத் தேர்தல்- 2022

கடந்த வருடம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பாராளுமன்றத்துக்கு *222* உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக மூன்று கூட்டணிகளுக்கிடையே பலத்த போட்டி நிலவியது. நீண்ட அரசியல் வரலாற்றைக் கொண்ட அம்னோவை பிரதான கட்சியாகக் கொண்ட தேசிய முன்னணியால் (National Front) வெறும் *30* ஆசனங்களையே கைப்பற்ற முடிந்தது. மலேசிய இஸ்லாமிய கட்சி (Parti Islam Se Malaysia)யைப் பிரதான கட்சியாகக் கொண்ட தேசிய கூட்டணி (National Alliance) *74* ஆசனங்களைப் பெற்றது. ஆனால், பிரதமர் அன்வர் இப்ராஹிம் தலைமையிலான மக்கள் நீதிக் கட்சி, ஜனநாயக செயல் முன்னணி மற்றும் இஸ்லாமிய கட்சியிலிருந்து பிரிந்து புதிய கட்சியாக உருவெடுத்த அமானா கட்சி என்பவற்றின் கூட்டமைப்பான நம்பிக்கைக் கூட்டணி (Hope of Alliance) *82* ஆசனங்களைப் பெற்றது. ஆட்சியமைக்கத் தேவையான பெரும்பான்மைப் பலத்தை எந்தக் கட்சியினாலோ கூட்டணியினாலோ பெற்றுக் கொள்ள முடியவில்லை. விளைவாக தொங்கு பாராளுமன்றம் உருவானது. இதனால் அன்வர் இப்ராஹிம் தலைமையிலான நம்பிக்கைக் கூட்டணிக்கு, அக்கட்சியினால் தொடர்ந்து ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுவந்த அம்னோ கட்சியுடன் இணைந்தே கூட்டரசாங்கம் உருவாக்க வேண்டி ஏற்பட்டது.

### அன்வர் இப்ராஹிமின் எழுச்சி

மலேசியாவின் உலகப் பிரசித்தி பெற்ற மலாயா பல்கலைக்கழகத்தில் மாணவராக இருந்தபோது மலேசிய இஸ்லாமிய இளைஞர் இயக்கத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Malaysian Islamic Youth Movement உருவாக்குவதில் அன்வர் இப்ராஹிம் முனைப்புடன் செயற்பட்டார். 1971ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த இஸ்லாமிய இளைஞர் இயக்கத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராகவும் 1974 - 1982 வரை அதன் இரண்டாவது தலைவராகவும் இவர் பதவி வகித்தார்.

மலாய் மொழியில் சுருக்கமாக ABIM என்று அழைக்கப்படும் இந்த இயக்கத்தின் தலைவராக இருந்த காலப்பகுதியில் மிகவும் செல்வாக்குமிக்க நபராக உருவெடுத்த அன்வர் இப்ராஹிம் அவர்களது ஆளுமையின் வீச்சு தேசமெங்கும் பேசுபொருளாகியது. விளைவாக, அன்றைய பிரதமர் மஹாதீர் முஹம்மது தனது அரசியல் பயணத்தில் இணைந்து கொள்ளுமாறு விடுத்த அழைப்பை ஏற்று 1982 இல் அம்னோ (UMNO) கட்சிக்கூடாக தேசிய அரசியலில் கால் பதித்தார் அன்வர் இப்ராஹிம். 1982 தொடக்கம் 1998 இல் மஹாதீர்-அன்வர் பிளவு ஏற்படும் வரையில் பல்வேறு கெபினட் அமைச்சுப் பதவிகளை வகித்ததோடு நாட்டின் பிரதிப் பிரதமராகவும் அன்வர் இப்ராஹிம் செயற்பட்டார். இவ்வாறு மஹாதீர் அரசில் பாரிய செல்வாக்குப் பெற்று விளங்கிய அன்வர் இப்ராஹிம் ஏன் தூக்கி வீசப்பட்டார்? ஏன் கைது செய்யப்பட்டார்? போன்ற வினாக்கள் இன்றும் அன்வர் ஆதரவாளர்களால் எழுப்பப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. மலேசிய அரசியலில் மஹாதீரின் காலம் பொற்காலம் என்றால் அதன் இயக்க சக்தியாக இருந்தவர் அன்வர் இப்ராஹிம்தான் என்றும் எதிர்காலத்தில் அன்வரின் எழுச்சி மஹாதீரின் அதிகாரத்திற்கு சவாலாக மாறி விடும் என்பதற்காகவே அவர் மீது ஒழுக்கக்கேடு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு அவர் அரசிலிருந்தும் தூக்கி வீசப்பட்டதோடு ஆறு ஆண்டுகள் சிறையிலும் அடைக்கப்பட்டார் என அவரது ஆதரவாளர்கள் இன்றும் குறிப்பிடுவர்.

### அன்வர் இப்றாஹிமின் மீள் எழுச்சி

மலேசியாவின் முன்னேற்றப் பாதையில் மஹாதீர் - அன்வர் பிளவு மிகப் பெரிய சரிவை ஏற்படுத்தி, துரித பொருளாதார வளர்ச்சியைப் பல தசாப்தங்கள் பின் தள்ளிவிட்டதாக மலேசிய பொருளியல் வல்லுநர்கள் அபிப்பிராயப்படுவர். 2004ஆம் ஆண்டு அன்வரின் சிறைவாசம் முடிவுக்கு வந்தாலும் நீதிமன்ற தடையுத்தரவு காரணமாக நேரடி அசியலில் ஈடுபட 2008 வரை காத்திருக்க வேண்டி இருந்தது.

அன்வர் இப்ராஹிம் கைது செய்யப்பட்டதன் பின்னர் அவரது துணைவியாரால் ஆரம்பிக்கப்பட்ட அரசியல் சமூக சீர்திருத்த இயக்கம் பின்னாளில் மக்கள் நீதிக் கட்சியாகப் பரிணாமமெடுத்தது. 2008ஆம் ஆண்டு முதல் இந்தக் கட்சிக்கூடாக் நேரடி அரசியலில் பிரவேசித்த அன்வர் இப்ராஹிம் நீண்ட போராட்டத்துக்கு பின்னர் கடந்த 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலின் பின்னர் மலேசியாவின் பிரதமரானார்.

### மலேசிய சமூகப் பல்வகைமையும் அரசியல் மாதிரியும்

2020ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 63.5 வீத மக்கள் இஸ்லாத்தையும் 18.7 வீதமானோர் பௌத்த மதத்தையும் 9.1 வீதமானோர் கிறிஸ்தவத்தையும் 6.1 சதவீதமானோர் இந்து மதத்தையும் பின்பற்றும் அதேவேளை 2.7 வீதமளவில் அனிமிஸ்டுகள், கன்பூசியனிஸ்டுகள் போன்ற ஏனைய மதக் குழுவினரும் வாழ்கின்றனர். இனவாரியாக நோக்குகின்றபோது மலேசியாவின் பூர்வீகக் குடிகள் எனப்படுகின்ற சில இனக் குழுமங்களை உள்ளடக்கிய பூமி புத்திரர்கள் அல்லது மண்ணின் மைந்தர்கள் (Sons of Soil) எனப்படுவோர் 69.9 வீதமாவர். இவர்களுள் மொத்த சனத்தொகையில் 57 வீதமானோர் மலாயர்களாவர். பிரதான சிறுபான்மையினமாக 22.8 வீதமளவில் சீனர்களும் அறுதிச் சிறுபான்மையினராக 6.6 வீதமளவில் இந்தியர்களும் உள்ளனர்.

மலேசிய அரசியலமைப்பில் பூமி புத்திரர்களின் மேலாதிக்கவாதத்தை (Supremacy) நிலைநிறுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் பெரும்பான்மை, சிறுபான்மை பேதங்கள் இன்றி சகல இன, மதக் குழுமங்களையும் 'நாம் மலேசியர்' என்ற மகுடத்தின் கீழ் உள்ளீர்ப்பதற்கான அரசியல் முறைமை (Political System) கட்டமைக்கப்பட்டமை அதன் துரித வளர்ச்சியில் பெரிதும் தாக்கம் விளைவித்தது எனலாம்.

மத்திய, மாநில அரசுகளுக்கிடையே அரசியலமைப்புக்கூடாக அதிகாரப் பங்கீடு (Devolution of Power) செய்யும் விதமாக சமஷ்டி முறையையும் (Federal System) நிறைவேற்று நிர்வாக அதிகாரத்தைப் பாராளுமன்றுக்குப் பொறுப்புக் கூறும் பிரதமர் தலைமையிலான அமைச்சரவைக்கு வழங்கும் பாராளுமன்ற முறையையும் (Parliamentary



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



System) இன்னும் சில அதிகாரங்களை மன்னருக்கு வழங்கி மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட மன்னராட்சி முறையையும் மலேசிய அரசியல் முறைமை பின்பற்றுகிறது.

**மாநிலத் தேர்தல்கள் - 2023**

மலேசியாவில் செலன்ங்கூர், திரங்கானோ, கிளாந்தான், பினேங், கெடாஹ் மற்றும் நெகாரி செம்பிலான் ஆகிய ஆறு மாநில அரசுகளுக்கான தேர்தல் கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்றது.

பிரதமர் அன்வர் இப்ராஹிமினதும் அவரது கூட்டரசாங்கத்தினதும் பலத்தையும் அவர்களுக் குள்ள மக்கள் செல்வாக்கையும் உரசிப் பார்க்கும் தேர்தலாக இத்தேர்தல் அமையப் போகிறது என அரசியல் ஆய்வாளர்களும் செயற்பாட்டாளர் களும் முன்வைத்த கருத்துக்கள் இம்மாநில அரசுத் தேர்தலுக்கு சர்வதேச முக்கியத்துவத்தை வழங்கியி ருந்தது.

பிரதமர் அன்வர் இப்ராஹிம் தலைமையிலான அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் கூட்ட ணியான Alliance of Hope (நம்பிக்கைக் கூட்டணி) பிரதான எதிர்க்கட்சியான Parti Islam Se Malaysia (மலேசிய இஸ்லாமிய கட்சி) மற்றும் Malaysian People's Movement Party (மலேசிய மக்கள் இயக்கக் கட்சி) ஆகியவற்றின் கூட்டணியான National Allia nce என்பவற்றுக்கிடையே தேர்தலில் பலத்த போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்பட்ட நிலை யில், 245 மாநில சட்டமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக இடம்பெற்ற இத்தேர்தலில் 570 வேட்பாளர்கள் களம் கண்டனர். முடிவுகளின் படி 146 ஆசனங்களைக் கைப்பற்றி அமோக வெற்றியீட்டிய National Alliance இஸ்லாமிய கட்சியின் பெருங் கோட்டைகள் என கூறப்படு கின்ற திரங்கானோ, கெடாஹ், கிளன்டான் ஆகிய மூன்று மாநிலங்களையும் 2/3 பெரும்பான்மைப் பலத்துடன் தன்னகப்படுத்தியது. பிரதமர் அன்வர் இப்ராஹிம் தலைமையிலான Alliance of Hope நெகாரி செம்பிலான மாநிலத்தில் 2/3 பெரும்பான் மையுடனும் செலன்ங்கூர், பினேங் ஆகிய இரு மாநிலங்களில் சாதாரண பெரும்பான்மையுடனும் வெற்றி கொண்டு தனது பலத்தை ஒருவாறு தக்க வைத்துக் கொண்டுள்ளது. ஆளும் கூட்டணியில் இணைந்திருக்கும் நீண்ட அரசியல் வரலாற்றைக் கொண்ட அம்னோ கட்சி தலைமையிலான National Front 19 ஆசனங்களை மட்டுமெ பெற்றுக்

**மஹாதீர் அரசில் பாரிய செல்வாக்குப் பெற்று விளங்கிய அன்வர் இப்ராஹிம் ஏன் தூக்கி வீசப்பட்டார்? ஏன் கைது செய்யப்பட்டார்? போன்ற வினாக்கள் இன்றும் அன்வர் ஆதரவாளர்களால் எழுப்பப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன.**

கொண்டது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது ஆளும் அரசாங்கக் கூட்டணியை விட 66 மேலதிக ஆசனங் களைக் கைப்பற்றிய எதிரணிகளின் கூட்டமைப் பான தேசிய கூட்டணியின் (National Alliance) கை இந்தத் தேர்தலில் மேலோங்கியுள்ளமை எழுச்சி பெற்றுவரும் தென்கிழக்காசியாவின் அரசியல், பொருளாதார சூழமைவிலும் மலேசியாவின் இராஜதந்திர நகர்விலும் எத்தகைய அதிர்வுகளை ஏற்படுத்தப் போகிறது என்பதே தற்சமயம் சர்வதே சத்தின் கவனயீர்ப்பைப் பெற்றிருக்கிறது.

2022ஆம் ஆண்டு பாராளுமன்ற பொதுத் தேர்த லிலும் இறுதியாக இடம்பெற்ற ஆறு மாநில அரசு களுக்கான தேர்தலிலும் இஸ்லாமிய கட்சியினு டைய செல்வாக்கு மேலோங்கிச் சென்றிருப்பதை அவதானிக்க முடிகிறது. இவ்விரு தேர்தல்களிலும் போட்டியிட்ட கூட்டமைப்புகளை விடுத்து கட்சி கள் பெற்றுக் கொண்ட ஆசனங்களைத் தனித்தனி யாக நோக்குகின்றபோது இஸ்லாமிய கட்சி அதிகப்படியான ஆசனங்களைக் கைப்பற்றியிருக் கின்றது. இந்நிலையானது 1951ஆம் ஆண்டு தொடக்கம் இஸ்லாமிய கோட்பாடுகள் மற்றும் நெறிமுறைகளின் அடிப்படையில் மலேசியாவின் அரசியல், பொருளாதாரம், கல்வி, சமூகம் உள் ளிட்ட சகல விவகாரங்களும் வடிவமைக்கப்பட வேண்டும் என்ற சிந்தனையைப் பேசி வருகின்ற இஸ்லாமிய கட்சியினுடைய செல்வாக்கு முன்னோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது என்ப தைத்தான் கட்டியம் கூறுகின்றது. ○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன அழுத்த முகாமை


## (Stress Managment)

## ஓர் இஸ்லாமியப் பார்வை




**கலாநிதி பைறோஸ் முஸ்தபா Ph.D**

விரிவுரையாளர் மெய்யியல் மற்றும் உளவியல்சார் உளவளத்துணை, சமூக விஞ்ஞானத் துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

Stress என்ற ஆங்கிலச் சொல் மிகவும் பரிச்சயமான ஒன்றாகவும் தவிர்க்க முடியாததாகவும் மாறி விட்டது. இன்றைய உலகம் மனித வாழ்வை சிக்கலான ஒரு நிலைக்கு இட்டுச் சென்றுள்ளதால், பலரது வாழ்க்கை கவலையும் உளநெருக்கீடும் நிறைந்ததாக மாறியுள்ளது.

மனிதனின் செயற்பாடுகளுக்கு உள நெருக்கீடு (மன அழுத்தம்) அவசியமானதாக இருந்தபோதிலும் அதன் அளவு அதிகரிக்கும்போது நமது ஆரோக்கியத்தையும் செயற்திறனையும் பாதிப்பதோடு, நம் தனிப்பட்ட வாழ்க்கையிலும் தொழில் வாழ்க்கையிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

ஒரு புதிய சூழல் அல்லது பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றபோது நம் உள்ளத்திலும் உடலிலும் ஏற்படும் மாறுதல்களே நெருக்கீடாகக் கொள்ளப்படுகின்றது. நாங்கள் சந்திக்கின்ற பிரச்சினைகளுக்கு அல்லது நிலைமைகளுக்கு முகம் கொடுக்க முடியாதுள்ளபோது நெருக்கீடு உருவாகின்றது.

மனிதனின் தேவை (Demand) உடல், உளவியல் துலங்கல்கள் (Responses) என இரு கூறுகளைக் கொண்டது. இரண்டிலும் ஏற்படும் சமமின்மையை நாம் நெருக்கீடு அல்லது மன அழுத்தம் எனக் கூற முடியும்.

சில வேளைகளில் நெருக்கீடானது ஆரோக்கியமான விளைவுகளையும் தரக் கூடியது. உதாரணமாக, குறிப்பிட்டகாலத்திற்குள் வேலையொன்றினை நிறைவேற்றுமாறு அழுத்தம் கொடுப்பது ஒரு சிறந்த முடிவுக்குக் காரணமாக அமையலாம். இங்கே நெருக்கீடானது நேரிடையானதாக (Eustress) அமைகின்ற அதேவேளை எதிர்மறையாகவும் அமையக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. குறிப்பிட்ட ஒரு வேலையை சாத்தியமற்றகாலஇடைவெளிக்குள் செய்ய எத்தனிக்கின்றபோது அது எதிர்மாறான விளைவை ஏற்படுத்தி விடுகின்றது.

> **இறைவிசுவாசம் கொண்ட ஒரு மனிதன் "இவை அனைத்தும் இறைவனிடமிருந்தே வந்தவை. அவற்றை இழந்தாலும் நாம் அவற்றின் உரிமையாளர்கள் இல்லை என்ற உறுதியான நம்பிக்கையினால் இழப்புக்கள் அவனில் எத்தகைய அதிர்வினையும் ஏற்படுத்தாது.**

நெருங்கிய ஒருவரின் பிரிவு, இழப்பு, நண்பர்களிடையே சீரற்ற உறவு, வேலைத்தளத்தில் ஏற்படும் பிரச்சினைகள், தொழில் மாற்றம், பொருளாதார நெருக்கீடு, வருமான இழப்பு, இடப்பெயர்வு, பாகுபாடு காட்டப்படுவதாய் உணர்தல் மற்றும் தீராத நோய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமை, அனர்த்தம் அல்லது கலவரம், வன்முறைச் செயல்கள், எதிர்காலம் பற்றிய அச்சம், யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ள முடியாமை ஆகியன மன அழுத்தத்தை ஏற்படுத்தலாம் என இனங்காணப்பட்டுள்ளது.

நெருக்கீட்டினால் ஏற்படும் உடலியல் மாற்றங்களாக தசை இறுக்கம், தலையிடி, தலைவிறைப்பு, வயிற்றுநோவு, நெஞ்சு நோவு, சோர்வு, தலைச்சுற்று, பசியின்மை அல்லது அதிக பசி, மாதவிடாய்க் கோளாறுகள் என ஒரு நபருக்கு ஒன்றோ அல்லது பலவோ இருக்கலாம்.

நெருக்கீடு உளச் சமநிலையிலும் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. சிலபோது அது உணர்ச்சி மாற்றங்களையும் ஏற்படுத்துகின்றது. எல்லாவற்றிற்கும் கோபப்படுதல், எதிலும் நிலையாக இருக்க முடியாத தன்மை, மனதை ஒருநிலைப்படுத்த முடியாமை, யோசித்துக் கொண்டிருத்தல், மறதி, பதகளிப்பு, பயம், பதற்றம், ஒரே எண்ணம் மீண்டும் மீண்டும் வருதல் போன்றவற்றையும் குறிப்பிடலாம்.

இவ்வுடல், உள மாற்றங்கள் நடத்தைகளிலும் மாறுதல்களை ஏற்படுத்தும். செயற்பாடுகளில் வேகம் குறைதல் அல்லது மிக அதிகமாகச் செயற்படுதல், மது, போதைப்பொருள் பாவனை, புகைத்தல், ஒரு வேலையில் தொடர்ந்து ஈடுபட முடியாமை, நித்திரைக் குழப்பம் மற்றும் பயங்கரக் கனவுகள், ஆக்கிரமிப்பு நடத்தை, தனிமையை விரும்புதல் போன்றவற்றை அவதானிக்கலாம்.

இத்தகைய நடத்தை மாற்றத்தினால் சூழவுள்ளவர்களோடு அடிக்கடி கோபப்படுதல், வாக்குவாதம் புரிதல் மற்றும் போன்றன ஏற்படக் கூடும். இதன் காரணமாக உறவுகளில் விரிசல் ஏற்பட்டு நெருக்கீடு மேலும் அதிகரிப்பதோதோடு தீர்மானம் எடுத்தலும் பாதிக்கப்பட்டு மற்றவர்களில் தங்கியிருக்க நேரிடுகின்றது. நீண்டகால நெருக்கீடானது தன்னியக்க நரம்புத் தொகுதியை (Autonomous Nervous System) தொடர்ச்சியாகத் தூண்டுவதனாலும் உடலின் நிர்ப்பீடணத் தொழிற்பாட்டைக் குறைத்து (Immune System) விடுவதனாலும் பல நோய்களை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமையலாம். உயர்குருதி அமுக்கம், இதயத் துடிப்பு ஒழுங்கீனம், பாரிசவாதம், இதயநோய்கள், ஆஸ்மா, குடற்புண், மூட்டுவாதம், எக்சிமா மற்றும் தோல் அழற்சி போன்ற சிலவற்றைக் குறிப்பிடலாம்.

**இஸ்லாமிய வழிகாட்டலில் நெருக்கீட்டினை எதிர்கொள்ளல்**

உளவியல் ரீதியாக மன அழுத்தத்தை ஏற்படுத்தும் காரணிகளின் செல்வாக்கே முதன்மைப்படுத்தப்படுகின்றது. பௌதிக ரீதியான காரணிகள் மூலம் நாங்கள் மன அழுத்தத்திற்குள்ளானால் இழந்த சொத்துக்கள் அல்லது தொழில் மீளக் கிடைக்கின்றபோது மனஅழுத்தத்தில் இருந்தும் விடுபட முடியும். ஆனால், உளவியல் காரணிகளை இவ்வாறு இலகுவாக எதிர்கொள்ள முடியாது. அவற்றிற்கு விஞ்ஞான ரீதியான, தலையீடுகள் மட்டும் போதியதாக இல்லை. அவை ஆன்மிக ரீதியான தேவையின் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

**இழப்புகளும் அருட்கொடைகளும் இறைவனின் புறத்திலிருந்து...**

இழப்புக்கள் என்பது மன அழுத்தத்தை ஏற்படுத்தும் காரணிகளில் ஒன்றாகும். அல்குர்ஆன் இழப்புக்களை மனிதர்களுக்கான ஒரு சோதனையாகவே குறிப்பிடுகின்றது.

"(விசுவாசம் கொண்டோரே!) பயம் மற்றும் பசியிலிருந்து ஏதாவது ஒன்றைக் கொண்டும் செல்வங்கள், உயிர்கள், கனிகளின் விளைச்சல்கள் ஆகியவற்றின் குறைவைக் கொண்டும் நிச்சயமாக நாம் உம்மை சோதிப்போம். மேலும் இதனைப் பொறுத்துக் கொள்பவர்களுக்கு நன்மாராயம் கூறுவீராக." *(2:155)*

இறைவிசுவாசம் கொண்ட ஒரு மனிதன் "இவை அனைத்தும் இறைவனிடமிருந்தே வந்தவை. அவற்றை இழந்தாலும் நாம் அவற்றின் உரிமையாளர்கள் இல்லை என்ற உறுதியான நம்பிக்கையினால் இழப்புக்கள் அவனில் எத்தகைய அதிர்வினையும் ஏற்படுத்தாது.

**மனித இருப்பு தொடர்பான அடிப்படைக் கேள்விகளும் பதில்களும்**

மனிதன் எதிர்காலம் பற்றிய இனந்தெரியாத அச்சத்தோடு நகர்ந்து கொண்டிருக்கின்றான். நான் யார்? எங்கிருந்து வந்தேன்? எங்கே செல்லப் போகின்றேன்? எனது வாழ்வின் நோக்கமும் குறிக்கோளும் என்ன? போன்ற அடிப்படைக் கேள்விகளுக்குப் பதில் கூற முடியாமல் பீதியுடன் வாழ்கின்றான். பல புகழ்பெற்ற மெய்யியலாளர்களும் உளவியலாளர்களும் கூட இவ்வாறான கேள்விகளுக்குப் பதில் கூற முடியாமல் தற்கொலை முயற்சி வரை சென்றிருக்கின்றார்கள். இவர்கள் இந்த உலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையைத் தவிர வேறு வாழ்க்கையை அறிய மாட்டார்கள் அல்லது நம்ப மாட்டார்கள். ஒரு முஸ்லிம் இவ்வடிப்படைக் கேள்விகளுக்கான பதில்களைப் பெற்றிருப்பதன் மூலமாக வாழ்வில் தடுமாற்றமற்று பயணிக்கின்றான்.

**மறுமை வாழ்வை உறுதியாக நம்புதல்**

நெருக்கீட்டிற்கு முகங்கொடுக்கின்ற போது, அவன் மறுமை வாழ்வைப் பற்றிய உறுதியான நம்பிக்கையோடு பயணிக்கின்றபோது இவ்வுலக வாழ்க்கையின் அம்சங்கள் அற்பமானதாகத் தோன்றும். வாழ்வின் யதார்த்தங்களைப் புரிந்து கொள்கின்றபோது அதன் அலங்காரமும் ஆடம்பரங்களும் பெறுமதியற்றதாகத் தோன்றும். அவற்றுக்காக வருந்துவது வீண் என்கின்ற நிலைப்பாட்டினைப் பெறுவர்.

**திக்ர்- இறை நினைவு**

இறை நம்பிக்கையிலுள்ள குறைபாடு உள நோய்கள் ஏற்படக் காரணமாக அமைகின்றது என்பது இஸ்லாத்தின் நிலைப்பாடாகும். இதனால் மனிதன் தொடர்ச்சியாக மன அழுத்த நிலைமைகளை எதிர் கொள்ள வேண்டியிருக்கிறது. இறைவன் மீது நம்பிக்கை வைத்துள்ள ஒருவர் எல்லா வகையான அசாதாரண சூழ்நிலைகளுக்கும் இயல்பாக முகங் கொடுக்கக்கூடியவராக இருப்பார்.

“இன்னும் இறைவனை நினைவுகூர்வதன் மூலம் அவர்கள் உள்ளங்கள் அமைதி பெறுகின்றன. (ஏனென்றால்) அல்லாஹ்வை நினைவுகூர்வதால் இதயங்கள் நிச்சயமாக அமைதி பெறும் என்பதை அறிந்து கொள்வீர்களாக.” *(13: 27-28).*

**தொழுகையை நிறைவேற்றுதல்**

உள அமைதிக்கான மற்றொரு வழிமுறை தொழுகையாகும். தொழுகையில் மனிதன் அல்லாஹ்வின் மீது கவனத்தை ஒருமுகப்படுத்துகின்றான். அல்லாஹ் அருளாளனாகவும் அன்புடையோனாகவும் இருக்கின்றான். தொழுகையில் ஒருவன் இறைவனுக்கு முன்னே மன்றாடுகின்றான், அவனுடன் பல்வேறு நிலைகளிலும் உரையாடுகின்றான், ஏனைய மனிதர்களுடன்பகிர்ந்து கொள்ளமுடியாத கவலைகள், வேதனைகளைப் படைப்பாளனோடு பகிர்ந்து கொள்கின்றான்.

“ஈமான் கொண்டவர்களே பொறுமை மற்றும் தொழுகையைக் கொண்டு உதவி தேடுங்கள். ஏனெனில், இறைவன் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்.” *(2: 153)*

**இறைவனிடம் மன்னிப்புக் கோரலும் மனிதர்களை மன்னித்தலும்**

“ஆகவே, உங்கள் இரட்சகனிடம் மன்னிப்புத் தேடுங்கள். நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவனாக இருக்கின்றான்.” *(71: 10)*

மன்னித்தல் என்பது இறை பண்பு. ஒரு மனிதன் பிறரை மன்னிக்கின்றபோது அவனது உள்ளத்தில் இருந்த குரோதம், பொறாமை மற்றும் பெருமை போன்ற உள நோய்கள் அகன்று மனம் விரிவடைகின்றது. இஸ்லாம் மன்னிப்பை உயர்ந்த பண்பாக வலியுறுத்துகின்றது. இதனைப் பல விஞ்ஞான ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. மன்னிக்கும் சுபாவம் உள்ளவர்களிடத்தில் உள ஆரோக்கியமும் அதிகமாக உள்ளதாகக் குறிப்பிடுகின்றது. (Luskin, 2003)

**அல்-குர்ஆன் ஓதுவதை அதிகரித்தல்**

அல்குர்ஆனை அதிகம் ஓதுவதன் மூலம் மனிதன் உளச் சமநிலையை அடைய முடிகின்றது.

“மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து திட்டமாக ஒரு நல்லுபதேசமும் இதயங்களில் உள்ளவற்றை குணப்படுத்துவதும் உங்களுக்கு வந்து விட்டது.” *(10: 57)*

நெருக்கீட்டிற்கு உட்பட்ட ஒருவரை அதிலிருந்து விடுபடச் செய்வதற்கு அவரது குடும்ப மற்றும் சமூக ஆதரவு அவசியமானதாகும். பௌதிக ரீதியான அடிப்படைத் தேவைகளும் உளவியல் ரீதியாக அன்பு, கரிசனை போன்ற விடயங்களும் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும். மேலும், இயற்கையை ரசித்தல் அதற்காக சுற்றுப் பயணங்களை மேற்கொள்ளல் போதிய அளவு தூக்கம், நகைச்சுவைகளில் ஈடுபடுதல், செல்லப் பிராணிகள் வளர்த்தல் போன்ற முறைகளில் நெருக் கீடுகளிலிருந்து விடுபடுவதற்குரிய வழிமுறைகளை இஸ்லாம் வரவேற்கின்றது.

**நெருக்கீட்டில் இருந்து மீள நபி (ஸல்) அவர்களின் பிரார்த்தனை**

“அல்லாஹ் எங்களுக்குப் போதுமானவன். அவன் ஒருசிறந்த பாதுகாவலன். மேலும்நாங்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைக்கிறோம்.” *(99: 3)*

நெருக்கீடு எமது வாழ்க்கையில் இருந்து பிரிக்க முடியாத ஒன்றாகக் காணப்பட்ட போதிலும் அதனை உரிய முறையில் புரிந்து கொண்டு எதிர் கொள்வது எமது ஈருலக வெற்றிக்கும் வழிவகுக்கும். உள, உடல் நோய்களுக்காக உரிய மருத்துவ ஆலோசனைகளைப் பெறும் அதேவேளை ஆன்மிக ஈடுபாடும் முக்கியம் என்பது தெளிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமூகங்களுக்கிடையில் சகவாழ்வு: சில முன்மொழிவுகள்

**கலாநிதி எம்.ஆர். பாதிமா அப்றா Ph.D**
**விரைவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**

இன, மத, மொழி, கலாசார வித்தியாசங்கள் கொண்ட மக்கள் குழுக்கள் வாழுமிடங்களில் முரண்பாடுகள் ஏற்படுவது இயல்பானதாகும். இலங்கை அத்தகையதொரு பன்மைத்துவ நாடு என்ற வகையில் இங்கும் பல்வேறுபட்ட முரண்பாடுகளை நாம் வரலாறு நெடுகிலும் அவதானிக்க முடிகின்றது.

ஆயினும், இந்த நாட்டில் குறிப்பாக சிங்கள-முஸ்லிம் உறவானது கடந்த ஆயிரம் வருடங்களுக்கு மேலாக பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில் அமைந்துள்ளதை வரலாற்றுச் சான்றுகள் பறைசாற்றுகின்றன. முஸ்லிம்கள் அரேபிய வர்த்தகர்களாக இலங்கை வந்த காலம் முதற் கொண்டு பிரித்தானியரது பிரித்தாளும் கொள்கைக்கு உட்படும் வரை சிங்கள-முஸ்லிம் உறவு மிக உன்னதமானதாகவே காணப்பட்டதாக கலாநிதி லோனா தேவராஜா சிலாகித்துக் கூறியுள்ளார். "1796இல் ஆரம்பிக்கப்பட்ட பிரித்தானியரின் பிரித்தாளும் கொள்கையானது ஆயிரம் வருடங்களுக்கு மேலாகக் காணப்பட்ட அற்புதமான உறவை போட்டி, அவநம்பிக்கை, வெறுப்பு என்பவற்றை விதைத்து சிதைவடையச் செய்தது" என அவர் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

மேலும், 30 வருட உள்நாட்டு யுத்தத்தின் பின்னரான காலப்பகுதி முஸ்லிம் சிறுபான்மை சமூகத்திற்கு நெருக்குதல் மிக்கதாகவே காணப்பட்டது. இது தொடர்பாக முஸ்லிம், முஸ்லிமல்லாத ஆய்வாளர்களது கண்டறிதல்கள் (Findings) இந்நிலைக்கான பலதரப்பட்ட காரணங்களை எடுத்துரைக்கின்றன.

இந்தப் பின்புலத்தில், இக்கட்டுரை ஆய்வின் அடிப்படையில் பெறப்பட்ட முதல்நிலை, இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தி இலங்கையில் இன ரீதியான சகவாழ்வு குறித்து நோக்குவதோடு சகவாழ்வைப் பேணுவதற்கான நடைமுறை ரீதியான வழிமுறைகளையும் பரிந்துரைக்கிறது.

### மதமும் அரசியலும்

இலங்கையில் சகவாழ்வை ஏற்படுத்துவதன் முக்கிய தடைக்கல் அரசியலும் மதமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருப்பதாகும். மறைமுகமான அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்காக மதம் கருவியாகப் பயன்படுத்தப்படுவதையே நாம் காண்கிறோம். நாட்டு மக்களை ஓர் அமைதியற்ற சூழ்நிலையில் வைத்திருப்பதனூடாக உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் பயன் பெறுகின்றன. வெவ்வேறு மதங்களின் அடிப்படை வேறுபாடுகளை ஏற்றுக்கொண்டு அமைதியான சகவாழ்வை ஏற்படுத்துவதனை நோக்காகக் கொண்ட சிங்கப்பூர் நாட்டின் கொள்கையானது சகவாழ்வின் வெற்றிக்கானசிறந்த உதாரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சட்ட ஏற்பாடுகளும் அமுலாக்கமும்**

இலங்கையின் சட்ட மற்றும் அரசியலமைப்புக் கட்டமைப்பானது மத சுதந்திரத்தைப் பாதுகாப்பதுடன் இலங்கையிலுள்ள அனைத்து இனங்களுக்கிடையிலும் சக வாழ்வை ஊக்குவிக்கின்றது. அவ்வாறே, அரசாங்கத்தின் கொள்கை மற்றும் நிறுவன அமைப்பானது மத சுதந்திரம், மத நல்லிணக்கம் ஆகிய இரண்டையும் தெளிவாக வலுப்படுத்துகின்றன. இதில் மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் நல்லிணக்க ஆணையம் (NHRAP), தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் (LLRC), நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வுக்கான தேசிய கொள்கை (ONUR) ஆகியவை உள்ளடங்கும்.

இவ்வகையில் மதச் சுதந்திரம் மற்றும் சகவாழ்விற்கான திட்டமிடல்கள், சட்ட ஏற்பாடுகள், நிறுவனக் கட்டமைப்புகள் இருப்பினும் அதன் அமுலாக்கம் குறிப்பிட்டுக் கூறுமளவுக்குக் காணப்படவில்லை என்பதே யதார்த்தமாகும். எனவே, வரையப்பட்ட சட்டங்கள், திட்டமிடப்பட்ட கட்டமைப்புக்கள், கொள்கைகளை செயல்படுத்துவதை மேற்பார்வையிடவும் கண்காணிக்கவும் ஒரு தனி நிர்வாக அலகு அமைக்கப்பட வேண்டும். அது அனைத்து இனக் குழுக்களின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாக அமைவதோடு ஜனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் வர வேண்டும். இவ்வமைப்பானது அனைத்து சமூகங்களினதும் சமூக, பொது நடவடிக்கைகளில் சமூக நல்லிணக்கத்தை சீர்குலைக்கக் கூடியவற்றை இனங்கண்டு அவற்றுக்கான வரையறைகளைத் தெரியப்படுத்துவதாகவும் அமைய வேண்டும்.

**ஊடகங்கள்**

சமூகங்களுக்கிடையிலான உறவைக் கட்டியெழுப்புவதிலும் சீர்குலைப்பதிலும் ஊடகங்களின் வகிபாகம் பாரியதாகும். மீவவல்வெல தம்மானந்த தேரரின் கருத்துப்படி "ஊடகங்கள் பரபரப்பான கதைகளைப் பரப்புவதன் மூலமும் தங்களது பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறியதன் மூலமும் பிரச்சினைகளுக்கு பங்காற்றுகின்றன."

> **வெறுப்புப் பேச்சுக்களின் பிரதான களமாக முகநூல் அமைவதனால் அவற்றைக் கண்காணித்து, ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பது அத்தியாவசியமானதாகும்.**

ஊடகங்களை வழிநடத்துவதற்குப் போதுமான நெறிமுறைகள், சட்ட விதிமுறைகள் நாட்டில் உள்ளன. உதாரணமாக, ஊடகங்களின் நெறிமுறைக் குறியீட்டில் "மதக்குழுக்கள் அல்லது சமூகங்களைப் பற்றி அவமதிக்கும் அறிக்கைகளை உள்ளடக்கியிருந்தாலோ அல்லது நல்லிணக்கத்தை அச்சுறுத்தும் வகையில் மதப் பிரிவினையை ஊக்குவிப்பதாக இருந்தாலோ அவற்றை வெளியிடக் கூடாது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும், இச்சட்டதிட்டங்களின் நடைமுறை மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இலங்கையில் ஊடகங்களில் நெறிமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதிசெய்வதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுப்பது கட்டாயமானதாகும். வெறுப்புப் பேச்சு (Hate Speech) தொடர்பான சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் சிவில், சமூக செயற்பாட்டாளர்கள் அதிகம் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

வெறுப்புப் பேச்சுக்களின் பிரதான களமாக முகநூல் அமைவதனால் அவற்றைக் கண்காணித்து, ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பது அத்தியாவசியமானதாகும். மேலும், இலங்கையில் இணையத்தின் பாவனை அதிகரித்துச் செல்வதனால் இலங்கையில் இன நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கு இவ்வூடகங்களை சாதகமாகப் பயன்படுத்தத் திட்டமிடப்பட வேண்டும். ஆக்கபூர்வமான சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் புதிய சாத்தியப்பாடுகளுக்கு இது வழி வகுக்கும். இவ்வகையிலே மதம் அல்லது நம்பிக்கையின் சுதந்திரத்தை முன்னெடுத்துச் செல்வதற்கும் மத நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்குமாக Minor Matters எனும் பெயரில் ஒரு தேசிய இயக்கம் வெறுப்பூட்டும் பேச்சு, போலிச் செய்திகள், தப்பெண்ணம் போன்ற பிரச்சினைகள் தொடர்பாக இளைஞர்களுக்குக் கற்பிக்கும் பொருட்டு Aiyo Alice எனும் திறன்பேசி (Smartphone) விளையாட்டை அண்மையில் அறிமுகப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விடயத்தில் ஊடகங்களை சாதகமான முறையில் பயன்படுத்துவதோடு ஊடகநெறிகளைப் பேணுவதை உறுதிப்படுத்துவதும் அதற்கான சட்டங்களை நடைமுறைப்படுத்துவதும் நாட்டில் இனங்கள், மதங்களுக்கிடையிலான சகவாழ்வை ஏற்படுத்த வழிவகுக்கும்.

**தேசிய பொறிமுறை**

இவற்றுடன் இலங்கையில் சகவாழ்வை ஏற்படுத்த ஒருங்கிணைந்த தேசிய பொறிமுறையின் அவசியம் பலராலும் முன்வைக்கப்படுகிறது. இலங்கையில் மதங்கள் மற்றும் இனங்களுக்கிடையில் ஒற்றுமை, சகவாழ்வு, நல்லிணக்கம் என்பவற்றை மேம்படுத்தும் நோக்குடன் பல அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் நாடு முழுவதும் இயங்குகின்றன. ஒவ்வோர் அமைப்பும் தங்களது மூலோபாயத் திட்டங்களுடன் பலதரப்பட்ட பிரதேச, மாவட்ட, மாகாண தளங்களில் வேலை செய்கின்றன ஆயினும், இவற்றின் அடைவுகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றன. அத்துடன், பல செயற்பாடுகள் மற்றும் திட்டங்கள் சில சமயங்களில் ஒரே தனிநபர்கள், சமூகம் மற்றும் பிரதேசங்களுக்குள்ளேயே மீட்டப்படுகின்றன. பல சந்தர்ப்பங்களில் சமூகத்தின் அடிமட்ட மக்களை சென்றடைவது குறைவானதாகவே உள்ளது. இத்தகைய அனைத்து அமைப்புக்களையும் மதத் தலைவர்களையும் உள்ளடக்கிய ஓர் ஒருங்கிணைந்த தேசிய பொறிமுறை செயற்படுத்தப்படும் போது அது தாக்கமிக்கதாக இருக்கும்.

**கல்வித் திட்டம்**

ஒரு நாட்டின் கல்விமுறையின் மூலம் பன்முகக் கலாசாரத்தில் வாழ்வது தொடர்பான வழிகாட்டல்களை வழங்க முடியும். இந்த வகையில் சிங்கப்பூர் நாட்டில் குடியுரிமைக் கல்வி, ஒழுக்கக் கல்வி, சமூகக் கல்வி, வரலாறு போன்ற பாடங்களும் வகுப்பறைக்கு வெளியிலான விளையாட்டு, வளமூட்டல் நிகழ்ச்சிகளும் மத நல்லிணக்கம், சகவாழ்வு என்பவற்றை இணைத்ததாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

எனவே, இலங்கையிலும் பாடத்திட்டமானது அனைத்து மதங்களுக்கிடையிலான சகிப்புத்தன்மை மற்றும் சகவாழ்வை ஊக்குவிக்கும் இலக்கைக் கொண்டதாக அமைய வேண்டும். இலங்கையர்கள் எனும் பொதுவான எண்ணப்பாட்டை உருவாக்க வரலாறு, குடியுரிமைக் கல்வி ஆகிய பாடங்கள் பொருத்தமானதாக அமையும்.

மேலும், ஒவ்வொரு கல்வி வலயத்திலும் கள விஜயங்கள், குறுகிய கால சுற்றுலாக்கள், நிகழ்ச்சிகள் போன்றவற்றை ஏற்பாடு செய்து அவற்றினூடாகப் பல்லின மாணவர்கள் இணையும் சூழ்நிலைகளை ஏற்படுத்தலாம். மாணவர்களை சரியான முறையில் வழிநடத்த ஆசிரியர்களுக்கும் பாடசாலை நிர்வாகிகளுக்கும் பன்மைத்துவ கலாசாரக் கல்வி தொடர்பான வழிகாட்டல்கள், உளவியல் நடைமுறைகளைக் கொண்ட பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

**உரையாடல் மையங்கள்**

உரையாடல்களுக்கான மையங்களை ஏற்படுத்துவது மதங்களுக்கிடையில் சிறந்த புரிதலை உருவாக்க உதவும்; முரண்படும் சமூகங்களுக்கிடையிலுள்ள வேறுபாடுகளைக் குறைத்து நம்பிக்கை, சகிப்புத்தன்மையை வளர்க்கும். சமூகங்களுக்கிடையில் பயனுள்ள தொடர்பாடல் இல்லாததன் விளைவாகவே பல சர்ச்சைகள், தவறான புரிதல்கள் எழுந்துள்ளன. மத உரையாடல்கள் இல்லாமல் மனித குலம் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான விவேகத்தையும் உத்வேகத்தையும் இழந்து விடும். ஆகவே, சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கியதான உரையாடல்களுக்கான இடங்களை ஒதுக்க வேண்டும். மதத் தலைவர்கள், இளைஞர்கள், பெண்கள், அரச ஊழியர்கள், ஆசிரியர்கள், கிராம மக்கள் போன்ற அனைவரையும் சார்ந்ததான ஒவ்வொரு பிரிவினருக்கும் ஏற்ற வேலைத்திட்டங்கள், செயற்பாடுகள் அமையப்பெற வேண்டும். இவை பிரதிபலிப்புக்களை வெளிப்படுத்தக் கூடியதான தொடர்பாடல், ஈடுபாடு, தமது அபிப்பிராயங்களை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்களை வழங்குவதாகத் திட்டமிடப்பட வேண்டும். விளையாட்டுக்கள், வட்டமேசை விவாதங்கள், கண்காட்சிகள், கலை விழாக்கள், ஒருநாள் பயணங்கள் போன்றவை இவற்றிற்கான சில உதாரண நிகழ்வுகளாகும்.

எந்தவொரு மாற்றமும் எளிதில் நடந்து விடாது. தொடர் முயற்சியும் ஒத்துழைப்பும் இன்றியமையாததாகும்.


**உசாத்துணைகள்:**

David L. Coppola. "Creating Space for Dialogue." - Religion, Violence and Peace

Gunatilleke, Gehan. 'The Chronic and the Acute: Post-War Religious Violence in Sri Lanka'

Ministry of Mass Media and Information, 'Code of Media Ethics'

Lorna Dewaraja, 'The Muslims of Sri Lanka: One Thousand Years of Ethnic Harmony,900-1915'

Thio, Li-Ann, 'Control, Co-Optation and Co-Operation: Managing Religious Harmony in Singapore 's Multi-Ethnic, Quasi-Secular State', Hastings Constitutional Law Quarterly 33, no. 2

Wedikandage, Priyadarshani. 'A Study of Multicultural Practices in Sri Lankan Secondary Schools and an English Comparator School'





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக மாற்றத்தில் விளையாட்டு கழகங்களின் வகிபாகம்



**அஷ்ஷெய்க் எம்.ஜீ.எம். இன்ஸாப் (நளீமி** M.A
**கலாநிதி ஆய்வாளர்,**
**சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகம், மலேசியா.**

### அறிமுகம்

இளையவர், முதியவர் என்ற வேறுபாடு இன்றி அனைவரும் பார்த்து ரசிக்கின்ற ஒரு விடயம்தான் விளையாட்டு. விளையாட்டுப் போட்டிகளைக் கண்டு களிப்பது, அதனைப் பற்றிப் பேசுவது, அது பற்றிப் படிப்பது, அதனைப் பற்றி வாதிப்பது என அனைத்தும் எம்மைச் சுற்றியும் எமது வாழ்விலும் நடக்கும் சுவாரஷ்யங்கள்தான். இவ்வாறு விளை யாட்டுக்கள்வயது வேறுபாடின்றிதமக்கென ரசிகர் பட்டாளமொன்றையே கட்டிப் போட்டுள்ளன எனலாம். அது மட்டுமல்லாமல், ஒரு விளையாட் டையோ அல்லது சில விளையாட்டுக்களையோ மையப்படுத்தி இன்று கிராமங்கள்தோறும் விளை யாட்டுக்கழகங்களும் அமைக்கப்பட்டு விளையாட் டுக்காக நேரம், உழைப்பு மற்றும் பொருளாதாரம் என்பன பாரிய அளவில் செலவிடப்படுகின்றன.

### விளையாட்டின் சமகால வளர்ச்சியும் பரிணாமமும்

சமூகத்தில் விளையாட்டு என்பது ஒரு பொழுது போக்கு விடயமாகப் பார்க்கப்பட்டாலும் இன்று அது சமூக, கலாசார, பொருளாதார, அரசியல் மற் றும் புலமைத்துவத் தளம் (Academia) என்பவற்றில் வியாபித்து வளர்ந்துள்ள ஒரு துறையாகக் காணப் படுகின்றது. மேலும், விளையாட்டு இன்று பெரிய தொரு வணிகத்துறையாகக் (Sports Industry) கருதப் படுகிறது. இன்றைய தொழில் உலகில் விளையாட் டுத் துறையுடன் தொடர்புபட்ட இருபதுக்கும் மேற் பட்ட தொழில்கள் (Sports Related Professions) உருவாகியுள்ளன. 1970 முதல் விளையாட்டுத் தத்து வம் (Sport Philosophy) தத்துவத்தின் ஒரு கிளையாக வளர்ச்சி கண்டுவருகிறது. விளையாட்டிற்கென்றே தனியான பீடங்கள் இன்று பல்கலைக்கழகங்களில் உருவாக்கப்பட்டுள்ளதுடன் விளையாட்டு மற்றும் அதனுடன் தொடர்பான துறைகளுடன் இணைந்த சுமார் 132 சர்வதேச தரம் வாய்ந்த ஆய்வுச் சஞ்சிகை கள் (Research Journals) வெளிவருகின்றன. அவ் வாறே சர்வதேச மட்டத்தில் மிகவும் தாக்கமுள்ள சமூக அலகாக விளையாட்டுக் கழகங்கள் இன்று நோக்கப்படுகின்றன.

### இஸ்லாத்தில் விளையாட்டு (Sports in Islam)

இஸ்லாம் உடல் ஆரோக்கியத்திற்கும் உடலைப் பராமரிப்பதற்கும் கூடிய முக்கியத்துவத்தை வழங் கியுள்ளது. உடலுக்குக் கேடு விளைவிக்கும் உணவு மற்றும் பழக்கவழக்கங்கள் போன்றவற்றைத் தடை செய்துள்ளதுடன் உடல் ஆரோக்கியத்தைப் பேணு வதனை வலியுறுத்தியிருப்பதைக் காணலாம். இந்த வகையில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நீச்சல், குதிரையேற்றம், ஓட்டம், நடை, அம்பெய்தல், ஈட்டியெறிதல், மல்யுத்தம், வாட் சண்டை போன்ற பல்வேறு விளையாட்டுக்களை ஊக்குவித்துள்ளார்கள். அதேபோன்று ஒரு சமநிலை ஆளுமையானது உடல், அறிவு, ஆன்மா ஆகிய மூன்றும் சமமாகப் போஷிக்கப்படுவதிலேயே இருக்கின்றது என்பதையும் உடல் ஆரோக்கியம் மற்றும் உடற் பலத்தை இறை நெருக்கத்துடன் தொடர்புபடுத்திப் பேசியுள்ளதையும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப்பின்னணியில்நோக்குகின்றபோது விளையாட்டின் மிக உயர்ந்த இலக்கு பொருளாதார, அரசியல் நலன்களைக் கடந்து சமநிலையான, பண்பாட்டில் உயர்ந்த மனிதர்களை உருவாக்குவதே என்பதனைப் புரிந்து கொள்ள முடியும். அது மட்டுமல்லாமல், விளையாட்டினூடாக ஒரு விளையாட்டு வீரனிடத்தில் நீதி, நேர்மை, சமத்துவம், சக மனிதனை மதித்தல், பொறுப்புணர்வு போன்ற பல்வேறு சமூக வாழ்விற்கான பண்புகள் வளர்க்கப்படுகின்றன. குறிப்பாக வெற்றியையும் தோல்வியையும் தாங்கிக் கொள்ளும் பக்குவமும் அவனிடம் விளையாட்டு மூலம் ஏற்படுகிறது.

**விளையாட்டுக் கழகங்கள்**

விளையாட்டு வீரர்கள் தமது விளையாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்படுத்திக் கொள்ளும் ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட கட்டமைப்பே விளையாட்டுக்கழகங்கள் ஆகும். விளையாட்டைப் போன்றே விளையாட்டுக் கழகங்களும் இன்று முக்கியமான ஓர் ஆய்வுப் பரப்பாக மாறியுள்ளன. இதனடிப்படையில் விளையாட்டுக் கழகங்களினூடாக இளைஞர்களின் வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள், அவர்கள் பெற்றுக் கொள்ளும் பண்புகள், திறன்கள் தொடர்பாகப் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒரு விளையாட்டுக் கழகமானது தனது அங்கத்தவர்களை சிறந்த நற்பண்புகள் கொண்ட விளையாட்டு வீரனாக, நற்பிரஜையாக உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்க முடியும். நாட்டுக்கும் சமூகத்திற்கும் பயனுள்ள விதத்தில் இளைஞர்களது திறன், சமூக நெறிமுறைகளை (Social Ethics) மேம்படுத்தி அவர்களை ஊக்கமுள்ள (Energetic), திறந்த மனம் கொண்ட, உற்சாகமுள்ளவர்களாக செதுக்கலாம். குறிப்பாக, ஊக்கமும் உத்வேகமுமிக்க இளைஞர்கள் தமது அத்தகைய உத்வேகத்தை வன்முறைகளிலும் தீய செயற்பாடுகளிலும் செலுத்தாமல் விளையாட்டுத் துறை ஈடுபாட்டினூடாக ஆக்கப் பணியில் திசைமுகப்படுத்தவும் உதவ முடியும்.

மேற்குறிப்பிட்ட பல நேர்மறையான நலன்களை விளையாட்டுக் கழகங்கள் கொண்டு சேர்த்த போதிலும் நாம் கவனிக்க வேண்டிய எதிர்மறையான ஒரு பகுதியும் இன்று நடைமுறையில் காணப்படுகிறது. இன்று கிராமங்கள் தோறும் பல விளையாட்டுக் கழகங்கள் தோற்றம் பெற்று, ஒவ்வொரு கழகமும் தமக்கான அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வதிலும் தமக்கான ஆதரவைத் திரட்டுவதிலும் அதீத கவனம் செலுத்துகின்றது. அது மட்டுமல்லாமல், ஒவ்வொரு கழகமும் தமது ஏற்பாட்டில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற வேண்டும் என விரும்புவதால் ஒரே பிரதேசத்தில் பல விளையாட்டு நிகழ்ச்சிகள் வரையறையின்றி நடைபெறும் சூழலைக் கண்கூடாகக் கண்டு கொள்ள முடியும். இதன் காரணமாகத் தனிப்பட்ட, குடும்ப, சமூக வாழ்வின் முக்கிய பல பொறுப்புக்கள் புறக்கணிக்கப்பட்டு இளைஞர்கள் விளையாட்டில் மிதமிஞ்சிய ஈடுபாடு காட்டும் நிலை ஏற்படுகின்றது. அத்தோடு கழகங்களுக்கிடையிலான முரண்பாடுகளும் ஆதரவாளர்களுக்கிடையிலான மோதல்களும் தோற்றம் பெறுகின்றன. மேலும், சில இடங்களில் தீய பழக்கங்களில் இளைஞர்கள் ஈடுபட விளையாட்டுக் கழகங்களும் காரணமாகின்றன.

ஆகவே, இத்தகைய எதிர்மறையான பகுதிகளை மிக அவதானமாக அணுகி அவற்றை இழிவளவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்போது விளையாட்டுக் கழகங்கள் மூலம் எதிர்பார்க்கும் சாதகமான விடயங்களை அறுவடை செய்து கொள்ள முடியும்.

**விளையாட்டுக் கழகங்களும் சமூக மாற்றமும்**

இன்று சில கழகங்கள் ஒரு சில சமூக சேவைப் பணிகளிலும் தம்மை ஈடுபடுத்தி வருகின்றன. இவற்றுக்கு அப்பால் சென்று ஒரு தாக்கமுள்ள சமூகப் பெயர்ச்சி, சமூக மாற்ற நிறுவனமாக அவை செயற்பட முடியும். சமூக மேம்பாட்டுக்கும் சமூக மாற்றத்துக்குமான திறமையும் துடிப்புமிக்க ஆள்வளத்தை உருவாக்கவும் ஒரு முன்மாதிரிமிக்க சமூக அலகாக விளங்கவும் அவற்றால் முடியும். இத்தகைய ஒரு சிறந்த சமூக மாற்ற முகவராக விளங்குவதற்கு விளையாட்டுடன் தொடர்புபட்ட அனுசரணையாளர்கள் (Falicitators), ஆதரவாளர்கள் (Supporters) மற்றும் விளையாட்டு வீரர்கள் (Athletes) போன்ற மூன்று கூறுகளிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டு அவற்றை நெறிப்படுத்துவது அவசியமாகும்.

**வெற்றிகரமான விளையாட்டுக் கழகத்தின் கூறுகள்**

இத்தகைய ஆக்கபூர்வமான சமூக மாற்ற முகவர்களாக விளையாட்டுக் கழகங்கள் தொழிற்பட கீழ்க் காணும் நான்கு பகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுக் கழகங்களை வினைத்திறன்மிக்க ஆக்க சக்திகளாக மாற்ற சமூகத் தலைமைகள் விளையாட்டுக் கழகங்களோடு ஆரோக்கியமான உறவைப் பேண வேண்டும். சமூகத்திலுள்ள உலமாக்களும் புத்திஜீவிகளும் துறைசார் நிபுணர்களும் விளையாட்டுக் கழகங்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்க வேண்டும்.

**1. சிறந்த நிர்வாகம் (Management):** விளையாட்டினூடாக புகழ், வெற்றியீட்டுதல், வருமானமீட்டுதல் போன்றனவற்றை மாத்திரம் இலக்காகக் கொள்ளாது உயர்ந்த நோக்கங்களை இலக்காகக் கொண்ட ஒரு நிர்வாகம் இருப்பது அவசியம். அவர்கள் தமது கழகங்களுக்கான வசதிகளைச் செய்யும்போதும் அனுசரணையாளர்கள், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும்போதும் தமது கழகத்தின் உயர்ந்த இலக்குகளைப் பாதிக்காது அவற்றை மேலும் வலுவூட்டி மேம்படுத்துபவர்களைத் தெரிவு செய்வதும் அவர்களது செயற்பாடுகளைத் தொடர்ந்தும் கண்காணித்து வருவதும் அவசியமாகும்.

**2. சிறந்த பயிற்றுவிப்பாளர்கள் (Coach):** பயிற்றுவிப்பாளர்தான் ஒரு விளையாட்டு வீரனுக்கான முன்மாதிரியாவார். பயிற்றுவிப்பாளர் ஓர் அங்கத்தவனை குறித்த விளையாட்டிலே தேர்ச்சி பெறுவதற்கு மாத்திரமன்றி அவனது சகல செயற்பாடுகளும் சிறப்புற உதவி செய்கிறார். விளையாட்டு வீரர்களை சமூகமயப்படுத்துவதில் (Socialization) பயிற்றுவிப்பாளரின் வகிபாகத்தை 'வளர்ச்சி உளவியல்' (Development Psychology) மற்றும் 'விளையாட்டு உளவியல்' (Sports Psychology) துறை சார்ந்த ஆய்வாளர்கள் மிகவும் வலியுறுத்திப் பேசுகின்றனர். அத்தோடு பயிற்றுவிப்பாளரின் ஆளுமைப் பண்புகள் யாவும் நிச்சயமாகப் பயிற்சி பெறுபவரில் தாக்கம் செலுத்துகின்றன. அவரை ஒரு முன்னுதாரணமாகவே எப்போதும் பார்ப்பர். இதனால் அவர் விளையாட்டிலும் தனிப்பட்ட வாழ்விலும் எப்பொழுதும் விழுமியங்களையும் விளையாட்டு ஒழுக்கங்களையும் கடைப்பிடிப்பவராகவும் தனக்குக் கீழ் பயிற்சி பெறுபவர்களுக்கு அவற்றைக் கடத்துபவராகவும் இருக்க வேண்டும்.

**3. சிறந்த நெறிமுறைக் குறியீடு / ஒழுக்கக் கோவை (Ethical Code):** சிறந்த பண்பாடுகள் உள்ள விளையாட்டு வீரர்களை உருவாக்குவதற்கு விளையாட்டுக் கழகங்கள் சிறந்ததொரு நெறிமுறைக் குறியீட்டைப் (Ethical Code) பெற்றிருப்பது மிக அசியமாகும். இந்நெறிமுறைக் குறியீடானது குறித்த விளையாட்டுக் கழகத்தின் நிர்வாகம் (Management), பயிற்றுவிப்பாளர்கள் (Coaches), விளையாட்டு வீரர்கள் (Athletes) மற்றும் ஆதரவாளர்கள் (Supporters) என அனைத்துத் தரப்பினருக்குமானதாக இருப்பதும் அவசியமாகும்.

**4. சூழல்:** மனிதர்களின் நடத்தை மற்றும் சிந்தனை மாற்றத்தில் சூழலின் தாக்கம் பிரதானமானதாகும். எனவேதான், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நன்மைகளை செய்வதற்கு ஆசையும் ஊக்கமும் ஊட்டி தீமைகளைக் கடுமையாக எச்சரித்து அவற்றைத் தவிர்ந்து வாழ்வதன் அவசியத்தை வலியுறுத்துகின்ற அதேவேளை நன்மைகள் செய்வதற்கான சூழலையும் தீமைகள் அற்ற சூழலையும் உருவாக்குவதில் அதிக கவனம் செலுத்தியிருப்பதைக் காணலாம். நவீன உளவியலாளர்கள் ஒருவரது நடத்தை மாற்றம் சமவயதினர்களாலும் சுற்றுச் சூழல் காரணங்களாலும் தாக்கமுறுவதாக விபரிக்கின்றனர். ஆகவே, விளையாட்டுக் கழகங்கள் எப்போதும் தமது கழக சூழல், அங்கத்தவர்களுக்கு பயிற்சி வழங்கும் சூழல், மேலும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் சூழல் ஆகிய மூன்று சூழல்கள் பற்றியும் கூடிய கவனம் செலுத்துவது அவசியமாகும்.

### *சமூகத்தின் பொறுப்பு*

இன்று விளையாட்டுக் கழகங்கள் ஊர்மட்ட கட்டமைப்பின் தவிர்க்க முடியாத அம்சம் என்ற வகையிலும் நேர்மறையாகவோ எதிர்மறையாகவோ சமூக நடத்தைகளைத் தீர்மானிப்பதில் அதன் பங்கு அளப்பரியது என்ற வகையிலும் விளையாட்டுக் கழகங்களை வினைத்திறன்மிக்க ஆக்க சக்திகளாக மாற்ற சமூகத் தலைமைகள் விளையாட்டுக் கழகங்களோடு ஆரோக்கியமான உறவைப் பேண வேண்டும். சமூகத்திலுள்ள உலமாக்களும் புத்திஜீவிகளும் துறைசார் நிபுணர்களும் விளையாட்டுக் கழகங்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்க வேண்டும். விளையாட்டுக் கழகங்களின் பௌதிகத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதிலும் சமூகத்தின் வசதியுள்ளவர்கள் ஈடுபாடு காட்ட வேண்டும்.

இவ்வாறு பல்வேறு தரப்பினரும் ஒன்றிணைந்து எமது ஊர்களிலுள்ள விளையாட்டுக் கழகங்களை சமூக மாற்றத்தில் வினைத்திறன் மிக்க முகவர்களாகத் தரமுயர்த்த முடியும். அது பற்றிய கலந்துரையாடல்கள் ஊர்மட்டங்களில் ஆரம்பிக்கப்பட வேண்டும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அஷ்ஷெய்க் எம்.எச். வஹாப் (இஸ்லாஹி) (B.A)
PGD in Psychology, PGD in CPR,
Dip in Psychological Counselling,
Senior Counselling Supervisor, NISD,
Divisional Child Protection Officer of NCPA

# கருவறையில் ஒரு கல்விக்கூடம்

மனிதனுக்கு உடலியல் தேவைகள், உளவியல் தேவைகள் (ஆன்மா), அறிவியல் தேவைகள் மற்றும் பண்பாட்டுத் தேவைகள் காணப்படுகின்றன. இத்தகைய தேவைகள் சமமாக நிறைவேற்றப்படுமாயின் அவன் ஒரு சிறந்த நற்பிரஜையாக மாறுவான் என்பதில் சந்தேகமில்லை.

சமநிலை ஆளுமை கொண்ட நற்பிரஜைகளை, நல்ல பிள்ளைகளை உருவாக்குவதில் 04 விடயங்கள் தாக்கம் செலுத்துகின்றன.

1. தரமான கல்வி (Quality Education)
2. சிறந்த தேகாரோக்கியம் (Good Physical Health)
3. ஆன்மிகப் பெறுமானங்கள் (Spiritual Values)
4. சிறந்த ஒழுக்கப் பண்பாடுகள் (Good Moral Characters)



இந்த நான்கு விடயங்களுள் 'தரமான கல்வி' (Quality Education) என்பது ஏனைய மூன்று விடயங்களைப் பெற்றுக்கொள்வதில் அதிகதாக்கம் செலுத்துவதாலும் இத்தகைய கல்வியானது கருவறையிலிருந்தே ஆரம்பிக்கப்படுவதாலும் இக்கட்டுரை அது பற்றி விரிவாக நோக்குகிறது.

### தரமான கல்வி (Quality Education)

இது ஒருவர் பிறந்தது முதல் இறக்கும் வரை இடம்பெறுகின்றது. குழந்தை தாயின் வயிற்றிலிருக்கும்போதே கற்றுக் கொள்கிறது (learning from the womb), கற்றுக் கொள்வதற்கான புலன்கள் விருத்தியடைகின்றன என பல்வேறு ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

கருவறையில் இருக்கும் ஒரு குழந்தையால் எதையாவது கற்றுக் கொள்ள முடியுமா? (Can a baby learn anything in the womb/ Does fetus think?)

ஒரு பிள்ளை கற்றுக் கொள்வதற்கு ஐம்புலன்களும் உதவி செய்கின்றன. குறிப்பாக பார்வைப் புலனும் செவிப் புலனும் உள்ளமும் பாரியளவில் தாக்கம் செலுத்துகின்றன. இது பற்றி அல்குர்ஆன் பல இடங்களில் குறிப்பிடுகிறது.

"அன்றியும் உங்களுக்குச் செவிப்புலனையும் பார்வைகளையும் இதயங்களையும் - நீங்கள் நன்றி செலுத்தும் பொருட்டு - அவனே அமைத்தான்." (அல்குர்ஆன் - 16: 78)

கேட்டல் ஒரு பிள்ளை விருத்தி செய்து கொள்ளும் இரண்டாவதும் தொடர்பாடலுக்கு மிக முக்கியமானதுமான ஒரு புலனாகும். ஒரு சிசுவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டல் புலனானது கருவுற்றதிலிருந்து 3 ஆவது வாரத்தில் உருவாக ஆரம்பிக்கிறது. சுமார் 25 வாரங்கள் முடிவடையும்போது சிசுவின் செவிப்பு லத் தொகுதி முழுமையாக விருத்தியடைந்து பல்வேறு ஒலிகளைச் செவிமடுக்கத் தயாராக இருக்குமென ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

36 வாரங்கள் முடியும்போது அந்த சிசுவினால் பல்வேறு மனோநிலைகள், பேச்சு மற்றும் இசைக் கான பல்வேறு மனவெழுச்சி ரீதியிலான பிரதிபலிப் புக்களைக் கண்டறிய முடியுமாக இருக்கும். அந்த ஒலிகளை வைத்து சந்தோஷம், கவலை, பதகளிப்பு, அமைதி போன்ற அம்சங்களை உடனடியாக அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

**கருவறையிலிருக்கும் ஒரு சிசு எவற்றையெல்லாம் கற்றுக் கொள்கின்றது?**

தாயினது பேச்சு (Mother's speech), தாயின் குரலோசை, ஒலிப்பு போன்றவற்றுக்கு இசைந்து அசைதல், துலங்களை வெளிப்படுத்தல் என்பன கருவறையில் இடம்பெறுகின்றன. பிறந்த பிறகு தாய்க்கும் சேய்க்குமிடையில் சிறந்த தொடர்பு ஏற்படுவதற்கு இது காரணமாக அமைவதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

கருவிலிருக்கும் ஒரு சிசு திடீரெனச் செவிமடுக் கும் ஒலிகளுக்கு அதிர்ச்சியடையும் அதேவேளை அமைதியான, சாந்தியான ஒலிகளுக்கு அமைதிய டைவதும் கண்டறியப்பட்டுள்ளது.

25 ஆவது வாரம் தொடங்கும்வேளை (Starting of Third Trimester) கருவறைக்கு வெளியிலிருந்து வரும் ஒலிகளையும் செவிமடுக்கின்றது. அந்த ஒலிகள் மூளையில் புதிய ஞாபகங்களுக்கான வலைய மைப்புக்களை உருவாக்குவதுடன் அச்சிசுவின் உளவியல் ரீதியான துலங்கலிலும் தாக்கத்தை ஏற்ப டுத்துகின்றன.

தாய் உண்ணும் உணவுகளின் சுவையை பிள்ளை கள் தொப்புள் கொடி மூலம் அறிந்து கொள்வதா கவும் பிறந்த பின்னர் இத்தகைய சுவைகளை மிக வேகமாக இனங்கண்டு துலங்குவதாகவும் பல ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

கருவறையிலிருக்கும் ஒரு குழந்தை மூன்று பிரதான வழிகளில் கற்றுக் கொள்வதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

கருவறையிலிருக்கும்போது செவிமடுத்த, அனுப வப்பட்ட ஒலிகளை உணரக் கூடியவர்களாக இருப்பதுடன் பிரசவத்தின் பின்னர் இத்தகைய ஒலிகளைச் செவிமடுக்கும்போது அமைதியடை கின்றனர்.

கருவறையிலிருக்கும் குழந்தையுடன் தாய் குறித்த சில உரையாடலைத் திரும்பத் திரும்ப மேற்கொண்டால், குறித்த சொற்களுக்கு நன்கு பரிச் சயமாவதுடன் அச்சொற்களுக்கு உடனடியாகத் துலங்கலை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

கருவிலிருக்கும் குழந்தையானது, தாய் குறிப்பி டும் சொற்கள் மற்றும் பொருட்களை சொல்லும் விதம், சொல்லும்போது என்ன நினைக்கிறார் போன் றவற்றை இணைப்பதன் மூலம் கற்றுக் கொள்கிறது.

அதாவது தாயினது தனிப்பட்ட பழக்கவழக் கங்கள், தாயினைச் சூழவுள்ள பழக்கவழக்கங்கள், சுற்றுச் சூழல் நடைமுறைகள் போன்றன கருவறை யில் இருக்கும் பிள்ளையின் வளர்ச்சியில் தாக்கம் செலுத்தும் என்பதை அறிய முடிகிறது.

கொரியாவில், பல கர்ப்பிணிப் பெண்கள் தங்கள் குழந்தைகளின் திறமை, ஆளுமை மற்றும் புத்திசா லித்தனத்தின் வளர்ச்சிக்கு உதவும் என்ற நம்பிக்கை யில், ஒவ்வொரு நாளும் டைக்யோ (Taegyo) எனும் கற்பித்தல் முறையை நடைமுறைப்படுத்துகின்ற னர். மகப்பேற்றுக்கு முற்பட்ட இப்பாரம்பரியக் கல்வியானது, 1392ஆம் ஆண்டுக்கு முந்தையதும் மேற்கத்தியர்களுக்கு மத்தியில் நன்கு பரிச்சயமான பல சிந்தனைகளை உள்ளடக்கியதுமாகும்.

பிரான்ஸ் நாட்டில் ஹெப்டநோமி (Haptonomy) எனும் ஒரு கல்வி முறை நடைமுறைப்படுத்தப்படு கிறது. இது வெல்டமென் எனும் ஒரு டச்சு விஞ் ஞானியால் விருத்தி செய்யப்பட்ட கல்வி முறையா கும். இக்கல்வி முறையானது முதன்மையாக தொடு கையை (Touch) மையப்படுத்தியதாகக் காணப்படு கிறது. அதாவது, பெற்றோர் தாயின் வயிற்றில் கையை வைத்து வயிற்றிலிருக்கும் குழந்தையுடன் உரையாடுதல் போன்ற செயற்பாடுகளை உள்ள டக்கியது. குழந்தை பிறந்ததற்குப் பின்னும் பெற் றோர் தங்கள் குழந்தையுடன் நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்த உதவும் வகையில் வடிவ மைக்கப்பட்டுள்ளது.

**கருவிலிருக்கும் சிசுக்களுக்கு நாம் எவ்வாறு கற்றுக் கொடுக்கலாம்?**

பெற்றோரின் பிரார்த்தனைகள் மிக முக்கியமான தாகும். குறிப்பாக, தாயின் பிரார்த்தனை மிகவும் வலிமையானதும் சக்தி மிக்கதுமாகும். நபி ஸகரிய்யா (அலை) அவர்கள் அல்லாஹ்விடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுத்தமான ஒரு சந்ததியைக் கேட்டுப் பிரார்த் தனை செய்தார்கள்.

கர்ப்பிணித் தாய்மார்கள் தினமும் குர்ஆன் ஓத வேண்டும். குறிப்பாக, கரு உருவாகி 25ஆம் வாரத் திலிருந்து சிசுவினால் செவிமடுக்க முடியும் என்ப தால் வயிற்றில் கையை வைத்து தனது உள்ள பிள்ளைசெவிமடுக்கிறது என்ற உணர்வுடன் அல்குர்ஆனை ஓதலாம். இது சிசுவுக்கு அமைதி யைக் கொடுப்பதுடன் மகப்பேற்றுக்குப் பின்னர் குர்ஆனை ஓதவும் அமைதி பெறவும் சாதகமாக அமையும்.

ஆன்மிகம் சார்ந்த, ஒழுக்க விழுமியம் நிறைந்த, அறிவியல் மற்றும் பண்பாடுகளை உள்ளடக்கிய விடயங்களை கருவிலிருக்கும் சிசுவுடன் கதைப்பது பிரயோசனமளிக்கும்.

கர்ப்பிணிப் பெண்களின் அணுகுமுறை, பேச்சு முதல் நடத்தை வரை அவர்களின் குழந்தைக ளில் மிகவும் செல்வாக்கு செலுத்துகிறது.

தாய் கர்ப்பமாக இருக்கும்போது தாய், தந்தை இருவரும் நன்றாக, இணக்கமாகப் பழகுவது மிக முக்கியமான அம்சமாகும். கணவனும் மனைவியும் அடிக்கடி சண்டையிட்டாலோ, ஒழுக்கக்கேடான செயல்களில் ஈடுபடுபட்டாலோ குழந்தையின் மூளை பெற்றோர் செய்த அனைத்தையும் பதிவு செய்யும்.

**தாய் செய்யும் நற்செயல்களைப் பற்றி பிள்ளைக்கு விளக்குதல்.**

உதாரணமாக, ஒரு தாய் தனது பெற்றோரின் வீட்டிற்குச் சென்றால், உடனடியாக வயிற்றில் மெதுவாகத் தட்டிக் கொண்டே, “மகனே, நாங்கள் இரத்த உறவைப் பேணுவதற்காக பாட்டி வீட்டில் இருக்கிறோம்” என்று கூறலாம்.

ஒலிகளைப் பிள்ளைகளுக்கு விளக்குதல் (Explain the Sound to Children)

“மகனே, தொழுகைக்கான நேரம் வந்துவிட்டது என்பதற்கான அடையாளம். இப்போது தொழுகையை நிறைவேற்றுவோம்” என்று கூறலாம்.

கர்ப்பமாக இருக்கும்போது அதிகாலையில் எழுந்து தொழுதல் (தஹஜ்ஜுத் தொழுகை), குர்ஆன் ஓதுதல், தான தர்மம் செய்தல், ஏனைய ஸுன்னாக் களை நடைமுறைப்படுத்தல் போன்ற நற்செயல் களைப் பெருக்கிக் கொள்ளுங்கள். குழந்தைகளும் பணிவுடன் நடந்து கொள்வதற்கும் நல்ல

தாய் கர்ப்பமாக இருக்கும்போது தாய், தந்தை இருவரும் நன்றாக, இணக்கமாகப் பழகுவது மிக முக்கியமான அம்சமாகும். கணவனும் மனைவியும் அடிக்கடி சண்டையிட்டாலோ, ஒழுக்கக்கேடான செயல்களில் ஈடுபடுபட்டாலோ குழந்தையின் மூளை பெற்றோர் செய்த அனைத்தையும் பதிவு செய்யும்.

செயல்களைச் செய்வதற்கும் இவ்வகையான செயற் பாடுகள் தூண்டுதலாக அமையும்.

**உசாத்துணைகள்**


Bhamani, S.(2017). Educating Before Birth via Talking to the Baby in the Womb: Prenatal Innovations. Journal of Education and Educatio nal Development, Vol. 4 No. 2 (Dec 2017).

u;epper, P. (1991). An examination of fetal learning before and after birth. The Irish Journal of Psychology, 12(2), 95-107.

Suciati.(2015). The Impact of Prenatal Education Through Stimulating Quran's Recitation On Child'sGrowth. QIJIS: Qudus International Journal of Islamic Studies Volume 3, Issue 2, August 2015.

Pugh, M.A. 2015. Childbirth Education – Then and Now. International Journal of Childbirth Education, vol 24 no. 4.ICEA Inc: Las Vegas.

Chang, S, Park,S. & Chung, C (2004). Effect of Taegyo-focused Prenatal Education on Mater nal-fetal Attachment and Self-Efficacy Related to Childbirth. Journal of Korean Academy of Nursing (2004) Vol. 34, No. 8





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மக்கள் வாக்காளர் என்ற நிலையில் இருந்து 'குடிமகன்' என்ற நிலைக்கு உயர வேண்டும்...

– ரொஹான் ஹெட்டியாரச்சி –

**பஃவ்ரல் (PAFFREL) அமைப்பு பற்றி சுருக்கமாக விபரிக்க முடியுமா?**

ஆரம்ப கால தேர்தல் வன்முறைகள், கெடுதிகள் போன்றவற்றைக் கண்டு மனம் வெதும்பிய புத்திஜீவிகள் அவற்றை இழிவளவாக்குவது எப்படி என்பது பற்றிய கலந்துரையாடலை ஆரம்பித்தனர். அவர்கள் முதலில் வாக்குச் சாவடிகளுக்குச் சென்று தேர்தல் செயற்பாடுகளை அவதானித்து அறிக்கைகளை வெளியிட்டனர். அப்போது பஃவ்ரல் என்ற அமைப்போ, பெயரோ இருக்கவில்லை. முதன் முதலில் உத்தியோக பூர்வமான தேர்தல் கண்காணிப்புப் பணிகள் நடைபெற்ற 1988 தேர்தலின்போது தேர்தல் ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையில் பஃவ்ரல் என்ற பெயரைக் குறிப்பிட்டிருந்தார். அப்போதுகூட எமது அமைப்பு பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. வெளிநாட்டு உதவிகளும் பெறப்பட்டிருக்கவில்லை.

சுய முயற்சியினால் பிரஜைகள் தாங்களாக அமைத்துக் கொண்ட நிறுவனமே பஃவ்ரல் அமைப்பு என்று கூறுவதே பொருத்தமானது. பஃவ்ரல் என்பதன் கருத்து People Action for Free and Fair Elections. அதாவது, நீதியான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டமைப்பு என்பதாகும். 2000ஆம் ஆண்டிலிருந்து ஜனநாயகத்தை விரும்பக் கூடிய உலக அமைப்புக்களில் இருந்து நன்கொடைகள் கிடைக்கின்றன. 2004இல் தேர்தல் திணைக்களத்தால் அது உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.

**இலக்கு நோக்கிய உங்கள் நிறுவனத்தின் பயணத்தில் இதுவரை எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகளை சுருக்கமாக விளக்க முடியுமா?**

எமது நோக்கம் வெற்றியடைந்துள்ளது என துணிந்து சொல்ல முடியும். அதற்கான சில உதாரணங்களை என்னால் தர முடியும்.

**உதாரணம் 01**

மற்றவரின் வாக்கைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் முகமாக நாம் தொடர்ந்து மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக 2008ஆம் ஆண்டு தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டும் என்ற சட்டம் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் 2008இல் இருந்து மக்கள் விருப்பத்தைக் கேள்விக்குறியாக்கும் 'மக்களின் வாக்கைக் கள்ளத்தனமாகப் பயன்படுத்தல்' என்ற விடயம் பெருமளவு குறைந்துள்ளது. இது இலங்கையின் தேர்தல்

**தேர்தல் பிரசாரச் செலவுகள் தொடர்பாக ஒரு கொள்கையை ஏற்படுத்த நாம் பாடுபட்டு வருகின்றோம். பல நாடுகளிலும் ஒரு சட்டமாக ஆக்கப் பட்டுள்ளது. எமது நாட்டில் சட்டங்கள் வரையறுக் கப்படாவிடினும் கூட இலஞ்ச ஊழல் சட்டம் உள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றில் ஒரு திருப்புமுனை. இதற்கு அப்பால் 18 மாவட்டங்களில் நடமாடும் சேவை மூலம் அடையாள அட்டை விநியோகம் துரிதப்படுத்தப் பட்டதும் எமது முயற்சியின் பலனாகும்.

**உதாரணம் 02 (வன்முறை)**

Ballot without Bullet என்ற கோஷம் பலருக்கும் நினைவிருக்கலாம். உடதலவின்னைப் படுகொலைகள் இதற்கான சிறந்த உதாரணம். அந்த அசம்பாவிதத்தில் 7 பேர் கொல்லப்பட்டனர். அதற்கு முன்னரும் பின்னரும் கூட ஒவ்வொரு தேர்தலின் போதும் 20 பேர் வரை கொல்லப்படுகின்ற நிலை காணப்பட்டது. துப்பாக்கிப் பிரயோகம், வாள் வெட்டு, குண்டுத் தாக்குதல், தீவைத்தல் என்று பல விரும்பத்தகாத நிகழ்வுகள் தொடர்ந்தன.

நாம் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் ஒரு மேடைக்கு அழைத்துக் கலந்துரையாடி ஒரு தீர்வுக்கு வர முடிந்தது. 'அரசியல் கட்சிகளுக்கிடையில் போட்டி இருப்பது உண்மை. ஆனால், வன்முறைகளில் இருந்து தவிர்ந்து கொள்வோம்' என்பதே அந்த விடயம்.

**☛ விழுமியம், ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வகையில் குறித்த திகதியில் தேர்தல்கள் நடத்துவதற்கான உங்கள் முன்னெடுப்புக்கள் எத்தகையது?**

அவ்வப்போது நீதிமன்றத்தை நாடியுள்ளோம். இப்போதும் கூட ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது.

ஏனைய தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்களுடன் ஒரு வலையமைப்பாக நின்று கருமமாற்றுகின்றோம். தெற்காசிய வலயத்தில் ஒரு வலையமைப்பாக சர்வதேச அங்கீகாரத்துடன் கருமமாற்றுகின்றோம். அவர்களின் உதவி மற்றும் ஆலோசனை எமக்குக் கிடைக்கும். ஒருவாறாக 1989 இற்கு முன்னிருந்த தேர்தல் வன்முறைக் கலாசாரத்தை 99 சதவீதம் குறைக்க நாம் வெற்றிகரமான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இதில் எமது அமைப்புக்கு ஒரு பெரும் பங்கு இருக்கிறது.

**☛ தேர்தல் பிரசாரச் செலவுகள் பற்றிக் கூறுங்கள்.**

தேர்தல் பிரசாரச் செலவுகள் தொடர்பாக ஒரு கொள்கையை ஏற்படுத்த நாம் பாடுபட்டு வருகின்றோம். பல நாடுகளிலும் ஒரு சட்டமாக ஆக்கப்பட்டுள்ளது. எமது நாட்டில் சட்டங்கள் வரையறுக்கப்படாவிடினும் கூட இலஞ்ச ஊழல் சட்டம் உள்ளது. சென்ற மாகாண சபைத் தேர்தலின்போது மொனராகலை மாவட்ட அபேட்சகர் ஒருவர் மதுரகட்டிய தொகுதியில் நான்கு கோடி ரூபா செலவழித்தமை கண்டறியப்பட்டது. மக்களின் மின்சார, குடிநீர்க் கட்டணம் போன்றவற்றைச் செலுத்தியமை, கூரைத் தகடுகளை விநியோகித்தமை தொடர்பில் நாம் நீதிமன்றத்தை நாடினோம். பின்னர் அவருடைய தெரிவு ரத்துச் செய்யப்பட்டது.

**☛ நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு அப்பால் உங்கள் முன்னெடுப்புக்கள் எவை?**

அண்மைக் காலமாக தேர்தல் முறை மாற்றம் பற்றிக் கலந்துரையாடியதோடு நாங்களும் ஒரு பிரேரணை முன்வைத்துள்ளோம். திருத்த வேண்டிய இடங்கள் இனங்காணப்பட்டுள்ளன. பொறுப்பான அமைச்சரிடம் கலந்துரையாடி, பெண்கள் மற்றும் இளைஞர் அமைப்புகளின் கருத்துகளைப் பதிவு செய்துள்ளோம். ஆட்சியாளர் தமது நலனுக்கேற்ப தேர்தல் கலண்டரை மாற்றுவது இயல்பாகப் போய்விட்டது. பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, வங்காள தேசம் ஆகிய நாடுகளில் தேர்தல் கலண்டர் முறை உள்ளது. இதற்கான போராட்டம் தொடரும்.

**☛ உள்ளிருப்பு நோயாளிகள், சந்தேகத்தின் பேரில் காவலில் வைக்கப்பட்டுள்ளோர், வெளிநாட்டு வேலைவாய்ப்பில் உள்ளோர்களுக்கு வாக்குரிமையைப் பயன்படுத்த ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?**

இதில் தொடர்ந்து நாம் கவனம் செலுத்துகின்றோம்.

இது பற்றி ஒரு முன்மொழிவை நாம் தேர்தல் ஆணையாளருக்கு வழங்கியுள்ளோம்.

1. உள்நாட்டில் இருந்து கொண்டே வாக்குரிமையைப் பயன்படுத்த முடியாதோர்
2. நாட்டுக்கு வெளியே இருப்பதால் வாக்குரிமையைப் பயன்படுத்த முடியாதோர்

நாடு முழுவதும் ஒரே விதமான அமைப்பைக் கொண்ட ஜனாதிபதித் தேர்தலில் இதனை முதலில் அமுல்படுத்தக் கோரியுள்ளோம். சில சட்டத் திருத்தங்கள் வர வேண்டியுள்ளன.

**☛ ப.்.வ்ரல் அமைப்பு கடந்து வந்த பாதை யாது?**

இதனை மூன்று கட்டங்களாகக் குறிப்பிடலாம்.

1. 1989 இற்கு முன்னர் அதிகமான தேர்தல் மோசடிகள் நடந்த காலம். இக்காலத்தில் வன்முறையற்ற தேர்தலை நோக்கியதாகச் செயற்பட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. 2002-2010 காலப் பிரிவில் தேர்தல் சட்டங்களைத் திருத்தியமைப்பது தொடர்பில் எமது சிறப்புக் கவனம் இருந்தது.

3. 2015 முதல் இன்று வரையான காலம் நீதியானதும் வன்முறையற்றதுமான தேர்தல் நடந்தாலும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் தரம், பண்பு பற்றிய பிரச்சினை கவனத்திற் கொள்ளப்பட்டன. தேர்ந்தெடுக்கப்படுபவர் ஒரு திருடனோ கொள்ளைக்காரனோ எனில், நாட்டு மக்களுக்கு என்ன பயன் இருக்கப் போகிறது? அதனால்தான் நாம் தேர்தல் முறை மாற்றம் பற்றி கவனம் செலுத்தி வருகின்றோம்.

இந்த நாட்டு மக்கள் அறியாமையினால் இத்தவறைச் செய்யவில்லை. மாறாக, தெரிந்து கொண்டேதான் செய்கின்றனர். தேர்தல் வேட்பாளருக்குப் புள்ளி வழங்கும் முறையொன்றைத் திட்டமிடுவது பற்றியும் நாம் சிந்தித்து வருகின்றோம்.

**☛ பொதுவாக உங்கள் நிறுவனத்துக்குள்ள சவால்கள் என்னென்ன?**

அரசியல் ரீதியான சவால்கள் மிகவும் குறைவு. நாங்கள் அரசாங்கங்களை விமர்சிப்பது கொள்கை அடிப்படையிலேயே அன்றி தனிப்பட்ட நபர்களையல்ல. எதிர்க் கட்சியாக இருக்கும்போது எம்மோடு கைகோர்த்துப் பயணியாற்றி அரசாங்கத்தை அமைத்த பிறகு மாறி விடுகின்றனர். எமது பிரதான சவால் இந்நாட்டு மக்களை விழிப்பூட்டுவது பற்றியதாகும். பலரும் ஒன்றிணைந்தால் மட்டுமே இது சாத்தியமாகும். ஒன்றிணைந்து பணியாற்ற முடியாத நிலையில் எமக்கான நிதியைப் பெறுவதிலும் சவால் உள்ளது. நோக்கம் சரியாயின், அர்ப்பணிப்பும் முறையான வேலைத் திட்டமும் இருப்பின் நிதியுதவி செய்யப் பலரும் முன்வருகின்றனர்.

பஃவ்ரல் நிறுவனம் 40 ஆண்டுகளாக இந்நாட்டில் பணிபுரிகிறது. கடந்த 25 வருடங்களாக எமது கோஷமாக இருப்பது, மக்கள் வாக்காளராக அன்றி பிரஜைகளாக மாற வேண்டும் என்பதேயாகும். அதாவது, வாக்குகளைப் பெற்றுத் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் என்ன செய்கிறார்கள், என்ன செய்ய வேண்டும் என்ற விளக்கம் பிரஜைகளிடம் தான் அதிகளவாகக் காணப்பட வேண்டும். வாக்காளர்களின் பணி சில நிமிடங்களில் முடிந்து விடும். ஆனால், குடிமக்களின் பணி சடுதியில் முடியக் கூடியதல்ல.

எனவே, இந்நாட்டின் எதிர்காலத்திற்காக எமது சந்ததிகளின் நல்வாழ்வுக்காக வாக்களிக்கும்போதும் தீர்மானம் எடுக்கும்போதும் பிரஜை என்ற உயர் இடத்தில் இருந்து சிந்திக்க வேண்டும். ■

---

**"விழுமியம்" காலாண்டு சஞ்சிகையில் பிரசுரிக்கப்படுவதற்குத் தகுதியான கட்டுரைகள் வாசகர்களிட மிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. இக்கட்டுரைகள் பின்வரும் ஒழுங்குமுறைமைக்குட்பட்டதாக அமைய வேண்டும் என ஆசிரியர் பீடம் எதிர்பார்க்கப்படுகின்றது.**

1. சுய ஆக்கமாக அல்லது மொழிபெயர்ப்பாக இருத்தல்.
2. வேறு இதழ்களில் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படாத ஆக்கமாக இருத்தல்.
3. காலத்தின் தேவையை ஈடு செய்யக்கூடியதாக இருத்தல்.
4. தேசத்துக்கும் சமூகத்துக்கும் மார்க்கத்துக்கும் பங்களிப்புச் செய்யக் கூடியதாக இருத்தல்.
5. குர்ஆன், ஸுன்னா ஆதாரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல்.
6. சிறுகதை, கவிதை, சிறுவர் உலகம், பெண்கள் பகுதி, சர்வதேசம் என பல பகுதிகளை உள்ளடக்கிய கட்டுரைகள்.
7. உசாத்துணைகள் அல்லது மேலதிகத் தேடலுக்கான நூல்கள் குறிப்பிடப்படுவது வரவேற்கத்தக்கது.
8. ஆக்கங்களை முடியுமானளவு கணினிமயப்படுத்தி அனுப்பவும். (தட்டச்சுப் பிரதி, A4, Font 12 அளவில் 3 பக்கங்களுக்குட்பட்டதாக இருத்தல்)
9. எழுத்தாளரின் சுயவிபரக்கோவையை கட்டுரையோடு இணைத்து Jipublishers@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது 076 5308 509 என்ற Whatsapp இலக்கத்திற்கு அனுப்பவும்.
10. கிடைக்கப்பெறும் கட்டுரைகள் மீள்பரிசீலனைக் குட்படுத்தப்பட்டு பிரசுரிப்பதற்கான அல்லது திருத்தம் செய்வதற்கான முழு உரிமையும் நிர்வாக ஆசிரிய பீடத்திற்குண்டு.
11. ஆக்கங்களில் தெரிவிக்கப்படும் கருத்துக்களுக்கு அதனை எழுதியவர்களே பொறுப்பாளர்களாவர்.

---

**வருடாந்த சந்தா விபரம்:**

உள்நாட்டு சந்தா ரூ. 1000.00 (தபால் செலவு உட்பட) சந்தா தொகையை பின்வரும் வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டு பற்றுச் சீட்டை உங்கள் பெயர் மற்றும் முகவரியுடன் 076 530 8509 என்ற இலக்கத்துக்கு WhatsApp செய்யவும் அல்லது கீழுள்ள QR ஐ Scan செய்து Online மூலம் பெற்றுக் கொள்ளவும்.

**வங்கிக் கணக்கு:**
**Acc Name: Just Media Foundation**
**Bank: BOC - Maradana Branch**
**Acc.No: #0079088651**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கை பொருளா...** *(15ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

நிதியத்தின் ஆலோசனைகளைப் பின்பற்றி பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியுமென ஜனாதிபதி நம்புகிறார். ஆனால், அடிப்படைப் பிரச்சினைகள் அப்படியே காணப்படுகின்றன. இந்த நெருக்கடி ஏன் வந்தது? எங்கே பிழை நடந்தது? அதற்குக் காரணமானவர்கள் யார்? அவர்களின் செயலுக்கான பொறுப்புக் கூறல் என்ன? தண்டனை என்ன? நாட்டில் இதுவரை வாங்கப்பட்ட கடன்கள் எவ்வளவு? அவை எவ்வாறு செலவிடப்பட்டன? எங்கெங்கு செலவிடப்பட்டன? யாரெல்லாம் அதற்குப் பொறுப்பானவர்கள்? முறையற்ற விதத்தில் பலரும் சந்தேகப்படுவதுபோல பணம் வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தால் அது பற்றி தடயவியல் நிதியாய்வு (Forensic Auditing) மேற்கொள்ளப்பட்டு STAR (Stolen Assests Recovery Initiative) எனப்படும் உலக வங்கியின் களவாடப்பட்ட சொத்துகளை நாட்டுக்குக் கொண்டுவரும் பொறிமுறையுடன் இலங்கை இணைந்து செயற்பட்டு திருடப்பட்ட சொத்துகளை மீளக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமா? குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படுமா? குற்றம் செய்ததாக சந்தேகம் கொள்ளப்படுபவர்களே குற்றத்தை விசாரிக்கும் குழுக்களால் மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடியுமா?

இந்தக் கேள்விகளுக்கு விடையில்லாத நிலையில் நாட்டின் மீதும் ஆட்சியாளர்களின் மீதும் நம்பிக்கையற்று நாளாந்தம் நாட்டை விட்டு ஓடும் மூளைசாலிகளின் வெளியேற்றத்திற்கு எவ்வாறு பதிலளிக்கப்போகிறீர்கள்?

இதுபோன்ற பல்வேறு வினாக்களுக்கு இலங்கை விடை தேட வேண்டியுள்ளது. ஆனால், அதைப் பற்றியெல்லாம் ஆட்சியாளர் எவரும் கவலைப்படுவதைக் காண முடியவில்லை. மாறாக, இப்போது ஏற்பட்டுள்ள தற்காலிக சாதகமான பொருளாதார சூழலைப் பயன்படுத்தி தமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள மீண்டும் இனவாதத்தைக் கூர்மைப்படுத்தி அடுத்துவரும் தேர்தல்களில் வெற்றி பெறத் தேவையான காய்நகர்த்தல்கள் மேற்கொள்ளப்படுவதை வெளிப்படையாகக் காண முடிகிறது. ஆகவே, இப்போதைய இந்த தற்காலிக ஆசுவாசச் சூழல் சிலர் வேடிக்கையாகச் சொல்வதைப் போல் நரகத்தில் விடப்பட்ட ஓர் இடைவேளையாகக் கூட இருக்கலாம். ■

**கருணை...** *(09ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

(v) Core Value ஆக கருணை எனும் பண்புப் பெறுமானம்

நாம் எமது வாழ்வில் கடைப்பிடிக்கின்ற Core value என்ற தரத்தில் கருணை என்ற பண்பு பெறுமானத்தை எடுத்துக் கொள்வதென்பது எமது வாழ்வில் எல்லா விடயங்களிலும் எல்லா நிலைகளிலும் எல்லாத் தரப்பினரோடும் இப்பண்பைக் கடைப்பிடிக்கும் நிலையைக் குறிக்கிறது.

எமது தனிப்பட்ட விருப்புகளில், தீர்மானங்களில், தெரிவுகளில் கருணை என்பது அடிப்படையாக அமைய வேண்டும். அதற்கு முரணானவை இருக்கக் கூடாது

அத்தோடு, எமது குடும்ப உறவுகளுடனான தொடர்பாடல்களிலும் கொடுக்கல்வாங்கல்களிலும் இப்பண்பு கோலோச்சி நிற்க வேண்டும். எமக்கு அதிகாரமும் செல்வாக்கும் இருக்கின்ற இடங்களில் இப்பண்பை நாங்கள் கடைப்பிடிப்பதை அதிகபட்சம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

எமது தொழில் ரீதியான தொடர்பாடல்களிலும் நிர்வாகச் செயற்பாடுகளிலும் கூட கருணைப் பெறுமானம் அடிப்படையாக அமைய வேண்டும்.

இவற்றோடு எமது சமூக செயற்பாடுகளிலும் சமூக சேவைப் பணிகளிலும் சக அங்கத்தவர்களுடனும் ஏனைய அமைப்புக்கள், நிறுவனங்களுடனான தொடர்பாடல்களிலும் ஈடுபாடுகளிலும் கருணைப் பண்புப் பெறுமானம் அடிப்படையாக வேண்டும்.

**இறுதி மூச்சுக்கள்...** *(21ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

உடனேஇருவரும்நபி(ஸல்) அவர்களிடம்போய் விடயத்தைக் கூற, நபி (ஸல்) அவர்கள் "வாழ்க்கை என்பது அப்படித்தான்; ஏற்ற இறக்கங்கள் வரும்.

நீங்கள் தொடர்ந்தும் என்னோடு இருக்கும் நிலையில் இருப்பீர்களானால் வானவர்கள் உங்களை முஹாஸபா செய்வார்கள். எனினும், அவ்வாறு இருக்க முடியாது. சில ஏற்ற இறக்கங்கள் வரத்தான் செய்யும்" என்று உபதேசித்தார்கள்.

எமது இறுதி மூச்சுக்கள் ஈமானிய மூச்சுக்களாக அமைய வல்லோனைப் பிரார்த்திப்போம். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் அறிமுகம்

யாழ். மாநகர சபை
01 JAN 202
தாபனப்பகுதி

அல் - ஆலிமா
டாக்டர் மரீனா தாஹா ரிபாய்
(கண் வைத்திய நிபுணர்)




# டாக்டர் ரயீஸ் முஸ்தபா எழுதிய 'அத்தாட்சிகள்'

டாக்டர் ரயீஸ் முஸ்தபா எழுதிய 'அத்தாட்சிகள்' எனும் நூலை விவரணம் செய்யுமாறு நான் கேட்டுக் கொள்ளப்பட்டபோது அதனை அது வரை நான் வாசித்திருக்கவில்லை. இது நாம் ஆங்காங்கே அடிக்கடி பேசிக் கொள்கின்ற, வாசிக்கின்ற, அறிந்து கொண்டுள்ள பல்வேறு அத்தாட்சிகள் பற்றியதாக இருக்கும் என நினைத்துக் கொண்டேன். பெருவெடிப்பு (Big Bang) கோட்பாடு, மலைகளின் நிலைமை, இரு கடல்கள் கலக்காமல் இருக்கும் அதிசயம், மேகங்களின்செயல்பாடு, தேன் மற்றும் பால் இவை உருவாகும் விதம், விண்வெளி அதிசயங்கள், தாயின் வயிற்றில் வளரும் சேயின் விபரங்கள், நிறமூர்த்தங்களில் மேம்பட்டுள்ளவை வெளிக்கொணரும் குண இயல்புகள் என அடுக்கிக் கொண்டே போகக்கூடிய விஞ்ஞான தகவல்கள்... ஈஸா (அலை), ஆதம் (அலை) இருவரும் ஒரே மாதிரியானவர்கள் எனக் கூறும்போது குர்ஆனில் இருவரின் பெயர்களும் 25 முறை மட்டுமே வந்திருப்பது போன்ற அதிசய ஒற்றுமைகள்... இன்னும் எண்கள் சம்பந்தப்பட்ட பல ஆச்சரியங்கள், தொல்பொருள் ஆராய்ச்சியினர் வெளிக்கொணர்ந்த அல்குர்ஆனுடன் தொடர்புபட்ட அற்புத உண்மைகள்... என அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஆனால், இந்நூல் இவை எதனையும் குறிப்பிடவில்லை. மேலார்ந்தவாரியாக அத்தியாயங்களின் தலைப்புகளை மட்டும் பார்த்து எனது விரிவுரையை எழுதி விடலாம் எனும் எண்ணத்தில் நூலைக் கையிலெடுத்தால் மாபெரும் அதிசயம் காத்திருந்தது. ஒவ்வொரு பக்கத்தையும் சுவைத்துச் சுவைத்து வாசிக்கக் கூடிய, வாசிக்க வேண்டிய சுவாரஷ்யமான கட்டுரைகளை அங்கே கண்டேன். நானும் ஒரு வைத்தியர் என்ற காரணத்தால் மற்றவர்களை விட இன்னும் அதிகமாகக் கிரகித்துக் கொள்வதற்கும் அவர் கூறும் அதே சிந்தனைப் போக்கில் சிந்திப்பதற்கும் இயலுமாக இருந்தமை அல்லாஹ்வின் அருளேயன்றி வேறில்லை.

"மேலும் உறுதி(யாக விசுவாசம்) கொண்டவர்களுக்கு பூமியில் அத்தாட்சிகள் இருக்கின்றன. உங்களுக்குள்ளேயும் பல அத்தாட்சிகள் இருக்கின்றன. அவற்றை நீங்கள் கவனித்துப் பார்க்க மாட்டீர்களா?" (அத்தாரியாத்: 20, 21)

"நிச்சயமாக (வேதமாகிய) இது உண்மையானது தான் என்று அவர்களுக்குத் தெளிவாகும் வரையில் உலகின் பல பாகங்களிலும் அவர்களிலும் நம்முடைய அத்தாட்சிகளை அவர்களுக்கு நாம் காண்பிப்போம். (நபியே) உமதிரட்சகனுக்கு நிச்சயமாக அவன் ஒவ்வொரு பொருளின் மீதும் (அது பற்றி நன்கறிந்து) சாட்சியாக இருக்கின்றான் என்பது போதுமாக இல்லையா?" (ஃபுஸ்ஸிலத்: 53)

இவ்விரு வசனங்களிலும் அல்லாஹ் கூறுவது போல் அத்தாட்சிகள் இந்த அண்டசராசரத்தின் அனைத்துப் பாகங்களில் மட்டுமின்றி எமக்குள்ளேயும் இருக்கின்றன என்பதை நாம் அனைவரும் மேலார்ந்தவாரியாக அறிவோம். ஆயினும், எத்தனை பேர் அவற்றில் ஓரிரண்டையாவது ஆழ்ந்து கவனித்து, ஆண்டவனின் படைப்பின் விநோதங்களைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தினுள் உள்வாங்கி "யா அல்லாஹ்! நிச்சய மாக நீ இவற்றில் எதையுமே வீணாகப் படைக்க வில்லை என்பதை நான் புரிந்து கொள்வதற்கு என்னை இயலுமாக்கி வைத்தாயே, உனக்கே எல்லாப் புகழும்" என மனமுவந்து அவனைத் துதித்திருப்போம் என்பதே கேள்வி.

ஒவ்வொரு துறையிலிருப்பவர்களும் அதில் இருக்கக் கூடிய அத்தாட்சிகளைப் படைத்து வைத் திருக்கும் அல்லாஹ்வைப் பற்றி அதிசயிக்காமல் இருக்க முடியாது. அவர்கள் அது பற்றி சிந்திப்ப வர்களாக இருப்பார்களேயாயின், அதிலும் மனித உடல் என்பது இன்றுவரை, இந்த 21 ஆம் நூற் றாண்டு வரை மனிதனால் பார்த்து அதிசயிக்கத் தக்க அளவற்ற அற்புதங்களைக் கொண்டுள்ளது என்பதை அது பற்றி சிந்திக்கும் வைத்தியர்களி னால் அவர்கள் முஸ்லிமாக இருந்தாலும் இல்லா விட்டாலும் அறியப்பட்டவைதான். அதுமட்டு மல்ல, அந்த உடலில் ஏற்படக் கூடிய நோய்களும் அதிசயங்கள்தான். அதனையும் விட அவற்றைக் கண்டுபிடிக்க அல்லாஹ் எமக்குக் கற்றுத் தந்துள்ள வழிமுறைகளும் நவீன கருவிகளும் கூட அல்லாஹ் வின் அருட்கொடைகளே. அனைத்துக்கும் மேலாக அந்நோய்களுக்கான நிவாரணங்களும் சிந்தித்துப் பார்ப்போருக்கு அதிசயத்திலும் அதிசயமான வையே.

இவை அனைத்தையும் தெளிவாக விளக்கும் விதத்தில் இந்நூலாசிரியர் ஒரு சுவையான வழி முறையைக் கையாண்டுள்ளார். ஆம், கதை சொல் லல்! கதைகள் மூலமாக அறிவையும் படிப்பினைக ளையும் தருவது அல்லாஹ்வின் வழிமுறைகளில் முக்கியமானதாகும். குர்ஆனில் எண்ணற்ற இடங் களில் இவற்றைக் காண்கின்றோம். அதுவே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் வழிமுறையுமாகும். ஹதீஸ்களில் ஆயிரக்கணக் கான கதைகள், சம்பவங்கள், அறிவூட்டும் ஆதாரங் கள் அமைந்துள்ளன. அதே வழிமுறையை டாக்டர் ரயீஸ் அவர்கள் கையாண்டு, கதைசொல்லியாக மாறி ஒவ்வோர் அத்தியாயத்திலும் ஒரு குறிப் பிட்ட சம்பவத்தை, உண்மைக் கதையைச் சுவைபட எடுத்துரைக்கிறார். இதனூடாக ஒரு நோயை எமக்கு அறிமுகப்படுத்தி அதன் அடிப்படைக் கார ணங்கள், செய்யப்பட வேண்டிய பரிசோதனைகள் மற்றும் நிவாரண வழிகள் அனைத்தையும் அழகான எளிய நடைமுறையில் விளக்கி வைப்பதன் மூலம் ஒரு Detective கதை ஒன்றை கவனம் சிதறாமல் தொடர்ந்து படிப்பது போல் இந்த அத்தியாயத்தை கடைசி வரை படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தந்திருக்கிறார். அல்லாஹ் அவருக்கு மென்மேலும் அருள்பாலிப்பானாக.

இந்நூல் ஒவ்வொரு பெற்றோராலும் - இல்லை, ஒவ்வொரு மனிதராலும் அனைத்து மக்களா லும் வாசிக்கப்பட வேண்டிய நூலாகும். ஏனெனில், இது வெறுமனே அல்லாஹ்வின் படைப்பின் மகோன்னதத்தைப் பற்றி மட்டுமல்ல, பொதுமக் கள் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டிய நோய்க ளின் அறிகுறிகள், வெளிப்பாடுகள், இவற்றுடன் பெருமளவு செய்யப்பட வேண்டிய பரிசோதனை கள், செய்யக்கூடிய நிவாரண வழிமுறைகள் அனைத்தையுமே தந்து கொண்டிருக்கிறது. இன் றைய பொதுமக்கள் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல்தான் பெரும்பாலும் மருத்துவத் தைப் பார்க்கின்றார்கள். அது முற்றிலும் தவறு மட்டுமல்ல, ஆபத்தானதும் கூட. ஓரளவு அடிப் படை அறிவு அவர்களுக்கு இருக்குமாயின், அது நிச்சயம் அவர்களுக்கு சிறந்த பலனைத் தரும். அந்தப் பணியையும் இலை மறை காயாக- கதை யோடு கதையாக டாக்டர் ரயீஸ் திறம்படச் செய்தி ருக்கிறார்.

மொத்தத்தில், கையிலெடுத்தால் கீழே வைக்க முடியாத சுவாரஷ்யமான கதைகளைக் கொண்டு இந்நூல் ஒரு புறம் நம்மைப் படைத்த அல்லாஹ் வின் படைப்பின் பெருமையைப் பறைசாற்றும் அதே வேளை, இன்றைக்குப் பொதுமக்கள் அறிந்து கொள்ள வேண்டிய பல இன்றியமையாத அறிவை யும் தந்து நிற்கிறது.

வாழ்க அவர் பணி! வளர்க அவரது திறமை!

## விழுமியம் வாசகர் கருத்தரங்கம்

விழுமியம் சஞ்சிகையை மேலும் தரம் வாய்ந்ததாகக் கொண்டுவரும் நோக்கில் வாசகர்களுடன் கருத்துப் பரிமாறல் செய்வதற்கு ஆசிரியர் பீடம் தீர்மானித்துள்ளது. இவ்வகையில் ஒவ்வோர் இதழும் வாசகர் கரம் கிட்டி ஒரு மாதத்தின் பின்னர் **Zoom** ஊடாக ஒரு வாசகர் கருத்தரங்கத்தை ஏற்பாடு செய்யத்திட்டமிடப்பட்டுள்ளது. இன்ஷாஅல்லாஹ், விழுமியம் பற்றிய விமர்சனங்களை, கருத்துக்களை, ஆலோசனைகளைப் பரிமாறிக் கொள்ள விரும்பும் விழுமியம் அபிமான வாசகர்கள் **Register VRF** என **0765308509** இலக்கத்திற்கு **WhatsApp** செய்வதினூடாக தம்மைப் பதிவு செய்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறை நியதியில் திட நம்பிக்கை

- ஹாபிஸ் இஸ்ஸதீன் -

**நான்** மாணவனாக இருந்த காலத்தில் Thomas W. Arnold என்ற கீழைத்தேய மரபுத்துறை அறிஞர் எழுதிய Preaching of Islam என்ற நூலை வாசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அந்நூலில் அடங்கியிருந்த பெரும்பாலான விடயங்களை நான் மறந்து விட்டபோதிலும் அராபிய நாடோடி முஸ்லிம்கள் பற்றி நூலாசிரியர் குறிப்பிட்டிருந்த ஒரு விடயம் என் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டது.

அராபிய பாலைவனப் பிரதேசங்களில் நாடோடிகளாக வாழும் முஸ்லிம்களிடம் அவர்களுடைய செம்மறியாட்டு மந்தைதான் ஒரேயொரு சொத்தாக இருந்தது. ஆடுகளுக்கு உணவு தேடியவாறு அவர்கள் இடத்துக்கிடம் இடம்பெயர்ந்து கொண்டே இருப்பார்கள். சிலவேளைகளில் பாலைவனத்தில் வீசும் கடுமையான மணல்புயலினால் மந்தையிலுள்ள அத்தனை ஆடுகளும் அழிந்து போகும். அந்த நாடோடி மக்களோ அதனால் மனம் தளர்ந்து விடாமல் இறைவனுக்கு நன்றி கூறிவிட்டு தம் வாழ்க்கையைத் தொடர்வதற்குப் புதுவழி தேடிப் புறப்பட்டு விடுவார்கள் என்கிறார் நூலாசிரியர். மேலும், அந்த மக்களின் இறை நம்பிக்கை பற்றியும், இறைவன் நாட்டப்படியே அனைத்தும் நடக்கும் என்ற உறுதியான நம்பிக்கையின் காரணமாக நடப்பவை நன்மைக்கே என ஏற்றுக்கொள்ளும் அவர்களது மனப்பான்மை பற்றியும் வியந்து குறிப்பிட்டிருந்தார். முஸ்லிம்களிடம் காணப்படும் அற்புதமான மன வலிமைக்கு இந்த நம்பிக்கையே காரணம் என அவர் எடுத்துக்காட்டியிருந்தார்.

வரலாற்றிலே முஸ்லிம்கள் முகம் கொடுத்த பல்வேறு பின்னடைவுகள், தோல்விகள், ஆக்கிரமிப்புக்கள், இனப்படுகொலைகள் போன்றவற்றுக்கு மத்தியில் முஸ்லிம் சமூகம் சிதைவுறாமலும் அழிந்து போகாமலும் இன்று வரை நிலைத்து நின்று வளர்ச்சிப் பாதையில் பயணிப்பதற்கு இறை நாட்டம் பற்றிய முஸ்லிம்களின் உறுதியான நம்பிக்கையே பிரதான காரணமாக இருக்கிறது.

இஸ்லாமிய விசுவாசத்தின் அடிப்படைகளில் ஒன்றாகிய கழா-கத்ர் பற்றிய விசுவாசம் தனிமனித வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் உள்ளத்துக்கு வலுவும் நம்பிக்கையும் ஊட்டும் சாதகமான சக்திமிக்க காரணியாக விளங்குகிறது. "அல்லாஹ்வின் நாட்டப்படியே அனைத்தும் நிகழ்கின்றன. எமது தேவைகளை அவனே நன்கறிவான். அவன் நாடாத வரையில் யாரும் எவருக்கும் நன்மையோ தீமையோ செய்து விட முடியாது" என்ற நம்பிக்கையில் உறுதியாக இருக்கும்போது வாழ்க்கையில் ஏற்படும் எந்தத் தோல்வியும் பின்னடைவும் கஷ்ட நஷ்டங்களும் எம்மை நிலைகுலையச் செய்துவிட முடியாது.

விசுவாசி ஒருவரிடம் கட்டாயம் இருக்க வேண்டிய இந்த நம்பிக்கையும் அதன் விளைவாக ஏற்படும் மனப்பாங்கும் கஷ்டத்தையும் தோல்வியையும் கண்டு துவண்டு போகாத மனத்திடம் உள்ளவராக அவரை மாற்றி விடுகிறது. எங்கு பார்த்தாலும் அநீதியும் அநியாயமும் கஷ்டங்களும் ஆபத்துகளும் சூழ்ந்திருக்கின்ற இந்த உலகில் இறைவனின் எல்லையில்லாக் கருணை மீது நம்பிக்கை வைத்து, அவனிடமே எங்கள் தேவைகளைச் சமர்ப்பித்து, தன்னம்பிக்கையோடு வாழ்வதற்கு கழா-கத்ர் பற்றிய நம்பிக்கை அடிப்படையாக அமைந்து விடுகிறது.

இன்று மனிதர்கள் வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களில் எதிர்காலம் பற்றிய அச்சம் காரணமாகவும் தீராத கவலைகள், பிரச்சினைகள் காரணமாகவும் Depression எனும் கடும் மனத் தளர்ச்சி நிலைக்கு ஆளாகி விடுகின்றனர். சரியான முறையில் பரிகாரம் வழங்கப்படா விட்டால் இந்த Depression ஒருவரை நடைப்பிணமாக மாற்றி அவரது வாழ்க்கையையே சிதைத்து விடக் கூடும்.


"அதிர்ஷ்டமோ துரதிர்ஷ்டமோ, வெற்றியோ தோல்வியோ, இன்பமோ துன்பமோ எது கிடைத்தாலும் எல்லாம் அல்லாஹ்வின் நாட்டப்படிதான் நடக்கின்றன் எல்லாவற்றிலும் அவன் ஏதோ நன்மையை நாடியிருப்பான்" என்ற உறுதியான நம்பிக்கையோடு வாழப் பழகிவிட்டால் வாழ்க்கையில் எதுவும் எங்களை நிலைகுலையச் செய்யாது. அதன் மூலம் நிம்மதியுடனும் உளத் திருப்தியுடனும் நாம் வாழ முடியும். தற்போது உள்ள சிக்கலான, குழப்பங்கள் நிறைந்த சமூக சூழலில் நிலைகுலைந்து போகாமல் நம்பிக்கையோடு வாழ்வதற்கு எமது விசுவாசத்தை தினமும் மீளுறுதி செய்து கொள்வது அவசியம்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தற்போது புதுவரவாக விற்பனையில்...

க.பொ.த. உயர் தர, சாதாரண தர மாணவர்களுக்கானது







# இஸ்லாமிக் புக் ஹவுஸ்

தற்போது வீட்டில் இருந்தவாறே
உங்களுக்குத் தேவையான புத்தகங்களை
ஒன்லைன் மூலம் ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

WhatsApp 077 3171725


www.ibh.lk

075 7400800

நாட்டின் எப்பாகத்துக்கும் விநியோக வசதி உண்டு.

(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# A Grade Recondition Business Class Laptops

# மிகக் குறைந்த விலையில்...

**LATITUDE 3420 INTEL I5-11th Gen**

Intel Core **i5-11310U**, 16GB DDR4 3 RAM, 512GB SSD 14" FHD Cam & Mic, WIFI,BT, 3-cell Battery, Win 10 Pro, PW Adapter

DELL

**LATITUDE 7490 INTEL I5-8th Gen**

Intel Core **i5-8350U**, 8GB RAM, 256GB SSD 14.1" FHD Cam & Mic,WiFi,BT, Win 10 Pro PW Adapter

DELL

**ELITEBOOK 850 G6 I7-8th GEN**

Intel Core **i7-8665U**, 16 GB RAM, 512GB SSD 15.6" FHD Cam & Mic, WiFi,BT, Win 10 Pro, PW Adapter

hp

**LATITUDE 7490 INTEL-I7-8th Gen**

Intel Core **i7-8650U**, 8GB DDR4 RAM, 256GB SSD 14" FHD Cam & Mic, WiFi,BT, Win 10 Pro, PW Adapter

DELL

**PROBOOK 650 G3 INTEL I5-7th Gen**

Intel Core **i5-7440U**, 8GB RAM, 256GB SSD 15.6" HD Cam & Mic,Wifi, BT, Full Kb, Win 10 Pro, PW Adapter

hp

**PROBOOK 650 G3 I5-6th GEN**

Intel Core **i5-6110**, 8GB RAM, 256 GB SSD 15.6" HD,Cam & Mic, Win 10 PRO, PW Adapter

hp

**AIO INTEL core I5- 6th Gen**

Intel Core **i5-6400T**, 8 GB DDR4 RAM, 500GB HDD, 21.5" FHD, Cam & Mic, DVD, Wired Kb & Mou, Win10 Pro

Lenovo

**PROJECTOR PARTS**

Lamp, DMD chip, power supply, lcd, main board, remote, mount screen etc

**LAPTOP PARTS**

Laptop battery, keyboard, power adapter, ram, ssd

* 6 months warranty for all Models (Optional : warranty extend plans)
* Island wide free delivery for laptops

**074 28 53 898**

For more information contact on whatsapp

cyberteklk

Email : cyberteklk@gmail.com

Cybertek

Scan QR for WhatsApp

Advertise Here 076 53 08 509

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DOP/ NEWS/110/2023 Printed by: IPC Printing Press, Colombo